உ

12605

சிவமயம்

# சஞ்சீவிகிரி

அல்லது

# செஞ்சி

—o—

இஃது

செங்கற்பட்டு

நேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

**வா. பி. வெங்கடராம சாஸ்திரியாரால்**

இயற்றப்பட்டது

519

MADRAS.

PRINTED AT THE C. N. PRESS, BRODWAY,

*Registered Copy Right*

To

M. R. Ry.

V. NARAYANASAMI NAINAR AVERGAL,

(LATE) OF JINJI,

*A Gentleman of the kindliest disposition*

AND

*A liberal patron of Dravidian literature*

This work is Dedicated

As a token of high respect and esteem

*By the Author.*

# நூன்முகம்

—:*:—

அருந்தமிழ் அறிந்த அன்பர்களே ! புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்துள் தொண்டைமண்டலமானது வடக்கின்கண் குறுமுனிக்குத் தமிழ் அறிவுறுத்திய பரமாசாரியராகும் முருகக்கடவுளது வரைப்பாகிய திருவேங்கடமும் தெற்கின்கண் பிணாகினி என்னும் தெய்வத்தன்மை பொருந்திய யாறும் குணக்கிற் கடலும் குடக்கிற் பவளமலையும் எல்லையாகக்கொண்டு 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று பாரதியாரின் அபராவதாரமாகும் ஔவையாராற் சிறப்பித்துச் சொல்லும் பெருமிதம்வாய்ந்ததென்பது யான் சொல்லவேண்டுவதின்று. அம்மண்டலத்துள் திருவண்ணாமலைக்குச் சற்றேறக்குறைய இரண்டுயோசனை கிழக்கில் சஞ்சீவிகிரி அல்லது செஞ்சி என்னும் சிறுமலைகளை இராஜதானியாகக் கொண்டு முடிபுனைந்து வாழ்ந்த மன்னவர் பலர். அவருள் இப்போதைக்கு உத்தேசம் இருநூற்றைம்பதியாண்டிற்கு முன்னம் சிற்றரசனாய் ஐந்தேயாண்டு முடிபுனைந்து நீதிபுரிந்த [1] **தேசிங்கு** என்னும் மன்னவன் சரிதையை முன்னம் சிறைச்சாலையி லிருந்த புலவர் திலகமாகிய புகழேந்தியார் வனிதையர்க்கென்றே இயற்றியருளிய புலந்திரன்களவு அல்லியரசாணிமாலை முதலிய நூல்களோடொத்து முன்பின்னின்றிக் 'காசிக்குச் சென்றான்

---

[1] இவன் இயற்கைப்பெயர் ஜயசிங்கு என்பது. அது மரூஉ மொழியாகித் தேசிங்கு என்று வழங்கிவந்ததாகலின் யாவரும் தெரிந்து கொள்ளுமாறு அப்பெயரினையே எடுத்தாளப்பட்டது.

காவடி கொணர்ந்தான்' என்னும் பான்மைத்தாய்த்
தேசிங்குராஜன் கதை என்னும் பெயர்புனைந் தொழு
திப் புகழேந்தியார் இயற்றியது என்று அவர் மீதே
சுமையை இறக்கியுள்ள புத்தகம் ஒன்றே இப்பொ
ழுது கேவலம் பாமரர்களுக்குமாத்திரமே உபயோக
ப்படுமாறு உலாவிவருகின்றது. இது நிற்க, அச்செ
ஞ்சியைச் சார்ந்த செட்டிப்பாளையம் என்னும் சிறுப்
பதியில் 'கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி' என்று
தொண்டைமண்டல சதகத்தில் படிக்காசுப் புலவரா
லும் 'என்றும் காப்பாரே வேளாளர்காண்' என்று
ஔவையாராலும் புகழ்ந்துரைக்கும் பெற்றிமேற்கொ
ண்ட பூவைசியர் என்னும் சைவ வேளாளர் மரபின
ராய்க் கல்வி, கருணை, கொடை முதலிய நல்லிலக்க
ணம் பலவும் நிரம்பிய **வே. நாராயணசாமி நாயனார்** என்
பவர் 'உலகமெங்கணும் தம் பெயர் நிறுத்திக் தொண்
டைமண்டல முழுதிற்கும் தாமே அதிபராய்ப் பன்
னெடுநாள் அரசுசெலுத்தி அரிய பெரிய கட்டடங்
கள் அனந்தமியற்றிய அணிமுடி மன்னரது அகன்ற
சரித்திரமியாவும் 'தான் றேடாப் பொன்னுக்கு மாற்
றுமில்லை உரையுமில்லை' என்னும் பான்மைத்தாய்ப்
பழுதுபட்ட கட்டடங்களையும் புதுக்கக்கருதாது 'பூவி
ற்ற கடையில் புல்விற்பார்' போன்றிருந்த தேசிங்கு
மன்னன் சரித்திரத்தைப்போல் முன்னுக்கு வாராது
மூலையில் ஒளித்தல் முறைமையன்றே, என்று எடுத்து
க்கொண்ட நன்முயற்சியாற் கிடைத்த [1] சமாபுரி அரு
ணாசல சாஸ்திரியார் வீட்டு வடமொழியும் தமிழும் வி

---

[1] இது இக்காலத்தில் செவலபொறை என்று வழங்குகிறது.

விக்கத்திய ரூபமாய் எழுதினாரிவரென்றும் அறிய முடியாத ஏட்டுப்பிரதியொன்றை எனக்குக் காட்டினார். யான் அதைப் பார்வையிட்டதில் 'முன்னூலொழியப் பின்னூலாருள் எந்நூலாரும் நன்னூலாருக்கிணையோ' என்று இலக்கணக்கொத்து நூலாசிரியரால் புகழ்மொழிபடைத்த பவணந்தியார் இவ்விலக்கியத்திலுள்ள பத்துக் குற்றங்களையும் ஒருங்கே கண்ணுற்ற பின்புதான் தானெழுதிய நன்னூற் பாயிரத்துள் 'குன்றக்கூறல்' என்ற சூத்திரம் செய்ததாகத்தோன்றிற்று; இவற்றுடன் சரித்திர முரண்களும் பல; வேறே பிரதி கிடைக்காமையினால் இவ்வொன்றை வைத்துக்கொண்டு ஆங்காங்குப் பாழ்ப்பட்டிருக்கும் கடவுட் கோட்டங்களிற் காணப்படும் கல்வெட்டுகளைப் பரிசோதிப்பதில் சின்னாள் செலவிட்டேன். இத்துடன் செஞ்சியைச் சார்ந்த சிறியசிறிய பதிகள்தோறும் சென்று இனாம் தானம் முதலிய நிமித்தங்களுக்காக ஏற்பட்டிருக்கும் தாமிரப் பட்டயங்களையும் ஆராய்ந்தேன். சுருக்கிச்சொல்லின் இவ்வாராய்ச்சியில் மும்மதி பிறந்தது. காலக்கழிவில் சிறிதும் பிரியமில்லாத அந்நாயனார் 'கிடைத்ததைக்கொண்டு ஒருவாறு திரட்டி முதற்பதிப்பு வெளியிட்டுவிடின் சாசனம் கல்வெட்டு முதலியவற்றை இன்னம் செவ்வனே ஆராய்ந்து மறுபதிப்பில் விவரமாய்க் கூட்டலாம்.' என்று வற்புறுத்தினமையின் என் முயற்சியை ஆங்ஙனே மட்டுப்படுத்தி இம்முதற்பாகத்தை மாத்திரம் இப்பொழுது வெளியிடலாயினேன். என்றாலும், ஆங்கு அரியணையேறிய அரசகேசரிகளின் சரித்திரங்களில் முரணி

ன்றி நடப்பவற்றைமாத்திரம் இதிற்சேர்த்துளேன்.
இரண்டாவது பாகத்தில் இதில் வாராதொழுகிய சரி
த்திரங்களையும் மற்றும் அதற்கு இன்றியமையாத விஷ
யங்கள் பலவற்றையும் சேர்த்துத் திரட்டி வருகிறேன்.
விரைவில் வெளிவரும். ஈதிங்ஙனங்கிடப்ப, முன்னம்
இலங்கைக் கோமான் மகன் இந்திரசித்து என்பான்
சமர் முகத்திற்செலுத்திய பிரமன்கணையின் பெரும
யக்கொழிய தாசரதி கட்டளையின்மீது மருத்துமலை
யைப் பெயர்த்துக்கொணர்ந்த வாயுகுமாரர் மீட்டும்
அதனை இருந்தவிடத்திற் சேர்ப்பான் எடுத்துச் செல்
கையில் தொண்டை நாட்டிற்கு நேராய் அகிலம் வல்
லானொருவன் அமலநாதனது திருவருட்பாங்கின் வண்
ணம் அதன் கற்றுளிகள் நான்கு நிலத்தில்விழுந்து சிறு
மலையாயின. அவை முறையே கோலாசலம், இராஜகிரி,
கிருட்டினகிரி, பந்தனகிரி என்று பெயர்பெறும். அவ
ற்றுள், கோலாசலம் என்பது பாந்தட்பள்ளியானுறும்
அரங்கநாதரைத் தன்னிற் பொருந்தி விளங்கும் பெற்
றிவாய்ந்தது. பின்னது படிகமூர்த்தப் படிவுடன்
எழுந்தருளிய விசுவநாதப் பெருமானுக்கு ஆலயமா
யதுடன் நீதிநடத்தப்படும் இராஜசபையினையும் தன்
னிற் பொருந்தியது. கிருட்டினகிரி, பாரதயுத்தம்
முடித்தருளிய வாசுதேவன் தங்கியிருக்க இடமான
துமன்றி அரசவையுமாயது. அவ்வரசருட் சிலர் வளர்
பிறையினும் தேய்பிறையினும் இவ்விரண்டு வேத்த
வையிலும் முறையேயிருந்து நீதிபுரிந்ததாகவும் மற்
றும் பின்னிட்டோர் சிலர்க்குக் கிருட்டினகிரி யொ
ன்றுமாத்திரமே அரசவையா யிருந்ததாகவும் காண்

கிறது. சஞ்சீவிகிரி என்னும்பெயர் வழங்குதலானது மருத்துமலையினின்றும் சிதறி வளர்ந்த காரணங்கொண்டுதான். இணைந்திருக்கும் அவற்றிற்குச் சிறப்பில் வெவ்வேறு பெயரிருக்கினும்பொதுவாய்ச் சஞ்சீவிகிரி என்றே வழங்கப்படும். கிரிபுரிஎன்னும் சிறப்புப்பதம் இரண்டையும்நீக்கிப் பொதுவாயுள்ளசஞ்சீவி என்பது தான் நாளடைவில் மரூஉமொழியாகிச் செஞ்சி எனத் திரிந்ததுபோலும்; ஆங்கு அரியணையேறிய அரசகேசரிகளின்சிறப்பிற்கு அரங்கநாதப் பெருமானும் விச்சுவநாதப்பெருமானுமே முதற்காரணமாகலின் அப்பண்டைக்காலத்துப் சஞ்சீவிகிரிஎன்றேவழங்கிவந்ததாய்க் கல்வெட்டுகளினல் தெரிய வருகிறது. ஆயின், சஞ்சீவிபுரி என்பது இல்லையோவெனில் அதுவும் உண்டு தான். அக்கிரியின்கண் அரசுநடத்திய அணிமுடி மன்னர் சரித்திரத்தினையே யான் கூறத்தொடங்கினமையின், சஞ்சீவிகிரி என்றே இப்புத்தகத் திற்குப் பெயர் புனையலாயினேன். அவ்வொண்மலைச் சார்பில் இப்பொழுது அழிந்தும் அழிந்துகொண்டும் அழிவதுமாய்க் கிடக்கின்ற கடவுட்கோட்டம் திருக்குளம் முதலியவற்றையும், பருப்பதத்தின்மேல் மிகவும் வேலைப்பாடாய்ப்புனைந்து தேய்பிறையாகிவரும் கட்டடம் சுனைமுதலியவற்றையும் ஒருங்கே நோக்குவார் இரும்பாற்கொண்ட நெஞ்சத்தாராயினும் ஒருமுறை அழாது திருமபாரென்பது வியப்பன்று. இதுநிற்க, அத் தொண்டை நாட்டார்க்குத் தொன்றுதொட்டுத் தங்களைநடத்திய தோன்றல்களின் சரித்திரத்தை ஒருங்கே விளக்குவிக்கும் இன்றியமையாப் பெருஞ்சிறப்

பினதாகிய இந்நூலைப் பத்திய ரூபமாய்ச் செய்யின், நிகண்டு கற்று இலக்கண நூல்களிற்பயின்ற பண்டிதர்களுக்கேயன்றி மற்றையோர்க்குச்சிறிதும் பயன்படாவாதலின், கற்றோர் மற்றோராகிய இருதிறத்தவர்களுமெளிதிற் றெரிந்து களிப்படையும்வண்ணம் பெரும்பான்மை இயற்சொற்களும் அவசியமான விடங்களிற் சிறுபான்மை திரிசொற்களும் பிறசொற்களும் பிரயோகிக்கப்பட்ட கத்திய ரூபமாய் ஒருவாறு சுருங்கத் திரட்டி இயற்றியுள்ளேன். மாந்தற்கு முக்குணமும் மாறி வருவது இயற்கையாதலின், இதில் என் சிற்றறிவிற்குப் புலப்படா தொழுகிய முக்கியமான அரிய பெரிய விஷயங்களைப் புத்தகம் கண்ணுறும் அன்பர்கள் எனக்கு அறிவிப்பாரயின் மறுபதிப்பில் அவர் பெயருடன் அந்நன்றியறிதலை விளக்கி வெளியிடச் சித்தமாயிருக்கிறேன்.

ஒன்றுக்கும் பற்றாச் சிறியேனை இத்தகைய விஷயங்களிற் றூண்டி இத்தொடங்கிய காரியத்தை நிறைவேறச் செய்தருளியதுபோல் இனித் தொடங்கும் பலவற்றையும் இனிது நிறைவேற்றுதற் பொருட்டுத் திருவருள் சுரக்கும்படி எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய இறைவனது திருவடித் தாமரைகளை அனவரதம் பிரார்த்திக்கின்றேன்.

☞ இங்ஙனம், வா. பி. வே.

உ 12605.

சிவமயம்

# சஞ்சீவிகிரி.

## அதிகாரம் 1.

"ஆ! என்னவிந்தை!! இப்பெருநகர்ப் புகுந்து பத்து [1] வைகலாயும் சோலை இங்கிருப்ப தறிந்திலோம். பந்தர் வேய்ந்தாலொப்ப எங்கணும் பரந்து இருள் மூடிய இளங்கிளைப் பச்சிலைகள் காற்றில் சிறிது சிறிது அசையுந்தோறும் [2] மித்திரனாது மெல்லிய ஒளிக்கதிர்கள் இடையிடையே தோன்றிமறைவது மழைநடுவில் தோன்றும் மின்னற்கொடிகளை நிகர்க்கின்றன. தரையில் உதிரும் [3] உணங்கன்மலர்களும் துளிக்கும் பூந்தேன்களும் மேகத்தின்றொழிலை [4] மானுகின்றன. புதுமழை பொழிதலின் [5] பணியூற்றத்தால் எம்மருங்கும் பேரிரைச்சலிட்டுழலும் உழவர்களையொத்துக் களிவண்டுகள் இசைபாடிச் சுழலாவிருக்கின்றன. பூங்கொடிகள் பருந் [6] தருக்களைப் பின்னிப் பிணைந்து நின்றது அன்பர்களை இறையும் பிரியாமல் இறுகப்புல்லிய குலமங்கையர் போன்றும், குயிலாதிய புட்களினது கூரியமூக்குகளினாற் பிறப்பட்ட வடுத்தளிர்கள் அவ்வன்பராற் செய்யும் பற்குறி நகக்குறி என்னும்

1. நாள், 2. சூரியன், 3. வாடியபூ, 4. ஒத்திருக்கின்றன. 5. வேலைமிகுதி, 6. மரம்.

அடையாளங்கள் போன்றும், சிறந்துபொலிகின்றன. நம் பதி துறந்ததுமுதல் கழிந்தவைகளில் இன்றொன்றே பயனுடைத்தென்னலாம்; இத்துணையேற்றம் வாய்ந்த இச்சோலையின்கண் ஒருவரும் வாராதிருப்பதனால் அரசகுமாரிகள் விளையாடுதற்குரிய காவற்பூஞ்சோலை போலும்; என்றாலும், தேசாந்திரியாய நமக்கு யாதாயின் என்னை?" என்று, அவ்வரண்சோலையினூடு உலாய்ப்போதுகையில் ஆங்குள்ள ஒரு [2] மாதவியின்கீழ்க் கொடிவீட்டில் யாவரோ இருவர் வசனிப்பது கேட்டு அஃதின்னதென்று அறியும் ஆசைமீதூர [3] அண்மையிற்சென்று ஓர் பூம்புதரில் ஒளித்திருப்புழி, அவன் செவிக்கெட்டிய மாற்றம்இது.

"இன்று என்தந்தையார் கூறியதை யோசிக்கின், நீ சீக்கிரத்திலேயேதக்கமணாளனொருவனைப் [5] பெறுஇற்பை யெனத்தோற்றுகின்றது."

"அதெப்படி?"

"அரையருக்கு வரவரப் பிரபஞ்ச வியாபாரத்தில் நிமிடமும் யுகமாய் நீடித்தலால் அலுப்பும், எங்கேனும் ஏகாந்தமாய் நாள்கழித்தலில் மிகுந்த உவப்பும், சிறுபான்மைநடந்ததை நினைக்குந்தோறும் உள்ளத்தில் [6] உதைப்பும், உதிக்கின்றனவாம்."

"அதற்காக?"

"உனக்குச் சீக்கிரம் ஆண்மையிற்சிறந்த ஓர் அரசகுமாரனை மணாளனாக்கித் தானிதுகாறும் பரித்துவ

---

1. அக்காவற்பூஞ்சோலை. 2. குருக்கத்திமரம். 3. சமீபம். 4. சொல். 5. அடையாய். 6. கலக்கம்.

ந்த இராஜியபாரச் சுமையை அன்னான் றலையிருத்தித் தான் விடுதலை பெறுமாறு சிந்தித்துளராம்."

"உலகில் பெண்ணாய்ப் பிறத்தல் மிகவும் ஏழைமைத்தே."

"அதேனப்படி மொழிகின்றனை? மாணிக்கம் பொற்பதக்கத்தின் நடுவில் துன்றுமாறு, அறிவாதிய நிரம்பிய அன்பரால் அரிவையர் மேன்மையுறுகின்றனர்."

"அதுசரிதான்; [1] பாந்தளிடத்துள்ள பருமணியாயின் செய்வதென்னை? தன்னில் எத்துணை ஆற்றவிருக்கினும் காட்டிற் காய்ந்த நிலாப் போன்று [2]வாளாவிருக்கவேண்டியன்றோவுள்ளது?"

"அதென்ன ! அரசுரிமைக்கு வருகின்றவரை ஆராய்ந்தன்றோ நியமிப்பார்கள். அச்செயலினையும் என்றந்தையர்தாம் மேற்பூண்டுள்ளராம்."

"நான் அதற்காகச் சொல்லவந்தேனில்லை; இவையெல்லாம் இறைவன் திருவருட்குறிப்பினை ஏற்குமல்லது நம்மாற் செய்யத்தக்கனவன்று. உலகத்திலோ ஒன்றைநினைக்கின் மற்றொன்றைக் கைவிடவேண்டியிருக்கிறது. அழகுறின் குணமின்று, குணமுறின் ஆண்மையின்று. இம்மூன்றும் ஒருங்கேயிருக்கின் குலப்பிறப்பின்று; நாம் ஆராயப்புகின் எங்கும் இத்தன்மைத்தே. ஆதலின் கிடைத்ததைக்கொண்டு மணவமைதியுறலே மேன்மை" என்று இவ்வண்ணம் கூறி

1. பாம்பு. 2. சும்மா

ளாய் அக்கொடிவீட்டைப் புறத்தேநீத்துப் பூக்கொய்வான் சென்றனர்.

ஒளிந்திருந்து அவர்கூற்று ஒவ்வொன்றையும் வேதவசனமாக்கருதிக்கேட்ட அரசகுமாரன் வெளிவந்து இருவருள் ஒருத்தி அரசன்மகள் என்றும், மற்றவள் மந்திரிமகள்என்றும், அரசனுக்கு முடிக்குரியார் ஒருவருமில்லை என்றும் நிதானித்தறிந்து, அரசகுமாரியது மிருதுமதுர [1] பாஷணங்களில் நீர்மை திரிந்து நிலைகுலைந்த நெஞ்சத்தானாய் வேறொரு நெறியாய் முன்னம் கண்டறியாத அச்சோலையின் மற்றும் பல்வகைப் புதுமைகளையும் நோக்குற்று [2] அறுதியில் ஆங்கிருக்கும ஓர் மகிழ் மரத்தடியில் விடாய்தணியும்பொருட்டு மெத்தையினைப்போல் கீழே உதிர்ந்து கிடக்கும் மலர்களின் [3] அரணிப்பைக்கண்டு, ஆங்ஙனே ஒருசார் இருந்தனனாய்ப் பூத்தொழிலில் தனக்குள்ள கைம்முதிர்ச்சியால் பொழுது கழிவிற்காகத் தன்னைச் சுற்றிலுமிருக்கும் மலர்களால் நிகழ்ந்தவற்றை நினைந்துகொண்டே மாலையொன்று [4] புனைவானாயினன்.

முன்னம் பூப்பறிக்கும் வேலையிற்சென்ற அரிவையரிருவரும் பழவினை ஏவுதலினால் அறுதியில் பூப்புனையும் பணியூற்றத்தால் தரையைநோக்கிய வண்ணமேயிருக்கும் "முருகக்கடவுளன்ன" மாண்புடையானைக் கண்டார்கள். பிறந்ததுமுதல் இதுகாறும் அத்தகையானைத் தாங்கள் கண்டிலராதலின் கூச்சு

1. வார்த்தை. 2. கடைசியாக. 3. அலங்காரம். 4. தொடுப்பவனானான்.

ற்ற மனத்தினராய் "அம்மவோ! இத்திப்பியபுருடர் அரிவையர் மனம் கவரும் அனங்கனோகொல்? இவ ரைக்காணக் கிடைத்தமையின் நம் நாட்களுள் இன் றொன்றே பயனுடைத்து. பிரமனாது படைப்பின் வேறுபாட்டை அறிவாரியாவர்? நம் வருகையை இவரறியாவண்ணம் இவ்விடத்தில்மறைந்திருந்து என் னசெய்கிறார் என்பதைச் சற்றுகவனிப்போம்" என்று அங்ஙனமே செய்தாராய் இதனைச்சொல்லலுற்றனர்.

"மாலை தொடுத்தலில் இவருக்கு எவ்வளவு கை வன்மையுளது பார்!"

"ஆயினும் சிறிது மனத்தாங்கலுள்ளனர் போ லும்; அதுவுமின்றேல் இன்னம் செவ்வனே தொடுக் குகிற்பாரென நினைக்கிறேன்."

"அப்பொழுது அணிதற்கு நாமுரித்தன்று, வா னர மகளிர்தாம் வேண்டும்."

"சற்று நிறுத்து. என்னவோ சொல்லுகிறார் கேட்போம்." என்று நிற்றலும், அரசகுமாரன் முற் றும் சிதறிய சிந்தையனாய் "மனமே! நீ விரும்பிய பொருள் உனக்குக்கிடைத்தல் எளிதன்று. எளியரை ப்போன்று நடை உடை வேறுபட்டுத் தேசாந்திரி யாகும் உனக்கும் உன்னாற்காமுறும் பொருளுக்கும் எவ்வளவுதூரம் என்பதை யோசிக்கிலே; சிறிதும் பழ க்கமில்லாத அவ்வஞ்சியிடம் முறையிடினும் அப் பொற்கொம்புபோல்வாள் உனக்கு அபயமளிக்கின ன்றோ சுகமுறுவை. கைகாள்! நீவிர் ஏற்றுக்கொ ண்ட சிரமத்திற்கு நும்மால் புனையப்பட்ட இம்மாலை

அந்நங்கையர்க்கரசியின் இளங் குயங்களிற்படியப் பெறினன்றோ பயனுடைத்து" என்று பெருமூச்சுடன் சிறிது குறைவாகிய அத்தொடுத்தமாலையை முடித்துக் கொண்டிருந்தான்.

இதற்குள் அரசகுமாரி: "சகி! உயர்குலத்தினராயும் வினைவலியால் உருமாறியோர் என்றும் அவர் வசனமே புலப்படுத்துகின்றது. 'குப்பையிற் சேறினும் குன்றிமணி நிறம்போகா' என்பதற்கொப்ப இம்மாறுபாட்டினும் சாந்தமும் கருணையும் சிறந்து விளங்குகின்றன பார்; நான்— "

"நீ காமுறுதல் சகஜமே. அன்னப்பேடு மலர்ச்சேக்கையன்றி மற்றெதை விரும்பும்?"

என்றலும், அரசகுமாரி சினந்தவள்போல் முகத்தைச் சுளித்து, "ஆனால் யான் அவரை விரும்பினேனோ?" என்று சொல்லுவதற்குள்ளேயே அவளது இரண்டு விழிகளும் அரசகுமாரனைச்சாய்த்துநோக்கின; மேனியெங்கும் முத்து முத்தாய் வியர்வையரும்பின; மெய்ம்மயிர் சிலிர்த்தன; நாத்தழுதழுத்தது; இவ்வகையகுறிகளை ஒருங்கேகண்ட உயிர்ப்பாங்கி, புன்சிரிப்புடன் "எனதரிய இராஜகுமாரி! நீ ஏன் அப்படிக்கோபிக்கின்றனை? நம் நாட்டில் தொடுத்தற்கரிய கைவினையமைந்த மகிழ்மாலையைக்காமுற்றனையென்றால் பிசகென்னை?"

(பெருமூச்செறிந்துகொண்டே) "கிட்டாப்பொருளிற் காமுறுதல் பிசகன்றோ" ?

"அவர் அப்படிக் கருணையற்றவராகத் தோற்ற வில்லை. அதனிலும் நீ கோறினை என்றால் அன்புடன் அளிக்க உடன்படுவார்."

"வேறொருத்தையலால் பறிக்கப்பட்ட மனத்து டன் புனையும் சரத்தை நாம் கோறுதல் எத்துணை மதியீனம்"

"இரு! இரு!! அவர் என்னவோ சொல்லுகிறார்? என்றலும், அரச குமாரன் "ஏ! கொடிவீடே! அச்சீமாட்டியார் தங்கியிருக்கப்பெற்றனையாதலின் இவ்வுலகில் நீயே பாக்கியசாலி;— மனமே! நீ நல்ல நிலையிலிருக்கின் இவ்வரசனே உன்னை வலிய வேண்டுவன். இப்பொழுது அதை நினைத்தலும் [1] இளிதகவே" என்று சொல்லிக்கொண்டே தொடங்கியமாலையை முடித்தான்.

உடனே உயிர்ப்பாங்கி "எனது அரியசகி! மூர்த்தியான்சொன்னதற்குச் சினந்தனையே! இப்பொழுது என்ன சொல்லமாட்டுவாய், நின் பொருட்டே—" "சரி, எப்பொழுதும் உனக்கு என்னைப்பரிகசிப்பதென்றால் சந்தோஷம்தான். வீட்டிற் சேகலாம்வா."

உயிர்ப்பாங்கி (புன்முறுவலுடன்) "உனக்கென்றேதொடுத்த பூஞ்சரத்தைத்தரித்து மகிழெய்தாமல் வாளா அகலல் உரித்தன்று. இங்கிரு; யான் போய் வாங்கி வருகிறேன். அது அவருக்கும் சற்று ஆறுதலாயிருக்கும்—."

"பொறு! பொறு!! அவரைப்போய் என்னவென்று கேட்பது?"

---

1. வெட்கக்கேடு.

“அவரும் நினக்கென்றே தொடுத்துளர்; நீயும் அதன்மேல் விருப்பங்கொண்டனை. இடையில் நான் போய்க்கேட்பது ஒரு பெரியகாரியமா?” என்று ஞெரேலென அங்கிருந்தும் வெளிவந்து, ‘கனவிற் கண்டது நனவிற்கிட்டிய தொப்ப’ அரைசகுமாரன் எதிரே வந்துநின்றாள். நினைவு நிறைந்த நெஞ்சுடையோனான அம்மன்னவன்மகன் திடீரென எதிரிற்றோன்றும்அம்மாதரசியைக்கண்டு நெஞ்சம்துணுக்குற்றவனாய்ப்பரபரப்புடன் விலகியிருந்த ஆடையைத்திருத்திக்கொண்டு எழுந்துநின்றான். உடனே அந்நங்கையர்க்கரசி “ஐயன்மீர்! கண்ணைக்கவரும்வனப்புடன் தாம் மிகவும் விசித்திரமாய்த்தொடுத்துள்ள(இப்புஷ்பசரம்) எனது அரியஇராஜகுமாரியின் மனதைக்கவர்கின்றது. கைவினைபலவும் நிரம்பிவனப்பிற் பொலிந்து [1]மல்கும் இத்திப்பியமாலையினை அவள் தனது கண்டத்தில் அணிந்துகொள்ள மிகவும் பிரியப்படுகிறாள். மனமலர்வுடன் அன்னாட்கு அளிக்கின் இதனிமித்தம் எடுத்துக்கொண்ட தமது பிரயாசை இனிதாறும்” என்றாள். உடனே அவ்விளங்காளை மனங்களித்தவனாய் “பூங்கொம்பன்னாய்! நினது அரிய இராஜகுமாரியினையும் நின்னையும் இன்றொன்றறிய வாஞ்சிக்கிறேன்” என்ன, “பெரும! அவள் இப்பட்டினத்தரையர் சாந்தவர்மாவின் ஏகபுத்திரி; ‘வாசந்திகைப்’ பெயரினாள். யானோவெனில், முதன்மந்திரி சத்தியகீர்த்தியாரின் புதல்வி; என்னை வசுலக்ஷ்மி என்று எல்லோரும் அழைப்பார்கள்” என்றாள். அதைக்

1. நிறையும்.

கேட்டதும் அவ்விளந்தோன்றல் மிகவும் வினைப்பா டாய்ப்புனைந்த அம்மகிழஞ்சரத்தைப் புன்முறுவலு டன் அவளிடம் அளித்தான். வசுலக்ஷ்மியும் அதனை ஒரு பெரியவெகுமதி என வணக்கத்துடன் பெற்று வாசந்திகையிடம் கொடுத்தாள். அரசகுமாரி அதை இரண்டு கருவிழிகளிலும் ஒற்றி முத்தியிட்டுத் தன து மார்பிற்கு அணிகலனாகத்தரித்ததும், வசுலக்ஷ்மி "எனது அரியசகி! சீக்கிரம் கருதியது பெறுவை யாக; பொழுதாயினமையின் அரண்மனைக் கேகலாம் வா" என்றாள். உடனே வாசந்திகை வசுலக்ஷ்மியுடன் வெளிவந்து இரண்டு மூன்று நிமிடங்கா றும் அரசகுமாரனைச் சாய்த்துநோக்கினளாய் அர ண்மனைக்குச் சென்றனள். மன்னவன்மகன் மின் னற்கொடிபோல் தோன்றிமறைந்த அரசகுமாரி யின் புன்முறுவலானும் கடைக்கண் நோக்கினானும் இருந்த கொஞ்சம் அறிவையும் இழந்தவனாய்[1] எவ் வழிச் செல்வதென்றும் குறியாது உன்மத்தனைப் போன்று மனம் போனவாறே பூங்காவினைத்துறந்து புரத்தில் நுழைந்தான். கதையைக்கண்ணுறும் நமது அன்பர்கள் அரசகுமாரனை இன்னானெனக் கண்ட றிய ஆசைப்படுவோர்களாதலின் அதனை அடுத்த அதி காரத்தில் விளக்குவாம்.

1. இவ்விடம்

## அதிகாரம் 2.

பராக்கிரமம் பொருந்திய * பசுங்கதிர்க்கடவுள் பெருமரபினராகும் பிரபலந்த மகாராஜர் ஆணை உலாய்வருவது பெரும்பாலும் காசிப்பட்டினமும் அதனைச்சார்ந்த நாடுகளுமே. அவற்றிற்கெல்லாம் காசியம்பதியே இராஜதானி. அது உலகத்துள்ள சமயபேதிகளாகும் மனிதர் அனைவரும் ஒருங்கே தங்கியிருக்கும் ஏற்றம் வாய்ந்ததுடன் மிகவும் நெருங்கின ஜன அடர்த்தியைக்கொண்டது. தெரு, சந்தி, சதுக்கம், மன்றம், பொதியில், ஆவணம், ஆகிய இவ்விடங்களில் பல்வேறு[1] பாடைமாக்களும்[2] குழுமிப் பேசுதலானது மொத்தத்தில்கேட்போர்க்கு இன்னதென்று அறிதற்கு அரியவாகிஎன்றும் பேரொலி அறாதனவாய்ச்சிறக்கும்[3] விழவு அறாதனவாகிய வீதிகளில் எழிற்பரிபூண்டு இந்திரவிமானங்கள் என்னத்தக்கவிரதங்களில் [4]இந்திரையும் [5]எழிலிவண்ணனும் இயைந்திருந்தது போன்று, நல்லிலக்கணம் பலவும் நிரம்பிய ஆடவரும் அரிவையரும் அணியணியாய் ஊர்ந்து எம்மருங்கும் சாரிகையிடுவார்கள். மற்றும் காண்போரது கண்ணையும் கருத்தையும் ஒருங்கேகவரும் கைவினை பலவும் நிரம்பி, பூ, பட்டு, பருத்தி, [6]கிடை, மயிர், உலோகம் ஆகிய முதற்கருவிகளினால் தொழில் பலவற்றைப் பெருக்கித்துகள்தீர் சிறப்பினவாகி ஒளிரும் வேறுபாடமைந்த [7]விழுப்பொருள் அனைத்தும்

---

* சந்திரன்.

1. பாஷை. 2. கூடி. 3. உற்சவம். 4. இலக்குமி. 5. மகாவிஷ்ணு. 6. சடை. (இது கிடை என்பதின் மரூஉ) 7. சிறந்த.

ஆங்கு ஒருங்கே காணலாம். புதிதாய் வரும் பரதேசிகளைக் கைகாட்டி அழைப்பனபோன்று மேகமண்டலங்காறும் உயர வெழுப்பிய எழுநிலை மாடங்களில் தூக்கியுள்ள பலவகைக்கொடிகள் காற்றில் எப்பொழுதும் அசைந்து ஆடிக்கொண்டிருக்கும். மற்றும் விருந்தினர்க்கு அமுதூட்டும் [1]ஓதனச்சாலை, இன்றியோர்க்கு இருங்கடனுதவும் [2]மாதனச்சாலை, அந்தணச் [3]சிறார்கள் அன்புகொண்டுறையும் [3]அருமறைச்சாலை, இரப்போர்க்கு இல்லையென்னாது அளிக்கும் [4]எழிலறச்சாலை, அரும்பொருள் ஐந்தும் அணிபெறத்தேக்கி, [5]அருத்தியில் வந்தார்க்கு, [6]வெறுக்கைக்கு மாற்றும் வர்த்தகச்சாலை, ஆடலும் பாடலும் அமைவுறக்காட்டி நாடகம் நடத்தும் [7]நிருத்தனச்சாலை, கசடறக்கற்கும் [8]கலைபயில்சாலை, நின்றுபிரசங்கிக்கும் நிலைதெரிசாலை, அமைவனவாங்கும் [9]ஆயங்கொள்சாலை, நிலையறமோங்கும் நியாயங்கொள்சாலை, முதலிய அறச்சாலைகள் பிறவும் நிரம்பிப்பொலிதலையுடையன. பலத்தபடைகள் ஓரியாண்டுகாறும் தாக்கினாலும் [10]இம்மியும் எழில்குலையாத உறுதியுடைத்தாகும் மதிற் சுவர்களானும் பாதலமட்டும் ஆழ்ந்துயர்ந்து நீர்ப்பெருக்குளதாம் கிடங்கினானும் குறையாத ஆயுதங்களானும் சிறந்திருந்தது. அவர் ஆணை செல்லும் நாடுமுழுவதும் தன்னில் படிந்தார் பாபங்களைப்

---

1. அன்னசத்திரம். 2. பாங்கி (Bank) 3. சிறுவர்கள். 3. வேதபாடசாலை. 4. தருமசத்திரம். 5. ஆசை. 6. பணம். 7. நடனசாலை. 8. ஸ்கூல். 9. சுங்கம்வாங்குமிடம். 10. கொஞ்சம்.

பற்றறத்தொலைக்கும் பெருமிதம்வாய்ந்த நதியரசாகும் கங்கையினது நீர்வளத்தால் செழித்துவிளையும் நெல் முதலிய தானியங்கள்யாவும் அங்குள்ளார் சில விற்குக்கண்டுமிகுந்ததை வெகுவெகுதேசங்களுக்கு அனுப்பப்படும். பூமகளது நேத்திரத்தானமாகும் அப்பெரும்பதியினை அறுதியாகச்சுருக்கிச்சொல்லின் மற்றெல்லாத் தேயங்களுக்கும் அது [1] நுதலிற்றீட்டும் திலதமே. மனிதனுய்ப்பிறந்த ஒருவன் இகத்தில் நுகரத்தகும்போகம் அனைத்தினும் அப்பெருநகராளும் பிரபலந்தமன்னருக்கு ஒன்று நீங்கலாகமற்றெல்லாம் ததும்பிப்பொலிந்தனவென்றே சொல்லலாம். அக்குறைவுமெளிதன்று. அஃது எவற்றினும்முதற்கண்ணதாகியமக்கட்குறையே. அவ்வொன்றும்பசுமரத்தாணிபோல அரசர் உள்ளத்தில் உறுதிடாயது. காண்போர் பலர்க்கும் குறையுள்ளாரென்பதை 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்பதுபோல வதனம் தெளிவாய் விளக்குகிற்கும். நெடுங்காலம் சிங்கச்சேக்கையிற்பொலிந்து குடிகளுக்குச் செய்யத்தகும் நன்மையாவும்விடாதுபுரிந்தார்; நம்நூல்களிற் கூறியபடி எல்லாத்தருமங்களையும் இயற்றினர்; அவர்மனது கடவுள் கருணையை எதிர்பார்த்துப்பார்த்துவேசாறியது. என்செய்யலாம்! இது மனிதராகிய நம்மால் நீக்கற் பாலதன்றே. அனைத்துள்ளும் அமர்ந்துகாக்கும் அமலன் ஒருவனது திருக்குறிப்பினை ஏற்கும். அறுதியில் ஏதோ ஒன்றை நினைத்து ஒருநாள் தனது ஆணைக்குள்ளாகும் குடி

---

1. நெற்றி.

கள் யாவரையும் ஒருங்குவரச்செய்து உரித்தான மரியாதை யாவும் செய்யப்பட்டதன்மேல் அரசர் இது சொல்வாராயினர்.

"அடக்கமும் அன்பும் வாய்ந்த எனதருமைக் குடிகளே! உங்கள் தயவால் யான் இச்சிங்காதனமேறி நெடுங்காலம் அரசுசெலுத்தியும் மக்கட் பேற்றினைமாத்திரம் இதுகாறும் அடைந்தேனில்லை. இங்கிருந்து கொண்டே அதனைப்பெறுதற்கு அரிய நோன்பு பல வியற்றியும் திருவருள் கூட்டிவைத்ததின்று. ஆதலின் இருத்தற்கு அரிதாகும் இவ்வழூஉச்சடலக் கோட்டையை நரையாதியகர் நாற்புரமும் வளைவளைந்து நெடுஞ்சமர் விளைத்துத் தமதாக்கிக் கொள்ளுமுன் வெயிலாதிய பொறுத்துச் சருகாதிய [1] அயின்றுபரத்திற்காகிய பெருந்தனம் [2] ஈட்டுவான் பெரிதும் ஆசைகொண்டிருக்கிறேன். அச்சமயத்திலேனும் என்னேழைமைத்தனத்திற்கு இறைவன் இரங்கி அருள்புரியின் திரும்பிவந்து இதனை ஏற்றுக் கொள்கிறேன். அலுப்பின்றி இதுகாறும் பரித்து வந்த இராஜியபாரச்சும்மையை என்னில் எத்துணையோமடங்கு அறிவாதியநிரம்பி அகன்ற கேள்வியராய் மிகுந்திருக்கும் மந்திரி தருமபாலரது புயத்திவிருத்தி விடுதலை பெறுமாறு விரும்புகிறேன். அவர் என்னிலும் செம்மையாய்நடத்துவாரென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. ஆதலின் [3] நீயிர் இதுகாறும் என்னில் நடந்துகொண்ட அன்பின்வண்ணம் அவரை ஏற்றுக்கொள்வீரென்று எதிர்பார்க்கிறேன்."

1. புசித்து 2. சம்பாதிக்கும் பொருட்டு 3. நீங்கள்.

குடிகள்:— "பொய்யாநிலைபெற்று இவ்வையம் காக்கும் ஐய! தளர்ந்தபருவத்தில் தாம் மனத்தாங்கலில் நலியுமாறு ஏழையேம் இழைத்த இழிகோன்பு யாதோ? பாலூட்டித்தாலாட்டிச் சீராட்டி வளர்த்த அன்னையை ஒருங்கே பிரிதலுக்கு உடன்படுவாரெவர்? தமது குறைவு நிறைவேறவென்று தனியறக்கடவுள் திருவருளைச்சிந்தித்துவருவது யாங்கள் இப்போழ்தத்தன்று. தருமபாலர் எம்மைச்சிறந்த நன்னிலையில் நடத்துகிற்பாரென்பதில் இம்மியும் [1] ஐயப்பாடில்லை. தம் பிரிதற்றுன்பம் எமக்கு இல்லையாம்படி அருள்செய்வாரென்று இறைவனை இப்பொழுதும் இறைஞ்சுகின்றோம்." என்றார்கள். அதன்பின் செய்யத்தக்கன மரியாதையாவும் இனிது நிறைவேறின. உடனே யாவரும் கொலுக்கலைந்தனர்.

பிற்றைநாள் பகற்போழ்தில் எல்லாம்வல்ல இறைவர் ஒரு [2] தாபதக்கோலத்துடன் அரைசன்பால் அணுகித் தக்க உபசரணைகளை ஏற்றுக்கொண்டு தான் விடைகொள்ளுங்காலையில் தன்னிடமுள்ள தேமாங்கனி யொன்றை அண்ணலுக்களித்து 'இஷ்டசித்தி பெறுக' என்று வாழ்த்திச் சென்றனர். அத்திப்பியமாகிய கடவுட்டீங்கனியை உட்கொண்ட ஏற்றத்தினால் இரண்டாம் [3] திங்களில் தேவியார் கருப்பம் வாய்த்ததற்காகக் கோமகன் களிகூர்ந்தானென்பதைச் சொல்லவும் வேண்டுமோ! பட்டினமெங்கணும் பெருநாள் கொண்டாடக்கட்டளையாயது. முன்னையி

1. சந்தேகம். 2. தபசி. 3. மாசம்.

னும் பதின்மடங்கு உயர்வாகத் தானதருமங்களும் பரோபகாரசிந்தையும் மிகுந்தன. இயற்கையிலேயே இராஜபக்திநிரம்பிய அப்பெரும்புரவாசிகள் பெருமகிழ்வுடன் எடுத்த மங்கலவிழாவிற்குப் பொன்னாட்டுச் சிறப்பும் பொருத்தமின்றென்றே சொல்லலாம்; இத்தகையகளிப்பிலேயே கோப்பெருந்தேவியின்கருப்பம் ஒன்பது திங்கள்முதிர்ந்தது. கடைசித்திங்களின்தொடக்கத்தில்குற்றம் நீங்கிய [1] ஓரையில் உதயம்செய்யும் குலவிளக்கின் காட்சியினாற் களிக்கவென்றிருந்த அரையருக்குப் பெரும்போர் விளைப்பதற்காக மகதத்தலைவன் வெற்றிப்படையுடன் மதிற்புறத்தேவந்திருக்கும் செய்தியைக்கேட்கலாயது. உடனே எதிரியைத்தாக்கற்கு உரித்தாம் சாதனம் அனைத்தும் கணமும் தாழ்க்காது சேகரிக்கப்பட்டன. இருதிறத்துப் படைகளும் ஒன்பது நாள்காறும் கடும்போர் விளைத்தனர். அடுத்த நாள் உதயத்தில் தனக்குவெற்றியின்மையைத்தெற்றெனத்தெரிந்த அரையர் அந்தப்புரமெய்தி பிரசவிக்கும்காலம் இன்றோ நாளையோவென்று இருக்கும் தமது தேவியாரை இறுகப்புல்லித் துன்பமிகுதியால் பலபலெனக் கண்ணீருதிர்த்து நின்றனர். ஐயகோ! கஷ்டம்!! கஷ்டம்!!! செங்கோற்செலுத்தும் வெற்றிவீரர் செய்கையே இதுவாயின் வீட்டினின்றும் வெளிக்கிளம்பியறியாத பிராட்டியார் நிலைமைஎன்னவாகும்; அவ்வற்றத்தில் ஒருவருக்கொருவர் கட்டித்தழுவிக் கண்ணீருதிர்த்தலையன்றி வேறு ஏதும்சொல்ல வகைதெரிந்தாரின்று. உடனே இரண்டுகடிகைக்

1. லக்கினம்.

செல்லாம் ஐந்துநாளைக்குப் போதுமான உண்டியை நிறைத்து மந்திரிதருமபாலரால் கொணரப்பட்ட சூத்திர [1]எகினப் பேட்டின்மீது பிராட்டியாரையும் பாங்கியொருத்தியையும்ஏற்றி அதனைநடத்தற்கும் அடக்கற்கும்உரித்தாகிய எந்திரங்களைச்செம்மையாய்விளக்கி அனுப்பப்பட்டது. பரிதாபம்! பரிதாபம்!! விதியினைவென்றார்ஒருவரும் இலரன்றோ! பின்னர்சிறிது படைகளுடன் எதிரியைத்தாக்கிய அரசர் அன்று மாலையம் போழ்தில் மகதத்தலைவனாற்கொலையுண்டுவீழ்ந்தனர். கருணையற்ற கிராதர்களைவிட்டுக் கண்மணிபோன்ற காவலரைமாத்திரம் தெரிந்துகொல்லும்தெய்வத்திற்குக்கண்ணில்லைபோலும்; தங்களுக்கு வேண்டிய நன்மைகளை ஒருவரும் கோராது சுதாவில் தெரிந்து செய்துவந்த தருமவரசனைப்பறிகொடுத்து இவ்வுழைச்சென்றாலெப்படியோ, அவ்வுழைச்சென்றாலெப்படியோ, என்று எக்கணமும்திகிற்கு உள்ளத்தை ஒப்புக்கொடுத்து வருந்து மாறுநடத்தும் கொடுங்கோலிற்சிறந்த அக்குறுநிலமன்னனை அன்புடன் ஏற்றுக்கொள்வதெப்படி? கொண்டகணவன் தீச்செயல்நிரம்பி அன்பற்றானாயினும் விட்டொழிப்வகையின்றி அமைவுடன் இருக்கும்குலமங்கையர்போன்றனர். ஈதின்னணமாகஎந்திரப் புள்ளின்மீதுசென்ற இராஜப்பெருமாட்டி இன்னதிசையை நோக்கிப் பறவையை நடத்துவதென்றும்குறியாது அது சென்றவாறேவிடுத்து, உயிர்ப்பாங்கியினால் ஒருவாறு அரிதிற்றேறினளாய் ஐந்தாம்நாள் வைகறையில், புலம்பல் வழிச்செலவு, முதலிய நிமித்தங்க

1. அன்னப்பட்சி.

ளால் வயாவுறுதலும் யாதாயினுமாகவென்று பறவையை இறக்க சிறிது பொழுதிற்கெல்லாம் தாம் இறங்கியது மறவிலங்குவாழும் மனிதப்பூண்டற்ற வனம் என்பதறிந்தனள். பிறந்ததுமுதல் அத்தகைய கொடுவனத்தைக் கண்டிலாததனால் மனவருத்தத்துடன் பயத்தையும் போர்த்தனளாகிக் கணத்திற்கெல்லாம் அழகேவடிவெடுத்தாலொப்ப ஓர் ஆண்குழந்தையைக்கருவுயிர்த்தனள். உடனே அக்காலத்திய வருத்தம்சற்றுத்தெளிந்ததும் குழந்தையைத்தொடையின் மீது இருத்தி முத்தியிட்டுக்கண்ணீர்வார "நாட்டில் நால்வகைச்சிறப்புடன் நன்றுள்கொண்டாடும் ஏற்றம் வாய்ந்த நம்செல்வக்குழவி காட்டில் எடுப்பாருமின்றிப்பிறக்க இறைவன் அருள்போலும்; இதுகாறும் குழந்தை! குழந்தை!! என்று ஏக்கம்கொண்டிருந்த நமது அரையரை அக்கொடுங்கோன்மன்னவன் கடுஞ்சிறையிட்டனனே, அன்றேல் மற்றும் என்செய்தனனோ," என்று அங்ஙனே கீழ்வீழ்ந்தனள். இவ்விபரீதத்தினை அணித்திலிருந்துகண்ட உயிர்ப்பாங்கி கதுமெனக் குழந்தையைக் கையேற்றதும், இரண்டொரு நிமிடங்களுக்கெல்லாம் இராஜமகிஷி கணவன்சென்ற நெறிச்சென்றனள். அந்தோ! என்ன துன்பம்; தாயின்றி அமையாததாகிய அப்பச்சைக் குழந்தையை உயிர்ப்பாங்கி கரத்திலேந்தி, எங்கேனும் ஓரிடம்போய்ச்சேர்தல் நலம் என்று நினைத்துக் கொடுவழிபிடித்துக் காட்டதர் பலவுங்கடந்து கடைசியாக மாளவதேசத்தினைச்சார்ந்து வயிறுவளர்க்கைக்கு அந்நாட்டரைசன்மனையாட்டிக்கு ஆடையுடுத்தல்முதலிய குற்றேவலைப்புரிந்து குழந்தை

யைப் போஷித்து வந்தாள். நாட்டில் நன்கனம் பா
துகாக்கப்படும் குழவிகளுக்கன்றோ நோய் முதலிய
பலவும்வந்து ஒருங்கேமொய்த்துக்கொள்வது. கட
வுளதுதிருவருள் ஒன்றேயல்லது ஊட்டிவளர்ப்
பார் ஒருவருமின்றி ஒருங்கேகைவிடப்பட்ட அவ்வ
ரிய குழந்தை துன்பம் ஒன்றுமின்றி வளர்ந்ததென்று
சொல்லவும்வேண்டுமோ ! உயிர்ப்பாங்கி நிரம்பிய ஏழ்
மையிலிருக்கினும் குழந்தைக்குச் சூரவர்மன் எனப்
பெயரிட்டு அவ்வப்பருவங்களில் செய்யத்தகும் உரி
மைகள் ஒன்றையும் விடாதுபுரிந்துவந்தாள். கற்கும்
பருவம் தலைக்கொண்டதும் அரசகுமாரருக்குக் கலை
பயிற்றும் போதகாசிரியருக்குத் தனது ஏழ்மையை
யும் சிறுவன் மேன்மையையும் இரகசியத்தில் அறி
வித்தலும், கருணைசுரந்த அவ்வையனார் சற்று அங்க
லாய்த்து "இனி அவனைப்பற்றி உனக்கு இம்மியும்கல
க்கம் வேண்டாம்; எனக்குச் சொந்தமகனேயாவன்.
இரகசியத்தை மாத்திரம் வெளியிடற்க" என்று
நல்வேளை ஒன்றில் சூரவர்மனுக்கு எழுத்தறிவி
க்கத் தொடங்கினார். அரிதிற்பயந்த தாய் தந்தையர்
கள் நம் செல்வச்சிறுவன் கல்விமுதிர்ச்சியைக்கண்
டுகளித்தற்கு இல்லாவிடினும் கடவுளருளால் பதினை
ந்தாமாண்டிற்குள் அரசர்க்குரித்தாகும் எல்லாக்கல்
வியினும் அவன் தேர்ச்சியடைந்தானென்றே சொல்
லவேண்டும். ஊன்றியகிளைமுரிந்து தொங்கிக்கொண்
டிருக்கும் ஒருவனுக்குக் கைக்கிளையும்முரிந்தாலொ
ப்ப செவிலித்தாயின் முயற்சியாற்கிடைத்த போதகா
சிரியரும் பரத்திற்கலந்தனர் கொள்கொம்பில்லாமல்
தவித்துக்கொண்டிருக்கும்கொடிபோன்று தன் வளர்

ப்புமகன் வருந்தநேர்ந்ததின் நிமித்தம இன்னுயிர்ப் பாங்கி பெரிதும் ஏக்கமடைந்தனளாய்ச் சின் [1] மதிக்கெல்லாம் அதே நோயாகி வானுலகெய்தினள். ஆழியலைபோலத் துன்பமானது ஒன்றின்மேலொன்று தொடர்ந்துவருமென்பது நம் சூரவர்மனிடம் நிச்சயமாயது. அறுதியில் அவன் ஒருநாள் தனது செவிலித்தாயின் அறையைச்சோதிக்கும்பொழுது இங்குகுறிக்கத்தக்கதாகிய ஒருபொருள்கிடைத்தது. (அதாவது) ஓர் யாண்டிற்கு முன்னம் காலஞ்சென்ற தனதுபோதகாசிரியரால் தீட்டப்பட்ட திருமுகம் ஒன்று. அதைக்கண்டதும் குருவினையே ருஜுவிற்கண்டதுபோலக் களித்தனனாய்ப் பிரித்துப்பார்க்கையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"எனது அன்புள்ள சூரவர்மனுக்கு.

இப்பொழுது உனக்குத் தெரிவிக்கப்போகும் செய்தி மிகவும் விசனிக்கத்தக்கது. அறிவியாதொழிவனேல் நானும் செவிலித்தாயும் நினக்குப் பெருந்தீங்கிழைத்தவராவோம் மேலும், நின்போன்றோர் அதனைத் தெரியாதிருத்தலும் இழிபுதான்; 'கழிந்தவை தானிரங்கான்' என்பது ஆன்றோர் இலக்கணம். நீகாசிராஜன் பிரபலந்தவர்மாவின் ஏகபுத்திரன்; உன்றாய் நிறைந்த கருப்பமாயிருக்கையில் மகதத்தரசன் கடும்போர்க்குவந்துமூண்டதனால் நின்றந்தையார் தனது தேவியாரையும் செவிலித்தாயையும் எந்திரவெகினத்திற்போக்கிப் பகைவனைப் பொருதொழிந்தனர். மறவிலங்குவாழும் கொடுங்கானில் உன்னைக்கருவுயிர்த்த

1. மாதம்.

கோப்பெருந்தேவி தனது மணாளனைப்பிரிந்த துன்ப மிகுதியால் இரண்டு கடிகைக்கெல்லாம் உயிர்துறந்தனள். செவிலித்தாயினால் வளர்க்கப்பட்ட நின்னை எனது ஆசைமகனாய்க்கொண்டு அருங்கலையிற்றிவந்தேன். அறிவு நிரம்பியோனுக்கு இதே மிகையாகும்.

இப்படிக்கு
உனதன்புள்ள } ஆசிரியன்.

இதைப் படிக்கையிலேயே சூரவர்மன் அறிவு மழுங்கி நிலத்தில் வீழ்ந்துவிட்டனன். அந்தோ! அவ்வற்றத்தில் அவனை ஆற்றுவாரும் இல்லை. ஆசிரியர் தனக்கு இந்நாள்காறும் அறிவியாதிருந்ததற்கு முகாந்திரமேதென்று யோசித்தான்; புலம்பினான், கலங்கினான், வீழ்ந்தான், ஆழ்ந்தான், என்செய்துமென்ன? முடிவில் உண்மைவெளியானபின்பு அவனுக்கு அங்கிருந்த ஒருநிமிடமும் யுகமாகியது. உயிர்நண்பர்களைக் காண்பதற்கும் மனம் கூச்சுற்றது. பிற்றைநாள்[1] வைகறையில்செய்வது இன்னதென்றும் குறியாது, மறல் பிடித்தவனைப்போன்று எதிரேயிருந்த ஒரு பாழ்ங்காட்டிற்குள் நுழைந்தான். அற்றைத்தினம் இறத்தலும் அவன் துயரமும் ஒருவாறு கழிந்தது. அறுதியில் தந்தையைக்கொன்றவனைக்கொன்று வயம்பெறவேண்டுமென்னும் கருத்துடன் தேயஞ்சுற்றத் தலைப்பட்டனன்.

## அதிகாரம் 3.

முதலதிகாரத்தில் குறித்தசெய்தி நடந்த இரு மதிக்கெல்லாம் சூரவர்மன் சஞ்சீவிபுரிக்கு அரைய

1. விடியற்காலம்.

ருக்கப்பட்டான். தன்னுடன் ஒரு சாலை மாணாக்கனாய் மாளவத்தில் கலைபயின்றுவந்த சோமதத்தன் என்பானுக்கு வசுலக்ஷ்மியைக் காதலியாக்கி அவனைத் தனது அமைச்சனாக வைத்துக்கொண்டான். வாசவதத்தையும் வசுலக்ஷ்மியும் தங்கள் தலைவர் உவப்பதைத் தாங்களும் உவப்பதாயினர். ஆனால் இவர்கள் விரும்புவதோ என்றால், தம் ஆசைக்கிழத்தியரைக் களிக்கப் பார்ப்பதுதான். பூவும் அதன் மணமும்போன்று என்றும் இன்பத்துடன் சதிபதிகள் ஒற்றுமையாய் வாழ்தலினும் இவ்வுலகிற் சிறந்ததென்னை? இத்தகைய 'அனுகூலதாம் பத்தியமன்றோ' முத்தொழிற் கடவுளராலும் நன்குமதிக்கப்படுவது. சூரவர்மன் அரசிற் பெயர்பெற்றவண்ணமே சோமதத்தனும் அமைச்சிற் சிறப்புற்றனன். தொண்டைவளநாடெங்கணும் அவனது ஆணையும் கீர்த்தியும் அகன்று கிளம்பின. குடிகள் தாம் விரும்பியபடியே நன்மைகள் அனைத்தும் பெறப்பட்டனர். பொது நன்மைக்காக ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் அறச்சாலைமுதலன முன்னையினும் செழிப்புற்றன. குறையுள்ளோரும் பொருளற்றோரும் வாரத்திற்கொருமுறை தன்னைப் பொதுமண்டபத்தில் எளிதிற்காணுமாறு கட்டளைபிறப்பிக்கப்பட்டது. ஆணை உலாய்வரும் எல்லைக்குள் உழவர்க்கு உபயோசமாகும் நீர்நிலைபலவும் உயர்வாய் உண்டாக்கப்பட்டன. முன்னையினும் கடவுளர்பூஜை கிளைத்துப்பரவின. புவிமாதும் அரையாது நீதிக்குக் களித்தனளாகி ஒன்றையும் ஒளிக்காது செவ்வனே விளைவைப்பெருக்கிவந்தனள். மேகங்களும் பத்துவைகலுக்கொருவிசை தவறாது குமுறிப்பொழிந்துவந்தன.

இத்தகைய நீர்மையவாயின் குறைகூற நிமித்தம் ஏது? வாசவதத்தையும் வசுலக்ஷ்மியும் தம்மால் உபகரிக்கத்தகுந்த அளவு எளியர்களுக்கு உதவிசெய்துவந்தனர். எங்குசேர்ந்தாலும் அரையனுடையவும் அரைசியுடையவும் கீர்த்தியைப் பிரசங்கிக்காதாரின்று. சுருக்கிச்சொல்லின், அந்நாட்டார் பிரார்த்தனையனைத்தும் தரணிபன் சவுக்கியத்தைப்பற்றியே. சூரவர்மன் தான் சொல்லற்கரிய ஏற்றத்திலிருக்கினும் முன்னம் மனத்துயருடன் மாளவத்தினின்றும் புறப்பட்ட [1]ஞான்று செய்துகொண்ட சபதத்தினை மறந்துவிட்டானில்லை. தக்கதளத்துடன் மந்திரி சோமதத்தனைக் காசிப்பதியைமுற்றுகையிட்டு அவ்வரசனை வயங்கொள்ளுமாறு பணித்தனன். உபாயம் நான்கினும் வல்லனாகிய சோமதத்தன் அக்கொடுங்கோன்மன்னனுடன் நாற்பதுவைகல்காறும் தாக்கி முடிவில் வெற்றிகொண்டு தன்னரசன் விரும்பியபடியே அவ்விடத்துப் பழையமந்திரியாகும் தருமபாலரது மூத்தமகனார்க்கு அரசும் இளையமகனார்க்கு அமைச்சும் நல்கிப் பெருமையுடன் சஞ்சீவிபுரத்திற்குத் திரும்பினன். இன்னணம் யாதும் குறையின்றி அரசு நடத்திவரும் போழ்து வாசவதத்தை கருப்பமுற்று 'வலம்புரி வயிறுளைந்து வெண்முத்தினைப்பெற்றதுபோல' யாவரும் வியக்கத்தக்கஇலக்கணம் பலவும் நிரம்பிய ஒருபுத்திரனைப் பெற்றாள்.

சூரவர்மன் தனது புகழே உருவாகவும் நீதியே உயிராகவும் கொண்டுபிறந்த குலக்கொழுந்தின் காக்ஷி

1. போழ்து.

யைக்கண்டு களிப்படைந்தவனும் அந்தணர் முதலியோர்க்கு அளவற்ற வெறுக்கைகளைத் தானம்புரிந்து கடவுளர்விழா முதலன சிறக்கச்செய்வித்து குழந்தைக்குத் 'தண்டகன்' எனப்பெயரிட்டு இங்கு இயம்பியும் எழுதியும் முடியாத அக்கனை [1] ஆர்வமுடையனும் மனைவியோடு மைந்தனை வளர்ப்பானுயினன். பூருவபக்கத்துப்பிறைபோன்று தண்டகன் ஐந்தாமாண்டில் பள்ளியில் வைக்கப்பட்டதும் நுண்ணறிவுடையனும் "நேற்றையினும் இன்று கல்வியிற் றேர்ந்துள்ளேமா ?" இன்றேல், இன்றொருபகலை வறிதாக்கினேமா ? என்று ஆசிரியரிடத்து அன்றாடம்கற்ற கல்வியைத் தானேபரீக்ஷித்து விருத்தியுற்றநாட்களில் சந்தோஷித்தும் அஃதில்லாத்தினத்தில் விளக்கொளியிலாவது படித்துப் பூர்த்திசெய்தும், [2] அனவரதமும் புத்தகமும் கையுமாய்ச் சிந்தித்தவண்ணமே பதினைந்தாம ஆண்டிற்குள் அழகில் தான் எல்லாரினும் மிஞ்சியிருப்பதுபோலக் கல்வியினும் தேர்ந்து விளங்கினன். அறியத்தக்கும் பலவும் அடைவே நிரம்பிப்பொலியும் தம் செல்வச்சிறுவனை இனி வாளாவளரவிடல் தீதென்றுன்னினராகிய சூரவர்மனும் வாசவதத்தையும் அமைச்சன் சோமதத்தனுடன் ஆலோசித்து நல்லோரையொன்றில் இளவரசாக்கினர்.

தண்டகவர்மா அரசுரிமையில் பிரவேசித்தபின் செயத்தக்கனவற்றைச் செவ்வனேமுடித்தும், தகாதன தெரிந்தேவிடுத்தும், அறிவொருதிறையும், நாவினெறிமுறையும் பிசகிலனுய்த் தங்கையினும் இவனே

1. ஆசை 2. எப்பொழுதும்.

நல்லன் என்று பல்லோராலும் புகழப்பெற்று விளங்கினான்.

நன்மகனாவான் தந்தைக்குச் சேகரிக்கும் உதவி இதேயன்றோ! இன்னணம் தன்னாடெங்கும் செழிக்க இருந்துவருகையில், இளவரசன் ஓர் பகல்மேற்குத்திக்கில் வனவிலங்கினால் பயிர்களுக்குப் பெரிதும் துன்பம் விளைகின்றனவென்று அறிந்து அதற்குரித்தாம் வேட்டமாக்களுடன் அத்திசையடைந்து துன்பம் செய்யும் விலங்குகளை ஒருங்கு தொலைத்துக்கொண்டே ஒரு கடுங்காட்டின் நுழைந்தான். வினைகூட்டுகையினால் தனது கண்ணிற்கெதிர் உறுமியோடும் ஒரு முட்பன்றியைத் தொடர்ந்தனனாகித் தனித்துத் தானிதுகாறும் கண்டறியாத கொடுவனத்தகத்துள் அக்கேழலைத் துரத்திச் சென்றும் அது 'முன்னம் தாசரதியின் எதிர்த்தோன்றிய மிருகத்தைப்போன்று குளம்பினால் துகள்களைக்கிளப்பி மறைந்தது. தண்டகவர்மன் அதன் செயலுக்கு மிக்குவியந்தனனாய்த் தாகவிடாய் மேற்கொண்டு அலைந்துதிரிகையில் 'மிடியிற்பட்டோன் நிதியைக்கிட்டியதுபோல' ஓர் பொய்கையைக் காணலும் கடவுள் கருணையை வியந்து பரிமாவிற்கு முந்தி ஜலம் அருத்தித் தானும் ஆவல் தணிய நன்னீர்ப் பருகிக் குளிர்காற்று உலாய்வரும் ஒருபாதபத்தடியில் இளைப்பாறியிருந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் நிர்நிமித்தமாய் அவன் கண்ணிற்கெதிரே ஆகாயமளாவிய கருத்த பெரும் புகையொன்று எழும்புவதைக்கண்டு வியப்பு அதிகரித்தவனாய் உய்த்து நோக்கிநிற்கும் பொழுது வளர்

ந்த [1] தூமம் பயப்பயமாறி விகாரவடிவுடைய ஒரு அரக்கனாய்த்தோன்றியது. "நெடுமுடியுடைத்த நீல மாக்குன்றம் படிமிசைக்காலூறி இப் பெயர்தலொத்த பெற்றியன்; கடைசுருள்பெற்ற பொற்குஞ்சியன்; முருக்கின் நாண்மலரைக் கறுத்திடச்சிவக்கும் மொய் அழற்கற்றை பெய்செழுங்கண்ணன்; பிறையிரண்டு அகல்வான் குகையிடைப் புகுதபோல் முடைகமழ்ந் திடு வாயிடையொளிர் எயிற்றினன்; இருப்புலங்கொண்ட பருத்தகரத்தினன்; அக்கினமாலை அணிந்த மார்பினன்."

இத்தகையவாகிய வல்லரக்கன் தனது பற்களை நெறுநெறெனக்கடித்து அரையனைப்பார்த்து "அடா நரனே! சற்றும்பயமின்றி இங்குப்படுத்து இளைப்பாறும் உனதாற்றலை அடக்கி அறுசுவையுடன் நன்றாய்த்தின்று கொழுப்பேறிய நினது மாமிசத்தை என் பசிக்கு உணவாக்குகிறேன்." என்றான்.

அரசன் உனக்குப் பிழைத்தென்னை ?"

" அச்சமின்றி இந்த என்னிடத்திற்கு வந்ததுதான்."

" இது உன்னதென்று எனக்கெப்படித் தெரியக்கூடும்?"

" மனிதட்பூண்டற்றதனால்."

" வரும்போது கவனிக்காவிடில்?"

" வந்ததைப்படுவது."

"ஆயின் உன்னிடம் நீதியென்பது இல்லைபோலும்;"

1. புகை.

"அது எளியருக்கன்றோ உள்ளது."

'அப்படியா! இதுகாறும் அறிந்தேனில்லை. சரி! இங்கு இன்னம் எத்தனைபெயர் உன்போன்றிருப்பவர்?"

"எனக்கே உணவு சரிவரக்கிட்டுவதில்லை."

"உன் உணவு என்னை?"

"நரமாமிசம்"

"அவன் உன்னிலும் வலியனாயின்—."

"இதுகாறும் இன்று."

"இப்பொழுதுநேர்ந்தால்—".

"இதுதான்." என்று, அவ்வரக்கன் தனது கரத்திலிருந்த இருப்புலக்கையைச் சுழற்றி எறிதலும் தண்டகன் [1] கதுமெனத்தனது மந்திரவாளால் அதனை இரு துண்டாக்கினான். பயனின்றிப்போன தண்டத்திற்குச் சிறிதும் வருந்தாத அரக்கன் அரைக்கச்சையிலிறுக்கிய வேறொரு பருத்தவாளை எடுத்துச் சுழற்றிவருதலும், அரசன் 'புலிப்போத்தெனப்' பாய்ந்து அவன் சிரத்தைவெட்டித்தள்ளினான். 'கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல' அவ்வரக்கனுக்குப் புதியசிரம் ஒன்றுமுளைத்தது. வியப்புமிகுந்தவனாகிய தண்டகவர்மா அறுதியில் 'பனங்காய்க்குலைபோல' வெட்டவெட்டப் 'புற்றீசலன்ன' நூதனசிரங்கள் அவனுக்கு முளைத்தேவந்தன. எத்துணைச் சிரமென்றுதான் வெட்டித்தள்ளலாம்; அரசனுக்குக் கைகளும்சோர்ந்தன; மனமும்வேசாறியது; இன்னதுசெய்வதென்றும் புலப்படவில்லை. இவன் இங்கிலையனாகையில் மமதை மேற்

---

1. சீக்கிரமாக.

கொண்ட அரக்கன் "ஏ! மானிடப்பூச்சியே! சற்பங்காறும் என் தலைகளை உருட்டினும் மரணமடைவேன் என்பதை நிச்சயமாய் மறந்துவிடு. அஃதெற்றுக்கெனின்? உன்னால் அரிந்துதள்ளப்பட்ட இவ்வளவு சிரமலைகளுக்கும் 'யான் சற்றாவது இளைத்தேனா' என்பதைக்கொண்டு நிதானித்துப் பார். வெற்றியடைவோம் என்று மனப்பால்பருகும் வீண் எண்ணத்தினை விட்டு அந்தியத்தில் புத்திமான்களால் ஸ்மரிக்கப்படும் நாமத்தைக்கருதுக." என்று தனது சிரமலைகளையே வாரி அஜையன்மீதெறிந்து கர்ச்சனைபுரிந்தான். உயிரைத் துரும்பெனமதித்த தண்டகன் வாளைச்சுழற்றி எறிந்த சிரங்களுடன் முளைத்த சிரங்களால் தனது நாற்புரமும் மதிலரணாகவகுத்தான். எவ்வளவுசெய்துமென்ன? அஜையன்மனம் வெற்றியுறுவோம் என்று கருதற்குக் கனவிலும் உடம்படவில்லை. உணவில்லாக் குறையாலும் இதுகாறும் யுத்தம்செய்த அயர்ச்சியாலும் தண்டகவர்மா 'என்செய்வோம்' எனச்சிந்தித்து நிற்புழி இறைவனருளால் தன்னுள்ளேதோன்றிய ஒருயோசனையைக்கொண்டு அவன் சிரத்தினை வெட்டிக்கதுமென உடலத்தை இருபிளவாக்கி எறிதலும் வினைவலியால் அவனும் அங்ஙனே மரணமடைந்தான். தண்டகவர்மாவுக்கு அப்பொழுது எத்துணைக்களிப்பு இருக்குமென்பதை நீங்களே நன்குநிதானித்துக்கொள்ளுங்கள். உடனே பொய்கைக்கரைசென்று உடலத்தை நன்கனம் சுத்திசெய்துகொண்டவனாய் முன்னம் இருந்த பாதபத்தடியிலேயே இளைப்பாறியிருந்தான்.

இரண்டுகேடிகைக்கெல்லாம் தன் கண்முன்தோன்றிய ஒரு[1] தாபதனைவணங்கலும் அவர் "அரசகேசரி! சற்றுமுன்னம் நின்னாற் கொலையுண்டுவீழ்ந்தோன் 'தமிதப்' பெயரினனாகும் ஓர்வல்லரக்கன். முதற்பெருமுனிவனொருவன்பால் தவமிகக்கிடந்து சிரம்பெருகுமாறு வரம் பொருந்தியவன். தீச்செயல்களுள் ஒன்றேனும் தான் செய்யாது தப்பவிட்டானில்லை. கொடுங்கோல் மிகுதியால் இவ்வனமும் அவன்பெயரையே கொண்டுநிலவும். சத்தவீரனாகிய நினக்குஎன்னாற்செய்யத்தக்கனயாவுள. திங்களொன்றுக்குமுன் மகேந்திரபுரத்தரசன் மகள் 'சம்பகாவதியை' வலிதிற்கொணர்ந்து அந்தோ! அவ்வாலவிருக்கத்தின் கீழறையொன்றிற் சிறையிட்டோன். இதுகாறும் அப்பெண்மணியின் கற்புக்கு இறையும் பழுதுவந்ததின்று. அவளைச்சேர்ந்த மற்றும் உள்ளனவற்றை ருஜுவிற்கண்டு நீயே நிதானித்தறிதி. நினதாகாதற்கிழத்தியாவதற்கு அவள் மிகவும் ஏற்றம் வாய்ந்தவளே. நீ என்றும் நின்றுநிலவுக." என்று மறைந்தார். முன்னையினும் பதின்மடங்கு [2]இறும்பூதுற்றவனாகிய அண்டகன் அவ்விருக்கத்தடியைச் சோதிப்புழி ஆங்கு விசித்திரம்பொருந்திய மாளிகையொன்றில் கடவுளைநினைந்து கருத்தழிந்துருகும் ஒருகன்னிகாமணியைக்கண்டனன். அவளது கூந்தல்நீண்டுநெருங்கிப் படிப்படியாய்ச்சுருண்டு கருத்து விளங்கியது; முகம் அன்றலர்ந்த தாமரையாயினும் சிறிதுவருத்தத்தினாற் கலங்கியிருந்தது; இயற்கையிலேயே கரிய வாய்க் கடைசினந்துகாதளவும் ஓடியகருவிழிபோன்ற

1. தபசுசெய்வோர் 2. ஆச்சரியம்.

கூரியவிழிகள் மானினது மருண்ட நோக்கினைக் கவர்ந்தன; புருவங்கள் இரண்டும் வேம்பின்வனப்பை மாறுகொண்டன; நாசிகை நிறத்தாற்கும் வனப்பிற்கும் குமிழ் அலரைக்கொள்ளையிட்டது; எட்டுணையும் மாசின்றாகிய கபோலங்கள் படிகத்தினை நிகர்த்து உரைத்தற்கு அரிதாகிய உள்ளக்கிளர்ச்சியை உற்று நோக்குவார்க்கு ஒருங்கேயளித்து மெத்தெனவாய்ப் பால்துளித்துப்பொலிந்தன; இதழ்கள் கோபத்தினும் சிவந்துவிளங்கின; நெற்றி நீண்டு நிமிர்ந்து அரைத் திங்களின் அழகை நிகர்த்தது; கச்சு இறுக்கிச் சரிகைத்தாவணியால் மறைத்தும் மேலே தோன்றுவனவாகிய பருத்தகுசங்கள் இரதி மதன் இருவர்க்கும் இருத்தற்கு அமைத்த எழின்மணிக்கூடாரம் போன்றன; அடிகளும் கரங்களும் அழகு ததும்பின; இத்தகைய ஏற்றத்தினளாகும் அந்நங்கையர்க்கரசியின் எதிரில் அரசிளங்குமரன் அடைந்துநிற்றலும் நிமிர்ந்துநோக்காதவளாய் “இறைவவோ! அடியாள் இத் துன்பத்தினின்றும் விலக அருள்புரியீர் போலும்;” என்று தனக்குள்சொல்லிக்கொண்டவண்ணமே நிலத்தைநோக்கிச் செல்லும் கட்டழகியைக் கண்டு களித்தனனாய் “வண்டுபோலும் கெண்டைவிழியினாய்! அரக்கனென்றெண்ணித் துன்புறற்க. யான் சஞ்சீவி என்னும் நகரத்தின் இளவரசன்; தண்டகப் பெயரினேன். பெண்கள் திலதமாகிய உனது மெல்லியமேனியை வலிதிற்பற்றி இவ்விருஞ்சிறையிலிட்ட அக்கொடியன் கரங்களைக் கானகத்துள்ள கழுகாதியபுட்கள்

1. தவடைகள்.

தமது கூரியமூக்கினால் கொத்திப் புசித்தலைக் காண்பதற்குக் களிப்புடன் எழுவாயாக'' என்றான்.

மயிற்றோகை போல்வாள் தண்டகவர்மாவை நிமிர்ந்துநோக்கலும் பரிசுத்தபொருந்திய அவளது மனம் அவனிற்கலைந்தது இதுகாறும் அவளை வலிமையாய்ப் போர்த்திருந்த 'நாணம்' என்னும் வஸ்திரம் அவிழ்ந்து நழுவியது. இவ்வொன்று ஒழிதலும் மற்றைய மூன்றும்[1] விலகத்தலைப்பட்டன உடனே அவனைப் பின்பற்றியவளாய்ச் செருக்களம் அடைந்து மதில்போல நாற்புறமும் வகுக்கப்பட்டுள்ள சிரமலைகளைக் கண்ணுற்று, ''ஏ! என்றும் அழியாக்கடவுளே! தமது நாமம் நீடுபொலிக.'' என்று 'யானைக்கும்காலை நிலனைக்கும் நோக்காக்கால் தான் நோக்கிமெல்லாகும். என்னும் அமுதவாக்கிற்குச் சாட்சியாயினள்.

தண்டகன்:—மின்னாய்! யான் நின்னைச்சிறைமீட்கநேர்ந்ததின் நிமித்தம் பெரிதும் களிப்புடையனாகின்றேன்.

சம்பகாவதி:—தம்மால் நீங்கியதற்கு அடியாளும் அத்தன்மையளே.

தண்:—ஆயத்தைவிட்டுநீங்கி அருஞ்சிறை யிருந்ததற்கு நின்மனம் பெரிதும் வருந்தியதுபோலும்;.

சம்:—இருக்கினும், தமது நற் காட்சியால் அது கனவாயது.

தண்:—பெற்றோர்களைக்காணும் ஆசையுளதேல் செல்லத்தடையில்லை.

---

1. மடம், அச்சம், பயிர்ப்பு.

சம்:—தம்பினும் உரியவர் இல்லை.

தண்:—அப்படியன்று.

சம்:—தமது பிரிதலினும் முன்னைய சிறையே நல்லதாகும்.

தண்:—அரக்கனால் போற்றப்பட்ட பின்னைத் தூயள் என்று யாங்ஙனம் துணிவது?

சம்:—அப்படியாயின், தாசரதி அறிவிலியே.

தண்:—அம்மையார் அனலில் முழுகா தொழியின் அப்படியே.

சம்:— அற்றாயின் அடியாளும் தூய்மையள் தான். குளித்துக் காட்டுகிறேன்.

தண்:—ஆற்றல் உண்டாயின், உடன் வரத்தகுதியளே.

சம்:—ஐயப்பாடில்லை.

தண்:—ஆயின் வருவாயாக. என்று அப்பொற்கொம்புபோல்வாளை உடன் கொண்டு பட்டினம் குறுகினான்.

## அதிகாரம். 4

மேலதுநடந்த ஐந்துவருடத்திற்கெல்லாம் சூரவர்மனும் வாசவதத்தையும் மறுமைச்செல்வம் சேகரிக்கவென்று தன்னாணைக்குள்ளாகிய காசிக்குச்சென்றனர். தொண்டைநாடு முழுவதும் தண்டகன் இனிதுகாப்பதாயினான். அந்நாடு முன்னையினும் இவன்காலத்திற் செழிப்புற்றனவென்றே சொல்லலாம்; இப்படியாக, அத்தாணிமண்டபத்தில் அவை

சன் கொலுவிருக்கையில் இன்றியமையாத சில அமைச்சரும் உடற்காப்பாளருமாத்திரம் தன்னைச் சூழ்ந்துவர அரசனொருவன் வந்தான். தண்டகவர்மா இருக்கை பெயர்ந்து தக்க உபசாரனை பலவும்புரிந்து அருகாமையிலிருந்த உயர்ந்த ஒரு பீடத்திலிருத்தித் "தமதுவருகை நன்றாக" என்றதன்மேல் புதிய வரசன் இதுசொல்லன்மேயினான்.

"இராஜதிலக! தாம் முந்தி என்னை இன்னானென்றறிய ஆசைப்படுதல் இயல்பே. என் சரித்திரமும் சொல்லிமுடிய அவ்வளவாய் நாழிகை செல்லாது; என்றாலும், அதைக்கேட்டபின் தமக்கு அளக்கலா வியப்புண்டாமென்பது நிச்சயம்;—எனது ஜன்மநாடு தென்மதுரை. வீரபாண்டியனென்று பல்லோருமழைப்பார்கள்: முன்னோன் இராஜியாதிகாரம் செலுத்த யான் மந்திரித்தொழிலிலிருந்து சோழராஜனைப்புறங்கண்டு கடைசியாக பிரயாகபுரத்திற்கும் அதிபனாயினேன். சின்னாளிற்குமுன் எனது சபைக்குவந்த ஒருவயோகிக அந்தணரால் தமதுஆற்றலைக்கேட்டு மட்டற்ற அழுக்காறுடன்சபையைநோக்கி "எனது அரிய சினேகர்காள்! அணித்தில் நம்மினும் வலியனாகிய அரசனொருவன் பெருகிவருகிறான் என்பதைக்கேட்க என்னுதிரம் கொதிப்பெடாதிருக்குமா? நகத்தினாற்கிள்ளும் முளையை இன்று வளரவிடின் அப்புறம் எத்துணைப் பிரயாசைக்கு இடந்தரும் என்பதை நீயிரே நினைமின். கொல்லும் விஷம் கடுகளவும் போதுமன்றோ?' இப்பொழுதே அவ்வரையனைப் புறங்கண்டாலன்றி என்மனப்பதைப்புத்தீராது. ஆதலின்

12607



அதற்குரித்தான படைகளுடனே கதுமெனப் போர்
செய்தற்கு எழுமின்." என்று கட்டளையிட்டு அரண்
மனை சென்றேன்: என்மனம் யுத்தத்தில் ஒரே நிலை
யாய் இருந்தமையின் மந்திரியார் ஒன்றும் மாறுகூறி
லரன்று. ஆயினும்யான் உட்சென்றதும் என்மனையா
ட்கு மாத்திரம் சற்றேனும் ஒளிக்கக் கருத்தின்றி நட
ந்தனயாவும் நவின்றதன்மேல் பணித்தமொழியுடன்
அவள் கூறியதாவது:—எனது அரியதலைவ! அரசர்
எப்பொழுதும் தன்வலியும் பிறன்வலியும் ஆன்றகேள்
வியராகும அமைச்சருடன் சீர்தூக்கித் தன்னினும்
மாற்றான் குறைந்தவனாயின் தண்டத்தில் தலைப்படு
வர். அறிவுநிறைந்த ஞாதாக்கள் இதனைக் கடையிலி
ட்டு வழங்குதலைக்கொண்டே இதன் ஏற்றம் தெற்
றெனப்புலப்படும். அறத்தின்வேலியாகும் அப்பெரிய
வர்கள்கருமத்தினிமித்தம்முதலிற்கையிடுவது 'சாமம்'
ஒன்றே. சிந்தித்த கருமம் அதனாற்சித்தியாதேல் பின்
னர் படிப்படியாய்த் தானத்தினும் பேதத்தினும்
முயலுவர். அற்றாக, தம்மினும் எத்துணையோ ஆற்றல்
வாய்ந்த அரசன் ஒருவனைப் பொருதற்கெழுந்ததினி
மித்தம அடியாள் கவலையுற்றவளாயினேன். ஆயினும்
பெண்பாலானதால் ஒருகால்போருக்குப்பயந்துபேசி
னள் போலும் என்றெண்ணற்க. அதுகேவலம் பேதை
மாந்தர் இயல்பு. ஆடவர் புகழுநின்றே அரிவையர்
மேம்படுவது; ஒன்றும் நிலையாத இவ்வுலகில்என்றும்
நிலைத்துநின்றுரைக்கண்டிலம். ஆறினும்சாவு. நூறினும்
சாவு; அதுஎப்பொழுதும் நம்மைவிடாதுபொருந்தியு
ள்ளது; என்றாலும், 'எண்ணித்துணிககருமம்துணிந்த

பின் எண்ணுவ தென்பதிழுக்கு' என்பது ஆன்றோரில க்கணம்'' என்றாள்.

யான் சற்று நிதானித்து அப்படியேயாக. என்று [1]அரசவை சென்றதும் எனது வருகைக் கெதிர் நோக்கியிருந்த பெரியமந்திரியாருக்கு நடந்தனயாவும் புகன்றேன். என்மனம் முந்தியிருந்த புத்தநிவிர்த்தி யின்றும் சற்று விலகியதறிந்து மனங்களித்தாராகி அவர் "பெரும! தண்டகவர்மாவின் சிரம் கொணர்ந் தார்க்குப் பாதியரசு அளிக்குதும் என்று பட்டினமறி யப் பறைமுழக்கின் அந்தணருட் சிலர் நம் காரியத் தினை முற்றவைக்கினும் வைப்பர்'' என்றார். எனக் கும் அதே சரியென்று புலப்பட்டமையின் அங்ஙனே செய்யப்பட்டது.

தண்டகன்:—இது மிகவும் விந்தையே. மேல்.

வீரபாண்டியன்:—பிறகு சில திங்களுக்கெல்லாம் எனதரசவைக்கு அந்தணரொருவர் வந்தனர்; உட னே அவருக்குச் செய்யத்தகும் உபசாரணையாவும் குறைவறநிறைவேறின. இரண்டொருசங்கதிவினவிய பின்னர் அவரை அசாதாரணரென்று யான்கொள்ள நாழிகை செல்லவில்லை. பிறகு அவர் என்னைநோ க்கிக் கூறியவாய்மொழி இது."பிரஜாபாலக! தம்புகழ் எங்கும் பரவியிருத்தலைப்பற்றி எனக்கு இப்பொழுது ஆச்சரியமில்லை. சமூகம் அடைந்தாலன்றி எடுத்த கா ரியம் இனிதுமுடியா என்னும் துணிவுடன் இங்குவரா லாயினேன். யானிருப்பது கோதாவிரிச்சார்பு. இஷ்

1. இராஜசபை.

டசித்தி பெறவேண்டி 'இராஜராஜேசுவரி' என்னும் ஒருஅரியதேவதையை உத்தேசித்து யாகம் நடத்தி வருகிறேன். [1] அம்மகத்தின் முடிவிற்கு அரசினரா கும் அணிமுடிமன்னர் சிரங்கள் ஒன்பது தேவை.அத னிமித்தம் எனக்கு எத்துணைப் பிரயாசையிருக்குமெ ன்பதைத்தாமேநிதானிக்கலாம். பலசொல்லிப்பயனெ ன்னே ? அறுதியில்எட்டும் சேகரித்தாயின. இன்னம் வேண்டியிருப்பது ஒன்றுதான்; களிமுகத்துடன் கண் ணீர் வடிக்காது அதைத்தாம் அளிக்க உடன்படின் பயனுண்டாம்" என முடித்தார்.

அச்சமயத்தில் எனக்குண்டான மனத்திகைப் பிற்கு எல்லையேயில்லை. என்றாலும், சற்றுயோசித்த தில் 'கடவுளால் உண்டாக்கப்பட்ட கருப்பொருள் பலவற்றினும் மிகவும்சிறந்தது உயிரொன்றுதான். அவ்வளவு ஏற்றம்வாய்ந்த அரிய வுயிரோ நின்று நிலவுதல் என்றுமின்று. காலிரண்டுநட்டுஎலும்புக்கழி களைப்பரப்பி நரம்புக்கயிற்றால்இறுக்கி உதிரநீர்ச்சேர் த்து மேதைச்சுவரெழுப்பி ஒன்பது பெரியவாயில் விட்டு சருமச்சட்டகத்தால் மூடப்பட்டிருக்கும் இச் சரீரக்கோட்டையில் ஆத்துமவரசன் குடியிருப்பதில் ஆச்சரியமன்றிப் பிறிந்துசெல்வதில் இல்லை.அஃதெ ப்படியெனில் உடற்கோட்டையில் ஒவ்வொரு மயிர்க் கிடைதோறுமுள்ள சிறு நெறிகள் ஒன்றல்ல; பல; இத்துடன் மிகப்பெரிய ஒன்பது வாயில்களும் உள. உள்ளிருந்து அரசுபுரியும் அதிபனே [2] அகோசரன் உக்கிரமாய் மோதியடிக்கும் காற்றைப் போன்றது

---

1. அந்தயாகம், 2. காணக்கூடாதவன்.

தான் அவனுருவம். [1] அம்மாருதம் மேற்கூறிய புழைநெறியில் வெளிப்படாது நிலைத்திருத்தல் சுராகடலாக்கடல் போலும்; உயிர்நீங்கியபின் உடற்கோட்டைக்கு உடனே துன்பமுண்டாகுமென்பதை இறந்தபின் அடக்கம் செய்வாரின்றி ஊர்க்குப்புறம்பே இழுத்தெரியப்படும் சுணங்கன் முதலிய பிணங்களைக் கொண்டே தெற்றெனத் தெரிந்துகொள்ளலாம். ஆகக்கொள்ள, என்றும் நின்றுநிலவும் புகழ்நிமித்தம் இதனை விநியோகித்தல் சிறந்ததே' என்று தோற்றியது. அப்புறம் அந்தணருக்கு விடையளிக்கக்கணமும் காலம் தாழ்த்தேனின்று. உடனே பார்ப்பனத்தலைவ! எனது சிரம் உமக்குச் சொந்தம்; அதை எவ்விதத்தும் நீர் உபயோகிக்கத்தடையில்லை என்றேன்.

**தண்டகன்:**—சற்று நிறுத்தும்; நீரோசத்யவாதி. உமது வசனத்தில் ஐயுறவேதும் நிமித்தமில்லை; என்றலும், ஒன்றுக்கொன்று பொருந்தாத வாக்கியம் இரண்டில் ஒன்றொழிய மற்றொன்றும் வாஸ்தவமாதல் கூடாதே; அயலான் வாழ்வில் அழுக்காறுகொண்டு அவன் சிரம்வேண்டித் தாஞ்ஞோபாயம் தலைக்கொண்ட நீர் மகமியற்றும் அந்தணர் நிமித்தம் எவனிலும் சிறந்த உயிரைத் துறக்கத் துணிந்ததென்னே ?

**வீரபாண்டியன்:**—ஒன்றுக்கொன்று பொருந்தாத வாக்கியம் இரண்டும் ஒரேகாலத்தில் வாஸ்தவமாகா என்பது நிஜம்: அவ்வையப்பாடும் எனக்குள்ளதுதான்

---

1. அகக்காற்று.

அறுதியிட்டுச் சொல்லின் 'அயஃகாந்த நியாயப்படி' அப்பூசுரேந்திரர் தனது நோக்கின் வல்லபத்தால் அதுகாறும் என்னைப் பற்றியிருந்த [1] அழுக்காறு முதலிய கொடும் பறவைகளைப் பறக்கவடித்தாரென்பதன்றி வேறு ஏதும்சொல்ல வகையறியேன்.

தண்டகன்:—பாண்டியரே! இஃதெனக்கு ஒருவாறு புலப்படுகின்றது: இடையிலே தடுத்துக் கதைப்பொருத்தத்தைக் குலைத்ததுபற்றி மனஸ்தாபப்படுகிறேன்; எடுத்த சரித்திரத்தைத் தொடர் அறுது சொன்மின்.

வீரபாண்டியன்.—யான் அதுகாறும் வகித்திருந்த அரசினை என் அருமைக்குமாரன் சுந்தரபாண்டியன் தலையிருத்தி இன்றியமையாத சில இராஜ்ஜியக் காரியங்களை மாத்திரம் கூடுமானவரையில் அன்னோனுக்கறிவித்துக் கைவாளொன்றைக் கரத்தளித்து என் சிரம்கொய்து ஐயருக்கு அளிக்குமாறு கூறினேன். பட்டினத்துள்ளார் இவ்விந்தையைக் காணத் திரள் திரளாய் வந்து குழுமினார்கள். அப்பொழுதும் உவப்புடன் அளிக்கிறேன் என்று முன்னம் அவருக்குச்செய்து கொடுத்த உடம்படிக்கையை மறந்தேனல்லேன். அரியணை துறந்து இதற்கெனவே தரையில் சுத்தப்படுத்தி இட்டுள்ள புல்லணையொன்றில் இருந்து கடவுளைத் துதித்து அதிருஷ்டமுள்ளனா பாக்கியமுள்ளனானேனே!! என்று இரண்டு விசை உரக்கக் கூவியதும் இளவரசன் திடசித்தனாய்க் கைவாளைக்

1. பொறாமை.

கழுத்தில் மாட்டி மூன்றிலொருபாகம் அறுத்துவிட்டான். அப்பொழுது என் உடலம் நெரிந்து அசைந்தது. அதுகண்ட வேதியர் கடுங்கோபம் தாங்கினராய் இருக்கை நீங்கிப், "பேராசைபெற்ற அரசனே! உனக்குக் கிடைத்திருக்கும் வள்ளற்பட்டத்தை யோசித்தால் கொடைமிகுதியாற் களிகொண்டு இரவலர் இட்டுள்ளது என இம்மியும் தோன்றிற்றின்று. பிறிது கிடைத்த முகாந்தரம் அபிமானத்தாலோ அல்லது அதிகாரத்தாலோ 'கள்ளிக்கொம்பிற்கு வெள்ளிப்பூண் கட்டியது போல்' பேராசைகொண்டு பெருகத் தவிக்கும் உனக்கா வள்ளற்பட்டம்? சை! நின் கொடை வேண்டிலேன்; மனைவிமக்களுடன் சுகமுறுதி" என்று ஞெரேலெனப் பத்தடிதூரம் நடந்தார். கிணற்றில் கற்போட்டதுபோல அரசவை அடங்கியிருந்தது, மகனும் அறுப்பதை நிறுத்திவிட்டான். அத்தநியில் என்மனம் எவ்வளவு பதைத்திருக்குமென்பதை உன்னுகிர்; பிறகு யான் ஐயரை விளிக்கத்தாமசித்தேனில்லை. எனதன்பிற்குரியமதலை புறங்கால் புடத்திற் படுமாறு ஓடி யழைத்துவந்தான். சமீபம் வந்ததும் அவர் துஷ்டவரசனே! நின்மெய்ந்நெரிந்து துன்புற்றதுபற்றி வேண்டாது சென்ற என்னைத் திரும்ப அழைப்பித்த தெற்றுக்கு?" என்றார்.

மிகுந்த வணக்கத்துடன் உடம்பிற்புறளும் உதிரப்பெருக்கினையும் நோக்காது, 'ஐய! சிரம் உத்தமபாத்திரம் பொருந்த உடன்வளர்ந்த காம்மாத்திரம் ஆட்டதர் ஒத்து நிருபயோகமாயினேமன்றே' என்ற துன்பினால் வாய்விட்டுக் கதறுமாறு அசைந்ததன்றி

வேறன்று. தமது சொல்லை உண்மையாக் கொள்ளின் கண்ணீரன்றோ வடிதல் வேண்டு என்றேன் உடனே அவர் மனம்களித்தாராய் கைவாளைக் கழற்றி எறிந்து தனது திப்பியக்கரத்தினால் அறுப்புண்டவிடத்தைத் தடவுதலும் அவ்வடு நீர்ப்பிளவின் பான்மையாகியது. அப்புறம் அவர் என்னை நோக்கி 'நிருப! பேராசையைக் கடிந்து நீதியைத்தழுவுக, என்றனும் அவரைக் காண்கிலேன். அழுதேன்; தொழுதேன்; ஓடினேன்; பாடினேன்; எங்குத்தேடியும் கிடைத்தாரில்லை. உடனே பட்டினமெங்கணும் பெருநாள் கொண்டாடி, முன்னம் சிரம்வேண்டிச்செய்த கட்டளையைமாற்றியதுடன், கடவுளர்பூஜை முன்னையினும் கருத்துடன் நடத்திச் சமூகம்கண்டு சம்பாஷிக்கவேண்டும்' என்னும் பேரவா சிலநாட்களாய் என் மென்னியைப் பிடித்துத் தூரத்தலால் இன்றிங்குவரலாயினேன். பிழையுளதேல் களைதற்கு நான் கோறவேண்டியதில்லை" என முடித்தான்.

தண்டகன்:—"பாண்டியரே! இனி நீர் எனக்குப் பிராணபதம்; என் உள்ளத்தை உமக்குக் கள்ளமின்றி திறந்துகாட்டுவேன்; உமது நட்பாளர் யாவரும் என்னுடையரே. பாலும் நீரும்போல் மனமொத்து நடந்து அதனால் வரும சுகதுக்கங்களுக்கு இருவரும் சமபங்காளிகளாவோம்" எனமொழிந்தான்.

அதற்குள் கொலுக்கலையும் காலம் கிட்டியதனால் யாவரும் அரசனுக்கு வந்தனைசெய்து சென்றார்கள். அன்றிரவு பாண்டியன் தண்டகன் ஆகிய இருவரும்

உண்டிகொண்டு அந்தக் கேளிக்கைமண்டபம் அடைந்ததும் பகலிற்பட்ட அலுப்பு நீங்கும்பொருட்டு விரைவிற்பொழுது போக்கும் உபாயமான நாதகீத காலக்ஷேபங்களில் நிதம் ஒரு வண்ணம் சாதித்துச் சபையைக் களிப்பூட்ட வல்ல நிபுணர்கள் வரவழைக்கப்பட்டார்கள். பொழுது புலர்ந்ததும் நேற்றைய வண்ணமே நூதன காலக்ஷேபங்களும நூதன ஆடல் பாடல்களும் தகுந்த விமர்சையுடன் ஏழெட்டு நாள் காறும் நடந்தேறின. பின்போர் நாள் வீரபாண்டியன் தண்டகவர்மாவிடம் விடைபெற்றுத் தகுந்த சன்மானத்துடன் படைகள் பின்பற்றப் பிரயாகபுரத்திற்குச் சென்றான். முதலில் வரும்பொழுது இவ்வளவு மரியாதை தனக்குக் கிடைக்கும் என்று அவ்வரசன் கனவிலும் கருதினானில்லை.

## அதிகாரம் 5.

தண்டகன்:—இகத்துள் நுகரத்தகும் போகத்தில் ஒன்றேனும்விடாது [1] துய்த்துத் தொண்டைமண்டிலத்தினை இனிதுகாப்புழி, ஓர்நாள் ஒளிகதிர்ப் பரிதி விண்ணடுநீங்கி ஒன்பதும் மூன்றும ஒருங்கேசென்ற கழகைப்போழ்தில் செந்துகில்பூண்ட கோலத்தினோரும் கமலமுனிவர் என்பார் கொலுக்கூடத்திற்குவந்தனர். அரையன் அவர்க்குச் செய்தக்கன யாவும் இனிதில் நிறைவேற்றி உயர்ந்த ஒரு ஆதனத்திருத்தியதன்மேல் அம்முனிவர் "அண்ணால்! இன்றுன்வளவில் என்னை அதிதியாக்கொண்டு ஊணுடன்

1. அனுபவித்து.

கலந்த உண்டியளித்தி" என்றார். தண்டகன் அங்ங னேயாகுக; யானேசென்று அடியார்க்காணையிட்டுப் போதுவல்; அதுகாறும் இங்ஙனே யிருக்க என்று அரசனைநீத்துக் குறுகநெறிபற்றி மடைச்சாலை சேருமாறு மகரந்தோத்தியானம் என்னும் பூஞ்சோலையைக்குறுகினன். ஆங்கு நயமான பண்ணை மிருதுசாரத்துடன் என்றும் விசற்பிசகாது நிறுத்திட்டமாய்ப்பாடிச் செவிக்குக் களிபூட்டவல்ல 3 அளிப் பாணர்கள் இசைகூட்டா களிமயில்கள் அழகியசிறகுகளை விரித்தாட, தென்மலையிற்பிறந்து 4 சந்தனாடவியுள் நுழைந்து அருவிநீரிற் படிந்தனவாய்ப் பூந்துகளில் தோய்ந்துவரும் தென்றற்பிள்ளை மந்தமாயுலவ, கோங்கிளமுலையுடன் கொடியிடையசைய, முல்லைப் பற்களை விளங்கக்காட்டி மங்கலஞ்செய்வான் மலர்ப் பொரிசிதறி தளிர்க்கரத்தில் 5 தன்கண்பழுத்துள்ள தீங்கனித்திரளைக் 6 கையுறையேந்தி, அவ்வனநங்கையானவள் அரசனைக் காண்டலையொத்து 7 மிளிரும் வனப்பமைந்த அச்சோலையின் ஓர்புறத்தில் தான்வளர்த்த செவ்வசோகு என்றும் மலரும்பொருட்டு அழகிய சீறடியாற் றோதகம் கொடுத்திருக்கும் தனது ஆசைக்கிழத்தி சம்பகலதிகையைக்கண்டு மயங்கி நிற்புழிக், திங்கட்குடையும் தென்றற்றேரும் கிளிக்குதிரையும் குயிற்காளமும் கைக்கொள்வாளும் கடன்முரசும் கருப்புவில்லும் களிவண்டு நாணியும் ஐம்மலர்வாளியும் காரிகைச்சேனையும் தாங்கிய மன்மதராசன்

---

1. இராகம். 2. விதானமாய். 3. வண்டுகளாகிய பாடகர்கள். 4. சந்தனக்காடு. 5. தன்னிடத்தில். 6. காணிக்கை 7. விளங்கும்.

தனக்குத்தக்கவமையம் ஈதேயென்று மலர்வாளிகளாற் றுளைத்தலின் அப்புண்களுக்கு ஒத்தடங்கொடுக்கவேண்டுமென்று தன்மனைவிக்குக் குறிப்பினால் அறிவித்து நின்றான். அந்தோ! ஊழ்வலியை விலக்குகிற்பார் யாவர்?

கற்புக்கணிகலனாகும் சம்பகாவதி, மன்னவன் கருத்தறிந்ததும் திடுக்கிட்டனளாய்த் தனக்குள் இதேது அரசர் மாலைப்போழ்தினையும் மதித்திலர்; என்னுள் ஏதோ ஒன்று இதனாற் பெருந்துயர் விளையுமெனக் கூறுகின்றது; எதுவாயினும் நாம் செய்யற்பாலதென்னை? அவரோ மிஞ்சியவிரகத்தாழ்ந்தியுளர்; இருக்கினும் சரியானகாலம் மாத்திரம் இஃதன்றெனவெடுத்துரைத்தலகூடும்; ஆனால் அதுவும் குலமங்கையர்க் கடுத்ததன்றே! அந்தோ! உரிமைக்கும் அதனையுரியவர்க்கும் இடையில் எத்தனை இடறுகட்டைகள்'' என்று பலவும் உன்னினளாய் அறுதியில் அரசனைத் தனது அழகியகரத்தால் அணைத்து எவனிமித்தம் தன்னுடலம் தன்றாய்ப்பாதுகாக்கப்படுகின்றதோ அவனுக்கே அனைத்தையும் ஒப்புக்கொடுத்தனள்

ஈதின்னணமாக, அரசவையிலிருந்த அருமறைமுனிவர் நெடுநேரமாகியும் நிருபன் திரும்பாததனால் அமைச்சனைவிளித்து யான் சந்திமுடிப்பான் செல்லவேண்டியவனாதலின் கதுமெனச்சென்று அண்ணலிடம் விடைகொணர்தி; எனப்போக்கி அவையார்க்குரித்தான சிலஅறநெறிகளைப்புகன்றுகொண்டிருந்தார். சோமதத்தனும் பூங்காநெறிபற்றிக்கொடிவீட்டில் அரசனும் அரைசியும்மகிழ்ங்கடலில்மருவியிருப்பதுகண்டு

மாழ்கிய மனத்தனாய் அவன் வருகைக்கு எதிர்நோக்கியிருந்தான். இதற்குள் கதிரவனும் மேல்நடக்கப் போவதைக்காணச் சகியாதவன்போல் கடலிற் குளித்தனன். இதுகாறும் தவறாத இறைவன்கடனுக்கு இன்னல் விளைந்ததென்னும் வருத்தத்தினால் இருஞ்சடைமுனிவர் அடங்காச்சினத்துடன் இது சொல்வாராயினார்.

"அதிபதி கட்டளைக்கு அடங்கிவாழும் அவையீர்! யான்வந்து வெகுநாழிகைகழிந்தனவென்பது உங்களுக்குத்தெரிந்ததுதான். அரைசன் ஏதனும் பணியூற்றத்தால் அயர்ந்தானென்றாலும் அமைச்சனாவது என்னைப் பொய்கைக்கரைசெல்லப் பணித்திருத்தல் கூடும்; பொழுதுபட்டதனால் இனிக்கணமும் இங்கிருத்தல் எனக்கடாதென்பது வியப்பன்று. இதுநிற்க அரையன் எவ்வாறாயினான் என்பதை நினைக்குந்தோறும் என் உள்ளத்தெழும் சினத்திற்கு ஓய்வேயில்லை; தனக்குக்கிடைத்திருக்கும் உலகாதிபன் என்னும் பெயரையும் [1] போற்றிலன்; தான்இருத்திச்சென்ற மனிதன் எத்தகையனென்று என்னையும் குறித்திலன்; வேலியேபயிரையழித்தல் போல இத்தகைய அநீதச்செய்கைக் குள்ளாகும் துஷ்டவரசனுக்குத் தண்டனை கிடையாதொழியின், உலகில் இப்பொழுதே அறம்பொய்த்து [2] மறம்கொழுந்துவிடும் என்பதற்கையமில்லை;" நீயிரும் இனி இப்பதகன்கீழ்வாழ்தலரித்தன்று;" என்றார்.

1. காப்பாற்றவில்லை. 2. பாவம்.

சபையார் 'நெருப்புமிதிக்காலன்னைப்' பதைத்தாராய் "ஐய! அரசர் தமக்கு அம்பமும் பிழைத்தாரில்லையே; அடிகளுக்கு அடிசிலாக்குவான் கட்டளையிடவன்றோ சென்றுளார்; கருமம் முற்றுப்பெறின் கணமும் தாழ்க்காது கழற்றரிசனைக்குப் போதுவாரென்பது யாங்கள் சொல்லவேண்டியதில்லை; அல்லாதிருக்கக்கொள்ள. அவரிடம் குற்றம் சுமத்தல்எப்படி? ஒருகால் அப்படிக் குற்றஞ் சுமரினும் அறிவில் முதிர்ந்த தம்போன்றார் முக்குணமுமமாறிவருதல் மாந்தர்க்கியல்பென்றுன்னி மன்னித்தலன்றேகடன்; கடல் கொதிப்பெடுத்தால் விளாவநீரெங்கே?" என்றார்.

முனிவர்:—"அவையீர்! நும்மரையன் எனக்கு அடிசிலமர்த்தச் சென்றானல்லன்; கொடிவீட்டில் காதற்கிழத்தியுடன் சுகமுறுகின்றான்; இதுஎத்தகையகுற்றமென்பதை உள்ளிப்பார்மின். என்னைக்குறியாவிடினும் நீதியையும் நினைக்கிலனாய் மாலையம்போழ்தில் மருவியிருக்கும் மிருகத்தன்மையனாகும் அரசனிமித்தம் நீவிர் பரிந்துகழறும முறையனைத்தும் என்சினத்தீவளர்க்கும சமித்துகளே. ஆகலின் நும்மரையனும் அவனுக்காகக் குறைபிரக்கும் நீயிரும்இன்றுமுதல் ஆடுமாடாக; குலமங்கையர்க்கடாதனவியற்றும அரைசி [1] குசேசயமாகுக; ஞெரேலெனத்திரும்பிலனாய் என்சினத்திற்குக்காரணமாகிய அமைச்சன் அறிவிழந்து [2] ஆயனாகுக; கொடுங்கோலனையுடைய இந்நகரம் சுடுங்காடாக," என்றுகமண்டலப்புனலை அள்ளித்தெளித்து

1. தாமரை 2. இடையன்.

அரசனை நீத்தகன்றார். சற்றுநேரத்திற் கெல்லாம் இச்செய்தி எங்கணும் பரந்தது. கற்புக்கணிகலனாகும் சம்பகாவதி இதனைத்தெரிந்ததும் பெருந்துயருழந்து "ஆ! நம்சனிப்பு மிகவும் ஏழைமைத்தே; பெண்பேய் பிடித்துப் பெருந்துயருழந்தோர் பலரேயன்றே; உலகில் விரகதுமேற்கொண்டவிலைமாதென நாமவசை கூறுவர்போலும், அச்சமயம் அரசாகருத்தை அவலப்படுத்தின் விரதம்தவறியவளாவோம்; இதனால் எத்தனைபெயர்க்கு இன்னல்விளைந்தது; இவற்றிற்கெல்லாம் முதற்காரணம் நாமேயன்றே; இராஜபத்தி நிரம்பிய அவையிர்காள்! உங்களுக்குச் சம்பவித்த துற்கதியை நினைக்குந்தோறும் அதற்கொருமுடிவு எத்துணையும் உள்ளதெனத்தோற்றவில்லை; அரைசனைப்பற்றி அக்கோபக்காரமுனிவரிடம் அம்மவோ! நீங்களேன் குறையிரந்தீர்கள்; அப்படியேசபிக்கப்பார்க்கலாகாதா; அந்தோ! நீங்கள்செய்த உபகாரமனுவிற்கு அந்நிஷ்டூர் எவ்வளவுதண்டனைவிதித்தாரென்பதை மஜாவிற்கண்டோர்களன்றோ; அரசருக்குநேர்ந்த துன்பத்தைப்பற்றி யான் சற்றும்யோசித்தேனில்லை. ஐயகோ! நியாயாதிகளான உங்கள் நிமித்தமன்றோ என்மனம்பதைக்கின்றது; ஆ! பெரியீர்! காரணமின்றிக்கடுஞ்சாபங் கொடுத்த நீயிரும் குற்றமற்ற குடிகளும் அறவோன் சந்நிதானத்தில் நாளை பிரத்தியக்ஷமாக நிற்கும் போழ்து தேவதூதர்கள் நும்மைக் குற்றவாளி என்று கடிந்துரைத்தலைக்கண்டு அந்தோ! என்செய்யமாட்டுதிர்; அருந்தவத்தினை அமர்ந்தியற்றியும் கோபத்தைக் கைவிடாது உலகத்தாரியாவரும் நடுங்கும்படி இப்போழ்து நீயிரடைந்துள்ள சாபாதிகாரமானது நாளை அ

றம் திறம்பியதன் நிமித்தம் உமக்கு நேரிடப்போ கும் தேவதண்டனையைத் தடுக்கமாட்டுமோ?" என்று கூறினளாய்த்துன்பமிகுதியினுற் கீழேவீழ்ந்தனள். யா துசெய்துமென்னே! அறுதியில் உயிர்ப்பாங்கியரால் ஒருவாறுதேறி அரசவையடைந்து மயக்கில் மாழ்கி யிருக்கும் மணுளனே நோக்கி "நாதா! குறைவந்தபின் அதைத்தீர்க்கமுயல வேண்டும்; இன்றேல் அது நம் மை என்றும் விடுபடாத துன்பப் [2] படுதண்டாவில் அமிழ்த்திவிடும்; ஆகலின் அதனைத்தவிர்க்கும் உபா யம்தேடாது வறிதேதுன்புறலிற் பயன்யாது? அந்தத பசியையே கண்டுதொழின் ஒருகால் அருளினும் அ ருள்வரன்றே!" என்றுள். அக்கூற்று யுத்தமாகையின் யாவரும் அவ்வண்ணமே முனிவர் இருக்கைக்குப் பய ணமாயினர். அரசவையில் முன்னம சாபமிட்டுச் சென்ற தபசியார் தனது [3] உறையுள் குறுகியதும் அவரைப்பற்றியிருந்த கோபாவேசம் கதுமெனப்பற ந்து நல்லறிவு தலைப்பட்டது. உடனே தாமரைத் தண்ணீரெனக் கலங்கியமனத்தினராகி தான் சபை யார்க்கு விபரீதசாபம் கொடுத்ததற்கிரங்கினராய் அவ ர்கள் நூற்றியாண்டு தன்கட்டளேப்படி சாபம் நுகர்ந் ததன்மேல் ஞானயோகியாரால் ஒழியுமாறு கடவுள் இரங்கவேண்டுமென்று நிஷ்டையிலிருந்தார். பிறகு அரசனுதியர்வந்து பன்முறை வேண்டினுர்கள். சபத் திலிருந்ததால் தாபதருக்கு அஃதொன்றும் செவிப் பட்டதின்று. சாபம் பற்றும்வேளையாயினமையின்

---

1. பிசகினது.

2. விலங்கு. 3. இருப்பிடம். 4. இவர் தண்டகன்குரு.

யாவரும் மிகவும் திகிற்பட்டனர் என்பது இறும்பூதன்றே; இத்தகைய துன்பத்தருணத்தில், அரைசப்பெருமாட்டி சுளித்தமுகத்துடன் இது சொல்லலுற்றனள்

"அடிகாள்! அரையரொருவர் தவறுசெய்ய அதனிமித்தம் குற்றமற்ற பலருக்கும் பெருஞ்சாபமிட்டனிர்; அதனுடன் தமக்கு அணுவும் பிழைக்கலாத அவையாரை அநீதியாற் சபித்ததற்கேனும் இரங்கி அருள்செய்தற்கு இப்பொழுதும் முன்வாராமற் கூடவிருக்கின்றனிர். அரையர்நிமித்தம் யான் துன்பம் நுகரவேண்டியவளாயினும் மற்றையோர்க்கு முறையன்று; அவர்கள் வருந்தல்முறையாமாயின் [2] நீயிர் உழத்தலும் முறைதான்; நும்மொழிப்படி உருமாறும் ஆடுகள் சாகபக்ஷிணிகளாமாதலின் அவற்றிற்கு உணவு வேண்டுமன்றே; அதனிமித்தம் நீயிரே இன்றுமுதல் அத்தகைய தழை [3] பொதுளிய தருவாய்மாறுக; இது நீங்கும் காலம் தம்மால் யாங்கள் பெறப்பட்ட தண்டனைவிடுதலைபெறுங்காலமே" என்றாள். உடனேயாவரும் சாபப்படி உருமாறினார்கள். புரத்தார் இவ்வுற்பாதம் ஒருங்கே நிகழ்ந்ததற்குப்பெரிதும் துன்புழந்தாராய் இன்றியமையாத சிலபொருள்களுடன் விதியின்றி வேற்றுநாட்டிற்குடியேறினர்.

## அதிகாரம். 6.

மேலன சரித்திரம் நடந்து எண்பதியாண்டு நிரம்பின. கமலமுனிவர் சாபப்படி [4] கடிநகர் முழுவதும்

1. குற்றம். 2. அனுபவித்தல். 3. நிறைந்த. 4. காவல்

காடுமுடியது. அந்தோ! ஆகாயமுட்டும் அரண்மனை யெல்லாம் அசன்ற கொடிகளும் புதர்களும் அளாவிப் பரவின. அலர்மாதன்னை அமைப்பினராகும் அரிவையர் உலவும் எழிற்கிலைபலவும் [1] கடுவன் காடு முதலிய விலங்குகளுக் குறையுளாயின. பெருங்காடாயதால சடைமுடிக்கடவுளருள் சிலர் அதனை தமக்குத் தவத் தானமாக்கொண்டனர். சுருக்கிச் சொல்லின் புதிதாய்க் காண்பார்க்கு அது முந்தி ஒருகடிநகராயிருந்ததென்றுஎட்டுணையும் அனுமானிக்க இடமில்லாதிருந்தது.

இன்னணமாக, கேரளதேசத்தரசன் ஸிதவர்மன் என்பவன் வையகம் வலஞ்செய்வான் வெளிக்கிளம்பி எங்கெங்கணுஞ்சுற்றிக் கடைசியில் வினைகூட்டுகையினால் சஞ்சீவிகிரிக்காட்டுள் நுழைந்து தன்னையே மறந்தகளிப்பினனாய் காற்புரமுங்கண்டு ஆங்குவளரும் நெடுஞ்சோலையொன்றின் உள்ளேபுகுந்தனன். அவ்வெழிற் [2] காவில் மனதைக்கவருங் காட்சிகள் அனைத்தும் மிளிர்ந்து பரவின. என்றாலும், அவன் நோக்குங்காலையில் கண்ணிற்கெதிரில் விளங்கி மனதிற்கு இன்பம் விளைக்க அரணிப்புகள்கீழ்வருவனவைகளே, நிறைந்து நெருங்கி அடர்ந்து படர்ந்து கிளைத்து தழைத்து ஒற்றைத்திகிரிப் பொற்றேர்பூட்டும் சப்தமா என்னும் பச்சைப்புரவியின் இளைப்பைத்தவிர்த்து வருடம் பன்னிரண்டுதிங்களும் தங்களில் பருவமேறலாற் பழுத்துள்ள தீங்கனிகளைக் குறையறத் தரையில் உதிர்க்கும் ஏற்றம்வாய்ந்த விருக்கங்கள் பலவும் பரவிப்பொலிந்தி

1. குரங்கு. 2. சோலை.

ருந்தன. அழகிய மலரும்பருவத்தரும்பர்கள் காவதம்
வரையில் கனமாய்வாசித்துத் தளையவிழ்ந்து விரிதலி
னால் நுகருவார்கள் நாசிக்குமிருந்த இன்பத்தைவிளை
க்கும் நாண்மலர்களில் களித்தும்பிகள் படிந்து கள்ளை
ச்சுவைத்துக் கெள்விள்ரி என்னும் பண்ணைத்தீங்
குரலெடுப்பிப் பாடிப்படிந்துகிடக்கும் மல்லிகைரோ
ஜாமுதலிய பூஞ்செடிகள் பலவும் வளர்ந்திருந்தன.
அணித்தில் விளங்கும அணிமலைச்சார்பில் தென்றல்
சிறிதுசிறிது வீசுந்தோறும் இலவங்கம் ஏலம் தக்கோ
லம் சாதிக்காய் கருப்பூரமுதலிய வாசனைத்திரவியங்
கள் பலபலவென்று உதிரு ஒலி அருந்தனவாய்ச் சிற
ந்திருந்தது. மா அடர்த்தியால் வழியின்றி இருண்மய
மாயிருக்கும் இடங்கள்தோறும் செடிகொடி பூண்டு
களை வெட்டிச் செவ்விபாதை திறந்திருந்தது. மற்றும்
சிலவிடங்களில் விருக்ககிளைகளை ஒன்ரோடொன்று
கவித்து[1] விதானம்போன்று இணைக்கப்பட்டிருந்தது.
வளைந்தும் நெளிந்தும் பரந்துஞ்செல்லும் நீரோடைக
ளென்னும் உபநதிகளில் இளவாளை வரால் கெண்
டைமுதலிய நானாவித மச்சியசாதிகள் துள்ளி விளை
யாடிக்கொண்டிருந்தன. மேலும் அவ்வுபநதிகளின்க
ரை இருமருங்கும் கழுப்பற்றைகளினால் இருப்பதற்கு
உசிதாசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஸ்நாநாதி
அனுஷ்டானங்களை முடிக்கவென்று அந்நீரோடைக
ளின் இடையிடையே சிறியசிறிய நீர்நிலைகள் உண்டா
க்கப்பட்டிருந்தன. ஆற்றலைவேகமாய்மோதி இரைச்ச
லுண்டாம்படிகாட்டுக்கற்களைக் கனமாய்க்குவித்துச்சி
லவிடங்களில் அணைகட்டியிருந்தது. சிலபெரியநீர்நிலை

1. பந்தல்மேற்கட்டி.

தோறும் தாமரையாகிய கொடிகள் படர்ந்து மனோக்கியமான மலர்களை அலர்த்தியிருந்தன. நீந்தும் இயற்கையுள்ள அன்னம் நீர்க்காக்கை சக்கிரவாகம் முதலிய புள்ளினங்கள் இணைபிரியாது மலர்வீட்டில் கண்முகிழ்த்து அயர்ந்து நித்திரை செய்திருந்தன. மனிதர் கீழ்ப்பட்டுப்படிபவைகளும் படியாதவைகளும்புல்பூண்டு மேய்பவைகளும் தழைகுழை கடிப்பவைகளுமாகிய நாலுவித விலங்கினங்கள் பசும்புற்றரையில் துள்ளிவிளையாடிக் கொண்டிருந்தன. பசித்துன்பம் சிறிதுணருங்கால் காய்கனிதானியாதிகளைக் கொந்திப்பொறுக்கி இரைகொள்ளி நிறையத்தின்றபின் இளங்கிளைகளிற்படிந்து விகற்பிக்காது என்றும் ஒரேவிதமாய்க் களிகூர்ந்து கூவும் அன்றில் முதலிய புட்களின் அடுக்கொலிகள் செவிகொடுத்துக் கேட்போர் மனதைக்கதுமெனவுருக்கும் காட்சியையுடையனவாயிருந்தன. கொஞ்சிமுதலிய தழைகளால் அழகுபெற அமைக்கப்பட்டுள்ள இலைவீடுகள் ஆங்காங்கு பொலிந்திருந்தன. முத்திமுறைமையால் அரியபெரிய இருபத்தொருமகங்களைநடத்தற்குரித்தானயாககுண்டங்களும்வேதிகைகளும் செவ்வனே நிறைந்திருந்தன.

முடிவாகச்சொல்லுமிடத்து நாட்டினிற் கழிந்துகாட்டினுள் நுழைந்து இயமாதிய எண்வகை யோகத்தின் வழிநின்று அருந்தவம் புரிந்து அவதானம் ஒழிந்தநேரத்தில் ஏகாந்தமாய்நாள்கழிப்போர்க்குவேண்டியசுகம் அனைத்தும் ஆங்கு ஒருங்கேபொருந்தியிருந்தனவென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இவற்

1. இரைப்பை.

றைவெல்லாம்ஒன்றேனும் விடாது உய்த்துநோக்கிய ஸிகவர்மன் அளக்கலா விருப்புடையனாய் ஆங்குள்ள நீரோடையொன்றின் அணித்துள்ள சந்தனமரத்தின்கீழ் இளைப்பாறுவான் படுத்து விழிகூட்டுதலினால் நித்திரையடைந்தான்.

அத்தருணத்தில் அவ் [1] வெற்புக்கரசியாகும் காமவினி என்னுந்தேவதை வனஞ்சுற்றிப் போதுகையில் அம்மரத்தடியில் [2] அனந்தல்கூரும் அரசகேசரியின் அழகினைக்கண்டு காமுறலாய்ச் சித்தமழிந்தனளாய் "ஆ! கடவுள்படைப்பிற்குத் திலதம்போன்று இங்குப்படுத்திருப்பவர் எவ்வுலகினர்? அருட்கடலன்றோ! தமது அழியாகாமம் நின்றுநிலவி உலகில் இவ்வகைப்படைப்பு என்றும் தழைக்குக. இவ்வழகாணத்தாலன்றோ கறைமிடற்றண்ணல் காமனைக்காய்ந்த கழிம்பழியினின்று விலகினார்; ஆ! சுந்தரா! இணையின்றிய தமது பேரிலக்கணத்தினை யானிப்போழ்து சம்பூரணமாய்க் காண்கிறேன்; மண்ணவரினும் விண்ணவரே வனப்பின்மிக்காரென்று எனது அறிவின்மையால் அறுதியிட்டிருந்ததற்கு அருணன்தனது ஒளியினால் அனைத்தையும் விஞ்சியிருப்பதுபோல நீர் அனைவரினும் மேம்பட்டுள்ளீர் என்பது கரதலாமலகமே. எனது மாசகன்ற மனது இன்று உம்மில் உருகியதனால் இனி மற்றொருவருக்கு உடைகுலைக்கச் சம்மதியாதென்று அறுதியிடுவேன்; என் உள்ளில்மாத்திரம் ஒன்று உம்மை இழக்கமாட்டேன் எனச்சொல்லுகின்றது; என் போல் நீயிரும் பற்றுள்ளீர் எனின் அன்றே அது பயன்பெ

1. மலை. 2. தூக்கம்மிகும்.

றாம்" என்று பெருமூச்செறிந்து ஒன்றும் செய்யத் தோன்றாதவளாய் "நல்லது! இவர் விழிக்குங்காறு எப்படியேனும் அம்மல்லிகைப்புதரில் மலர்ப்பறிப்போம்' என்று ஆங்கெய்தினள். பத்துநிமிடங்களுக்கெல்லாம துயிலினீங்கிய ஸிகவர்மன் கண்ணெதிரிலே பூக்கொய்துகொண்டு பருகுவளன்ன ஆர்வத்துடன் கண்கடையினால் தன்னையேநோக்கிக்[1] குறுமுறுவல் அரும்பும் அமுதம்போல்வாளை அகமகிழ்ந்து கண்டு இருக்கை பெயர்ந்தவனாய் அணித்திற்குறுகிப் "பொற்பாவாய்! முப்புவனமும செய்பரிதாகும்பொற்பமைந்து ஒளிரும் நின்னை மகவாய்ப்பெறுவான் தவமிழைத்தாரியாவர்? அறைதி" என்றான்.

கமலினி:—யான் இவ்வனமிருந்துவாழும் கடவுட்கணத்தைச்சேர்ந்தவள். கமலினிப்பெயரினேன்.

அரசன்:—என்கண்களுக்கு இன்று நல்விருந்து கிடைத்தமைபற்றிச் சந்தோஷியாநிரேன்.

கமலினி:—இம்மொழி தமக்குமாத்திரம் உரித்தன்று:

அரசன்:—மற்று?

கமலினி:—யானும் கூறவேண்டியவள்தான்.

அரசன்:—இது வீண்முகஸ்துதி.

கமலினி:—அப்படியாயின் தமதும் அத்தன்மைத்தே.

அரசன்:—அதனைக் கடவுள்தான் அறிவார்.

கமலினி:—எனக்கும் அவர்தான்.

1. புன்சிரிப்பு.

அரசன் :—என்கண்கள் என்னை மோசஞ்செய்யாதிருக்குமாயின் நீ அழகில் சமானரகிதை என்று இப்பொழுதும் அறுதியிடுவேன்.

கமலினி :—தம்மை முதலிற்கண்டதும் எனதுமனம் 'அழலிற்படுவெண்ணை' எனக் கரைந்துவிட்டதென்றாலும் நித்திரைக்குப் பங்கம் வருவிக்கத்தகா என்னும் அறநெறிபற்றி இதுகாறும் எதிர்நோக்கியிருந்தேன்.

அரசன் :—அழகில்சமானரகிதையாகும் உன்னில் என்மனம்கனாதல் இறும்பூதன்றே; நீ இதுகாறும் ஒருவருக்கும் [1] உரியளாந்தன்மையை ஏலாதிருத்தியேல் கேரளத்தரசனாகிய என்னை உனது காதலனாகப் பரிந்துகொள்வாயென்று வேண்டுகிறேன்.

கமலினி :—அது எனக்கும் சம்மதமேயாயினும் முந்தி இரண்டொரு விடயங்களுக்குத் தாங்கள் உடன்படவேண்டும்.

அரசன் :—ஆயின் யான் பாக்கியவந்தன்றான்.

கமலினி :—அதெப்படி?

அரசன் :—உன்னுடன் என்றும் இன்பம் நுகரக்கூடுமன்றோ?

கமலினி :—அது 'காடுதிருந்துதற்குள் ஆடைகிடைக்குமெனக்' களித்தற்போலாம்.

அரசன் :—உன்னாற்கூறப்படுவதற்கு உடன்படின்—.

1. மனைவியாகாதிருந்தால்.

கமலினி :—அது யோசித்தல்லோ தீர்மானிக்கவேண்டும்.

அரசன் :—நீ எனக்கு விரோதத்தினைக் கோறமாட்டாயன்றோ ?

கமலினி :—அதைச்சொல்வதெப்படி ?

அரசன் :—ஆயின் அஃதெத்தன்மைத்து ?

கமலினி:—முந்திப்பட்டினம் செலவுமாசையை ஒழிக்கவேண்டும்.

அரசன் :—அது உன்னினும் சிரேஷ்டமன்று.

கமலினி :—அயலமாதரைக் கனவினும் கருதத்தகா.

அரசன் :—இந்திரபட்டம்வரினும் உடன்படேன்.

கமலினி :—மறந்தேனும் உடையின்றி என்னைப்பார்க்கத்தகாது.

அரசன் :—இஃதியற்கையே.

கமலினி :—புலவூண் துறத்தல்வேண்டும்.

அரசன் :—ஒப்பினேன்.

கமலினி :—எக்காரணத்தாலேனும் இவற்றுள் தவறுதல் பிசகுதான்.

அரசன் :—சரி இதுசாமானியமே.

கமலினி: —ஒன்று பிசகினும் அருகிருத்தலை ஒழிக்க நேரிடுமே.

என்று அரசனை அணைத்து ஒரு முத்தியிட்டனள். அதுமுதல் அவர்கள் அடைந்த சுகத்திற்கு இங்

12605

திரபோகமும் நிகரன்று. இன்னணம் [1] யாண்டு இரண்டிற்கெல்லாம் கமலினி வயிற்றில் ஒருகுமரன்தோன்றினன். அவன் அழகில் மன்மதனேயாவன். அரிதிற்பயந்த தந்தைதாய் இருவரும் திரியம்பகன் எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்துவரும் நாட்களில் முன்னம் புரூரவாவினின்றும் [2] உருப்பசியைப்பிரித்த தேவர்சூழ்ச்சிபோன்று ஸிதவர்மனுக்குமொன்றுநேரிட்டது. அஃதென்னையோவெனில், மகனது மூன்றாம் ஆண்டில் நீர்த்துறைக்கு அடுத்த கொடிவீடொன்றில் அவனைவிடுத்து அரசன் நீராடுகையில் பெரும்புலியொன்று எதனையோகண்டு மருண்டு வேகமாய்க்கதறியோடிவரும் கூக்குரலைக்கேட்டு மகனுக்கு அதனால் துன்பமுண்டாமென்று அஞ்சினனாய்த் துண்ணெனக்கரைக்குவந்து வில்வளைத்து அம்பொன்றைத் தொடுத்து விடுத்தான்.

இதற்குள் [3] வயமாவின் வெங்குரல்கேட்ட கமலினி உடுக்கைவிலகியதும் அறியாது ஓடோடியுமவந்து புதல்வனைக்காணுகையில் அங்கு ஆடையின்றி நீரிற்குளித்த உடலுடனிருக்கும் தனது மணாளனைக்கண்டு அருவருத்தனளாய் அரசகேசரி! ஆதியிற் கூறியபடி யான் இனி உமது அருகிருத்தலுக்கு உரித்தன்று. ஆதலின் இனி உமது பழம்பதி செல்லலாம் என்றனள். நிர்நிமித்தமாய் நடந்த இதற்கு ஒன்றும் செய்யத்தோன்றானாய்க் கதுமென ஆடையை உடுத்து மனைவியைநோக்கி "எனது இதயேசுவரி! அசதியில் நடந்த இதனை ஒருமுறை பொறுத்தருள்வாய்" என்ற

1. வருஷம், 2. ஊர்வசி, 3. புலி.

ளும், அவள் "நாதா! அப்படியன்று; இது ஊழின் பயன். இனிக்கணமும்கூடியிருத்தல் அடாது; அல்லவென்று தமது அன்பின்மேலீட்டினால் யானிருக்கினும் கடவுளது திருவுளக்குறிப்பிற்குச் சம்மதமாகா. பட்டினம்சென்றபின்பும் என்னை நினைந்து துன்புறற்க. நம்செல்வச்சிறுவனை வளர்த்தல் நுமக்கு அரியவாகலின் என்னிடமே இருக்கற்பாலன்; தக்கபருவத்தில் தம்மைக்காண்பான்" என்று ஒருவிசை இறுகப்புல்லி முத்தியிட்டுச் சிறுவனுடன்மறைந்தாள். அனந்தரம் அரசன் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமா "உயிரில்லாவுடம்பாயினான்; எழுந்தான்; விழுந்தான்; நாடினான்; தேடினான்; என்செய்துமென்ன? நாலைந்துவைகல் கழிந்ததும் உலகத்தின்மீதே வெறுப்புற்றாய் உன்மத்தனைப்போன்று ஊரூராய் அலைந்து அறுதியில் கேரளம் சார்ந்தான்.

## அதிகாரம். 7.

கமலமுனிவரிட்ட கடுஞ்சாபப்படி பதினைந்து வைகலொழிய நூறுவருடமும் சரிவர நிறைவேறின. குருசிரேஷ்டர் ஞானயோகியார் தருமிஷ்டனான தண்டகவரசனை மீட்கவேண்டுமென்று உன்னினராகிக் கானகத்துள் நுழைந்து ஆராய்கையில் தேடியமருந்து காலின்கீழ்க் கண்டதுபோல இடையனைக்கண்டார். கானகத்துறையும் கனயோகியருள் இவரும் ஒருவரொன்றுன்னிய கோவலன் தன் இயற்கைப்படி [1] வள்ளம் ஒன்றில் பாற்பெய்து முன்னேவைத்து "அடிகள் பருகுக" என்றான்.

1. கிண்ணம்,

ஞானயோகியார்:—அப்பா யானொருகாரியங்கருதி இங்கடைந்துளேன். அதுமுற்றுப்பெறுந்தனையும் அற்பாகாரமும்வேண்டேன். நீ பருகெனக்கூறிய அன்பே அறுசுவையுண்டி அருந்தியதுபோலாம்; இதுநிற்க, இக்காலகத்துள் முதலில் உன்னைக்காணப்பெற்றது என் அதிருஷ்டமே. உன்னளவில் என்னால் யாசிக்கப்படுவதானது யான் நாடிவந்தபொருளைக் குழிக்கெடுக்க நீயும் சற்றுத்துணைநிற்கவேண்டும் என்பதே.

இடையன்:—பெரியீர்! தம் கருமத்திற்கு யான் உதவக்கூடியவளவும் உடனிருக்கிறேன் வெளியிடுவீர்.

ஞான:—சிறியமகமொன்றியற்றவேண்டும்; அவற்றிற்கு உன்னால் சேகரிக்கக்கூடியன சிலவுள. ஆனால் அவைஎத்துணையரிதோவென்று எண்ணி மனம் மறுகற்க. அவற்றுண் முதலாவதுநின் மந்தையினின்றுபெறப்படும் பால்தான். அவ்வொன்றினின்றும் நெய் தயிர் உண்டாக்குவது ஒரு அரிதன்றே? மாந்தருள் மூடரும் சோம்பருமன்றி அறிவுடையராய்ப் பிரயத்தினப்படுவார்க்கு ஏதும் அரிதென்றுசொல்ல நிமித்தம் இல்லை.

இடையன்:—ஐயன்மீர்! தமக்கு வேண்டுமளவு உதவுகிறேன்; கருமத்தைக்கடைப்பிடித்திர்; என்றான்.

உடனே குருசிரேஷ்டர் அவ்வனத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த கோவர்த்தனயோகியார் முதலிய தாபதர் சிலருக்குத் தண்டகன் நிலைமையைப் புலப்படுத்தி அவர்கள் சகாயத்தின்மீது நல்லோரை

1. தினப்படற்க.

யொன்றில் மகம் துவக்கினார். அறுதியில் ஐந்து நாள் காறும் யாகத்தைச் செவ்வனம் நிறைவேற்றி முனிவர் குழாம் புடைசூழ யாகதீர்த்தத்தினையும் அத்திருநீற்றினையும் வேதமந்திரங்களால் மணமலர், விருக்கம், ஆடு, இவற்றின்மீது தெளித்தலும் கடவுள் கட்டளைக்குமாறின்றி யாவரும் தத்தம் நிஜவுருக்கொண்டார்கள். இந்திரஜாலத்தியற்கையொத்து அக்கொடுவனமும் பொலிவுகுன்றியது. கமலமுனிவர் தண்டகன் சம்பகாவதி சோமதத்தன் சபையார் ஆகிய யாவரும் தமக்கு இத்துணை மகோபகாரியாயிருந்த குருசிரேஷ்டர்முதலிய முனிவர்களுக்கு நிரம்பவும் துதிசெலுத்தினார்கள் என்பதைச் சொல்லவும்வேண்டுமா? வணக்கமும் துதியும் மனிதரால் நடத்தக்கூடிய அவ்வளவும் அன்போடு நிறைவேறின. பிறகு குருசிரேஷ்டராகியர் தண்டகவர்மாவிற்கு மீண்டும்முடிபுனையுமாறு ஆலோசித்தார்கள். என்றாலும், அவன் கினைத்துணையும் ஒப்பினானில்லை. அவர்களை நோக்கி "ஐயன்மீர்! வெகுகாலம் முடிபுனைந்து அரசுசெலுத்தினேன்; இகத்தில் மனிதரால் நுகரத்தகும் போகம் அனைத்தினும் ஒன்றேனும் அனுபவியாது என்னிலவிடுபட்டதின்று. ஆதலின இனி எனக்குப் போகம்தெவிட்டுகின்றது. துப்பிப தம்பலத்தினைத் திரும்பவும் எடுத்துப்புஜித்தல்முறைமையன்றே. துன்பம்நிறைந்த இவ்வுலகில் தவஞ்செய்தலையன்றிப் பிறிதொன்றற்கும் மனம் ருசிக்கிலேன்" என்றான்.

அவ்வற்றத்தில் கோவர்த்தனயோகியாரிடம் அரசர்க்கு உரித்தாகும் அருங்கலைபலவும் பயின்ற கமலி

ணியின் காண்முளையாகும் திரியம்பகன் என்பான் வேடிக்கை நிமித்தம் அவ்விடம் வருகையில் கோவர்த்தன யோகியார் தண்டகனை நோக்கி "அண்ணால்! உமக்குப்போகம் தெவிட்டின் இதோ நிற்கும் அரசகுமாரன் இலக்கணம் பலவும் நிரம்பிப் பரிக்கும்ஆற்றல் வாய்ந்திருக்கின்றமையின் உமது அரசினை இவன்றலையிருத்திச்செலுத்தீர்" என்று அவன் வரலாற்றினைப்புகன்றார்.

உடனே தண்டகன் களித்தவனாய்த் "தவத்தினீர்! அங்ஙனே எல்லீரும் சேர்ந்து முடிபுனைமின்" என்றதும் முனிவர் யாவரும் மறையொலிகிளப்பத் தொண்டைவள நாட்டிற்குத் திரியம்பகன் அரசனாக்கப்பட்டான். மிருகப்படிவாயிருந்த வேந்தனுக்கு மானிடப் படிவளித்த வல்லமையுடையார் அவ்வனத்தினை முன்னைய நகராக்குதல் ஒரு பெரிதன்றே! கடுங்காடாயதால் அதனை முந்தித்தமக்குத் தவதானமாக்கொண்ட சடிலதாபதர் பலரும் இனி ஏகாந்தத்திற்கு அது அனுகூலிக்காதென்று விட்டு விலகினார்கள். தண்டகனாதியரும் அரசகுமாரனுக்கு ஆசிபுகன்று குருசிரேஷ்டருடன் தவஞ்செய்வான் வடதிக்கினை நாடிச்சென்றார்கள். கோவர்த்தன யோகியார் ஒருவர்மாத்திரம் திரியம்பகன் பெருக்கத்தைக்கருதி அவன் வேண்டுகோளின்மீது அவ்விடத்திலேயே தங்கும்படி நேரிட்டது. யாககுண்டத்தைச் சோதிக்கும்போழ்து எவ்வளவு குறைக்கினும் வளர்ந்துவரும் தன்மைத்தாகிய [1] சுவணப்படிமையொன்று காணப்பட்டது. நாளடைவில் முன்னையவண்ணம் குடிகள் யாவரும்

1. பொன் விக்கிரகம்.

வந்து குடியேறினார்கள். அரசகுமாரன் தனது அன்னையாகிய கமலினியாரது கருணையினால் பூதவாகனனாகி நிதமும் அந்தணர் ஆயிரவர்க்கு அறுசுவையுடன் அன்னம் படைத்துத் தனது நகரத்திலுள்ள முந்நூற்றறுபது கடவுட்கோட்டங்களுக்கும் விழாச்சிறப்பு முதலன நடத்துவதில் தவறாது அரசுபுரிந்துவந்தான். மேலும் அக்கடிநகரினைக் காவல்கொள்வான் அவனது அன்னையே தேவதையாயினாள். தண்டகன் காலத்தினும் இவன்காலம் பெருமையுடைத் தென்றே சொல்லலாம். தனதுதோள்வலியால் அனேகம் குறுநிலமன்னரைப் புறங்கண்டு தொண்டைநாட்டிற்கெல்லாம் தானேதலைவனாயினான். பொற்பதுமை இருக்குங்காறும் நிலவிற்குச் சிறிதும் முட்டுப்பாடில்லையன்றே; அதுவும் குறைகளக்குறைக்கவளர்ந்துகொண்டே வந்தது. அறம் செழிப்படைதலால் விளைநிலங்களும் செம்மையாய்ப் பலித்தன மேலும் கோவர்த்தனயோகியாரே காரியம் பலவும் உட்புகுந்து நடத்திவருவாராயினார்.

இவ்வகைச்சிறப்புடன் சஞ்சீவிபுரத்தைச் சுற்றிலுமுள்ள [1] திந்திருணிவனம் எண்ணாயிரம் ஐயனார் வேட்டைவலம் பொன்னூத்தூர் துர்க்கம் சேற்றுப்பட்டு தேசூர் என்னுமிடங்களில் அரசர் வாசஞ்செய்தற்குரித்தான கோட்டைமுதலியன எழுப்பித் தனது மந்திரியர்களுக்குள் எல்லாக்குணமும் நிறைந்து பொலியும் சூரியகேது சோமகேது சஜமுகன் சோமநாதன் சுவர்ணசித்தி திம்மன் துன்முகன் தசா

1. திண்டிவனம்.

ங்கன்; என்னும் அமைச்சர் எண்மரைத் தெரிந்தெடுத்து முறைமேய அவ்வச சிறும்பட்டினத்தில் இருந்து நீதிநடத்துமாறு தனக்குப் பிரதிநிதிகளாக்கியனுப்பினான். சிலதிங்களுக்கெல்லாம் கலிங்கதேசத்தரசன் மகளிர் கமேரணுகை காந்திமதி காதம்பரி என்ற மூவரையும் ஒருங்கே அக்கினிசாட்சியாகக் கடிமணம் புரிந்து அன்னாருடன் ஒற்றுமையாய் வாழ்ந்து குடிகளைக் காத்துவந்தான் நீதியால் தமக்குச் சுகம்பெருகப் பெருக அரசனிடத்தில் நாள்நாளும் குடிகளுக்கு அன்பு வளரத்தலைப்பட்டது. குருசிரேஷ்டரும் சிறுபாடி என்கிற மடத்தில் இருந்துகொண்டு யானையை நடத்தும் பாகனைப்போன்று திரியம்பகனை அறநெறியில் நடத்திவந்தார். அன்பர்காள்! இம்மன்னவன் காலத்தில் நடந்த ஆச்சரியமாகிய சரிதம் பலவிருப்பினும் முக்கியமான ஒன்றைமாத்திரம் உங்களுக்கென ஈங்கெடுத்து எழுதுகின்றேன்.

பாலையர் என்கிற சைவசித்தர் ஒருவர் ஓர்நாள் கோவர்த்தனயோகியாரைக் காணும்பொருட்டு அவர்மடத்திற்கு வந்து குருசிரேஷ்டர் நிஷ்டையிலிருப்பது கண்டு அவர் எழுந்திருக்குங்காலம் அணித்தில் இருந்த ஒரு [1] தமாலவிருக்கத்தடியில் இளைப்பாறியிருந்தார். அவ்வற்றத்தில் மகமது மதத்தைச்சார்ந்த பகீர் ஒருவன் அவர் சந்நிதியடைந்து மண்டியிட்டுச் சலாம் செய்து "ஆண்டவன் தமக்கு நன்மைபுரிக. என்று இதனைச் சொல்வானாயினான்.

---

1, பச்சிலைமரம்

"எனதுஜன்மராஜியம் அரேபியா; தஸ்தகிரி என்று என்னை எல்லோரும் அழைப்பார்கள்; தேயங்கள்தோறும் சென்று மகமதுமதத்தைத் தாபிப்பதே எனது தொழில். யான் மக்காவிற்குமுக்காலும்சென்றுளேன்; ஐந்தாறு தினங்களாய் என் மதத்தினர் ஒருவரையும் காணப்பெறாததால் புசிப்பின்றிப் பட்டினியால் வருந்தலாயினேன்; இப்பொழுதுமாத்திரம்உண்டிகொள்ளத்தவறின் சற்றுநேரத்திற்கெல்லாம் ஆண்டவன் நீழலில் அடைக்கலமாவது நிச்சயம்; ஆதலின் எனது பசிநோய்தணிய ஏதேனும் உண்டியுதவின் தமக்குக் கோடிபுண்ணியமுண்டு" என்றான்.

பாலையர்:-எல்லாந்துறந்து சந்நியாசியாகி வனத்திலிருக்கும் யான் நினக்கென்ன அளிக்கப்போகிறேன்; யான் பருகுவது கள்ளிப்பால்; அதுவோ உனக்குச் சகிக்கா; வேண்டுமாயின் ஒருவரையும் யாசியாது அதனை நீயே சுதாவில் பெற்றுக்கொள்ளலாம்.

பக்கீர்:—பெரியீர்! எனக்குத் தம்மாற்குறித்தவண்ணம் அதனைச்சீரணிப்பித்துக்கொள்ளும்சக்தி கிடையா; அல்லவென்று இருப்பினும் யான் மாமிசமன்றி வேறொன்றையும் புசியேன்; இப்பட்டினத்தரசன் இந்துசாஸ்திரத்தில் விசேஷ பக்திவைத்திருக்கின்றமையின் எனக்கு மாமிசத்துடன் உண்டியளிக்க ஒருகாலும் உடன்படமாட்டான்; தாமோ ஒவ்வொருமதத்தின் வாய்மையையும்நன்றாய்த் தெரிந்திருக்கின்றனிர். ஆதலின் தமக்கு விரிக்கக்கிடப்பன யாவுள; என்றாலும் அவசியமான இரண்டொன்றைமாத்திரம் சொல்லுகி

றேன்; கடவுள் மனிதரின் உபயோகத்திற்கென்றே எல்லாவற்றையும்படைத்திருக்கிறார்; அதனிலும் ஆடு மாடு முதலிய சிலவிலங்கின் வகுப்புகளும் மீன்முதலிய சில்வகை நீர்வாழ்வகுப்புகளும் குருவிமுதலிய சில்வகைப் பறவைவகுப்புகளும் மனிதரது உணவிற்கென்றே ஏற்பட்டுள்ளன; எனது இவ்வார்த்தையின் ஐயப்பாட்டினை ஒழித்தலுக்கு உங்களில் மனு என்னும் மகானால் கூறப்பட்ட நீதி நூலே சாட்சி; எல்லாப்பிராணிகளினும் முதன்மையாகிய மனிதனே மேற்கூறிய நீதிநூல்களையறிந்து தன்னினும் தாழ்ந்ததாகிய யாவற்றினையும் அவ்வவற்றிற்கேற்றவாறு உபயோகிக்கக் கடமைப்பட்டிருக்கிறான்; இங்ஙனம் நடவாதவன் எவனாயினும் அவனுக்குத் தேவதண்டனை விட்டொழிய வகையில்லை.

பாலையர் :—நீ கூறியதில் ஐயப்பாடின்று; பொதுவாய் உள்ளதுதான்; என்றாலும், சிறப்பில் இன்னவகுப்பினர்க்கு இன்னதுதானென்று வேறு விதிக்கப்பட்டிருக்கின்றதன்றே; ஆயினும் உனது உட்கோளென்னை ?

பகீர் :—என் பசிநோய் தணியுமாறு எதிரில் மேய்ந்துகொண்டிருக்கும் பசுக்களுள் ஒன்றினைத் தெரிந்தளிப்பீர் என்பதுதான்.

பாலையர் :—எங்கள் மதத்தில் அதனைக் கனவினும் கருதப்படா.

பகீர் :—ஆயின் தேவசந்நிதானம் எனக்கு அணித்துதான்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.

பாலேயர் :— என்றைக்கிருக்கினும் அது ஒழிந்த தன்றே.

பகீர் :— நான் அதற்காகத் துன்புற்றேனின்று. இறக்குங்காலத்தில் குறையொன்றும் கூடா". இன்றேல் அதனை நுகர்தற்கென்று மீட்டும் ஒருமுறை பிறப்பெய்தல் வேண்டும்.

பாலேயர்:— இஃதுண்மை.

பகீர்— அதற்காகவன்றே தம்மை வேண்டுவது.

பாலேயர்:— அது என்னுடையதன்றே.

பகீர்:— அதைப்பற்றி எனக்கென்னை?

பாலேயர்— என்னதல்லாத ஒன்றை நானெப்படி உனக்குக்கொடுத்தல் இயலும்.

பகீர்— அதற்கு நீதிபதிவேறேயுளன்" என்றான். பிறகு பாலேயர் தன்னுள் யோசித்ததாவது "கடவுள் யாவற்றினும் நிறைந்திருக்கிறார்; பசுவைக்கொன்ற பின்னரும் அதைவிட்டு நீங்கினாரில்லை. சேமித்தற்கு அரிதாகிய உடலினை வறிதே பாழ்படுத்தாது ஒரு சீவனுக்கு உணவாக்குதல் நன்மை யுடைத்தே; ஆயினும் அதனை வதிப்பதற்கு நாம் காரணமாதல் கூடாதன்றே; அதுவே ஒப்பின் நலம். அஃதெங்ஙனம்? எப்படியாயினும் யாசித்தவனுக்கு இல்லையெனல் நன்றன்று. அதற்காக இவன் பசிநோய் நீங்கியபின் பசுவை மீட்டும்எழுப்பிவிடின் அதனால்வரும்பாபம் நம்மைத் தொடரமாட்டாதன்றோ ?" என்று இவைபோல்வன பலவும் எண்ணினவராய் அவனை விளித்துப், "பகீர்!

இதோ எதிரில் மேய்ந்துகொண்டிருக்கும் பசுக்களுள் ஒன்றை உனக்கு உணவாகத் தெரிந்தெடுத்துக் கொள்'' என்றார். அவ்வளவுதான் தாமதம்[1] புலவாய் மேற்றவும் புலிப்போத்தென உடனே ஒன்றின்மேற் பாய்ந்து இரண்டு கூறுகைக்கெல்லாம் தனது கொடும் பசிப்பிணியின்றும் நீங்கினான். இறந்துபோகும் அற்றத்தில் இருக்க தனக்கு ஊண் உதவி உயிர்ப்பித்தனர் என்னும் களிப்பால் ஆரபிபாடையில் சில வாழ்த்துக்களைக் கூறிப் பூங்கொத்தொன்றினைப் பாலையர் கரத்தளித்துச் சென்றான் பகீர்.

இதற்குள் பசுவிறக்கப்பட்டமையை ஒற்றர் மூலமாய்த்தெரிந்த திரியம்பகவரசன் கடுங்கதம் தாங்கி குருசிரேஷ்டர் மடத்திற்கு வந்துநோக்குகையில் பகீருக்கு உணவாக்கப்பட்டபசுவானதுகன்றுடன் பசும்புல் மேய்ந்துகொண்டிருந்தது. அத்தருணம் அரசன் களிப்படைந்தான் என்பதில் ஆச்சரியமில்லையன்றே; ஆங்குப்[2] பாடலீ விருக்கத்தின்கீழ் இனிதிருந்த பாலையருக்கு வந்தனைபுரிந்து "ஐயன்மீர்! இப்பசு உயிர்ப்பெற்ற விதத்தினை அடியனுக்கருளுகிர்" என்றான்.

உடனே பாலையர் நடந்த செய்தியை விளங்கக் கூறி அரையனது ஐயப்பாட்டினை அகலவடித்தார்.

சற்றுநேரத்திற்கெல்லாம் குருசிரேஷ்டர் நிஷ்டை கலைந்ததும் பாலையர் அவரை வணங்கி ஒருவருக்கொருவர் அளவளாவியிருக்கையில் கொற்றவன், கோவர்த்தனமீயாகியார்க்குப் பசுவின் செய்தியைப் புகன்று நின்றான். குருசிரேஷ்டர் அவனை நோக்கி அண்ணல்!

1. மான் 2 பாதிரிமரம்.

இப்பெரியார்க்கு அரிது ஒன்றுமில்லை. வேண்டுவன வேண்டியபடிச் செவ்வனே நடத்துகிறார்; இத்தகையார்தரிசனை கிடைத்தலும் பூருவபுண்ணியப்பலனே யாகும். உலகத்தினைச் சீர்திருத்தும்பொருட்டு அவதரிக்கும் திவ்வியபுருடர்களுள் இவரொருவர். இவர் இங்கெழுந்தருளியது நின் நாடுசெய்த நற்றவம் எனத்தெளியக்கடவாய்" என்றார். உடனே திரியம்பகன் அவருக்கு வந்தனை புரிந்து, "ஐய! அடியன் வளவில் இன்று அன்னமேற்றுக்கொள்ளுமாறு அநுக்கிரகிக்கப் பிரார்த்திக்கிறேன்" என்று அவரை அப்பொழுதே அதிதியாகப்பெற்றான்; அன்றைய இரவு பாலையருக்கும் குருசிரேஷ்டருக்கும் நடந்தவிருந்தின் விமர்சையினைச் சேடனுக்கும் சொல்லத்தரமன்று. இருவரும் புஜிப்பெடுத்தானபின் பொற்பீடமொன்றில் வீற்றிருக்கச் செய்து கூப்பிய கரத்தனாகும் அரசன் அவரை நோக்கி "ஐயன்மீர்! அடியனால் ஆகும் புன்றொழில் ஏதேனும் இருக்கின் பணிக்கக்கடவது" என்றான்.

பாலையர் :—"நிருப! நின்னாட்டினைச் சேர்ந்த எனது தவத்தானமாகும் மயூராசலத்தில் முருகக்கடவுளுக்குக் கோட்டம் ஒன்று எழுப்பித்தருக" என்றார். பின்பு இருமதிக்கெல்லாம் அரசன் அவ்வண்ணமே நிறைவேற்றியதுடன் கீழ்க்கடலின் அணித்தாகும் சிலபதிகளை அத்திருக்கோயிலின் ஆதீனமாக்கினன். இவ்வண்ணம் திரியம்பகமகாராஜன் அறநெறி பிசகிலனாய்ச் சிலகாலம் அரசியற்றியதன்மேல் தனது பட்டமகிஷியாகும் கரேணுகைவயிற்றுதித்த சாந்தசீல சற்

குணன் என்பவனுக்கு முடிகவித்துத் தவஞ்செய்வான் வனஞ்சென்றனன்.

பிறகு முறையே வரிசைக்கிரமமாக சூரசேனன் மேகவர்ணன் விரூபாக்ஷன் திரியம்பகன் முதலிய ஒன்பதின்மர் சஞ்சீவிகிரியினை ராஜதானியாகக்கொண்டு நீதி புரிந்து வந்தனர். இவர்களில் கடையோனாகிய விஜயவர்மன் என்பவனுக்குச் சந்ததியில்லாமையால் அவனுக்குப்பின் குறுநிலமன்னருட்சிலர் தத்தம் தோள்வலிக்கியைந்தவாறு சிலசில பகுதிகளை அடக்கி ஆண்டுவந்தார்கள். இவர்கள் யாவரும் ஒருகுலத்தினர் அல்லர்; ஒரு ஒழுக்கினர் அல்லர்; ஒரு சமயத்தினரும் அலலர்; அறுதியில் கலிபிறந்த 2324-வது வருடத்தில் நேபாளதேசத்தரசன் சூரசிங்குஎன்பவன் தனது தோள்வலியாற் சஞ்சீவிகிரியினைச் சொந்தமாக்கி அதனுள் சில பகுதிகளை அடக்கியாண்டுவந்தான். பின்பு படிப்படியாக இவன் மரபினர் பதினெழுவர் முறையே அரசு புரிந்து வந்தனர். இப்பதினெழுவரைப்பற்றி விசேஷித்த சரிதம் ஒன்றும்காணப்படவில்லை. ஆனால் பதினெட்டாவதாகக்கடைசியில் நீதிபுரிந்த தேசிங்கு என்பவனது வீரச்செய்கையைப்பற்றி விசேஷித்துக் கூறப்பட்டிருக்கின்றதாதலின் அவனது சரித்திரத்தை மாத்திரம் கீழே கொஞ்சம் சொல்லுகிறேன்.

## அதிகாரம் 8.

உலகின்கண் பயன்கருதித் தவம்புரிவார்க்கு உறையுளாய் நானாவித விருக்கங்களினாலும் ஒன்றற்கொன்று விகற்பமாயுள்ள எண்ணிறந்த சீவகோடிகளாலும், தெய்வத்தன்மை பொருந்திய கங்கையாதி புண்

ணிய நதிகளாலும் நிறைந்து முக்கண் மூர்த்தியாகிய பரமசிவத்தின் இடப்பாகத்தினை என்றும் பிரியாது வாழும் பிராட்டியாரைத் தனது அருமைப் புதல்வி யாய்ப்பெற்றுப் பிரக்கியாதி யடைந்த இமாசலம் என் னும பனிவரையின்கண் அணிமா முதலிய எண்வகை ச்சித்தியினும் கைவந்த ஜோகீந்திர மச்சியதேவ் என் னும் இயற்பெயர் வாய்ந்த ஒரு சித்தபுருடர் உலாவி வரும்போது கண்ணொளி மழுங்கும் காந்தியுடைத் தாய்த் தேவமணி முதலிய நற்சுழிகளுக் குறைவிட ளுய் அழகு குடியிருக்கும் அரும்புரவியொன்று விண் ணுட்டினைத் துறந்து அவ்வொண்மலைச்சாரலில் கூரி யவாகிய நுனிக்களுடன் வளர்ந்துகிடக்கும் அறுகம்புற் கஃள மேய்வனபோன்று தனது நாவினைச் சுலாவிக் கொண்டிருக்கும் நேர்மையினைக் கண்ணுற்று மனத டங்காப்பூரிப்பு மென்மேலும் வளர "என்னே! சூரிய னது ஒற்றைத்திகிரித்தேர் இழுக்கும் சப்தமா என் னும் பச்சைப்புரவியையும் பாற்கடற் பிறந்த உச்ச யிச்சிரவம் என்னும வெள்ளைப்புரவியையும் தனது வனப்பில் தாழ்த்துகிற்கும் இத்திப்பியக் குதிரையைச் செலுத்துவோன் தேவதைகளினும் சிறந்தோனுவன்" என்று பழுதுபடாத தனது திருவுள்ளத்தெண்ணி அப் பொற்பரியை மீட்டும் பொன்னுலகடையவிடாது மந் திரத்தாம்பினுற் பிணித்துத் தற்காலம் டில்லி என்று வழங்கும் அத்தினபுரத்தை அரசுசெலுத்திவந்த மகமது பாக்ஷாவிற்கு அளிக்கவேண்டுமென்று சன வடாத்தியுள்ளதாய்ப் பலவகைத்தொழிறகும உறை விடமான அப்பெருப்பட்டினத்திறகு நடத்திக்கொ ண்டுவந்தார். எவ்வகைத்தாகிய அழித்தற்கரிய பேரா

ற்றலுடையோரும் மந்திரத்தினால் மயங்குறுவாரென்பது வியப்பன்றே! எல்லாம் வல்ல அச்சித்தர் ஆங்கு விழித்தகண் இமைக்காது கைவாளுடன் காவற்புரிபுரியும் துவாரபாலகரால் அரசன் கட்டளைபெற்றுக் கொலுக்கூடம் சென்று நின்றார்.

இயற்கையிலேயே குதிரைச்சவாரியில் இச்சை மேற்கொண்ட அம்முடிமன்னவன் யோகியாரது முகப்பொலிவினையும் பொற்பரியின் இலக்கணத்தினையும் கண்ணாரக்கண்டு களிக்கடலாழ்ந்தி அவருக்குச் செய்யத்தக்கன பலவும் புரிந்து வணக்கத்துடன் "அடிகள் வருகை நன்றாகுக; ஒருவன் இவ்வுலகத்தடையக்கூடிய பயன் யாவற்றினையும் தமது திருமுகத்தினின்றெழும் கருணை ஒன்றேகூட்டுவிக்குமெனின் வேறு தவத்தினாற் பெறக்கூடியதென்னவிருக்கிறது" என்றான்.

யோகியார் :—இராஜதிலக! யான் தேசசஞ்சாரமே தொழிலாக்கொண்டு காலங்கழிக்கும் ஓர் தாபதன்; இன்று பனிவரைப்பக்கம் செல்லுகையில் பேரழகுவாய்ந்த இப்பொற்பரியினைக்கண்டு உம்மிடம் கொணர்ந்தேன். இப்புரவியினால் பின்னைக்குச் சிலகாரியங்கள் நடக்கவிருக்கிறது; மேலும் இது இவ்வுலகத்தினதன்று; பொன்னாட்டிற்பிறந்தது. உலகில் ஒருவராலும் அடக்கமுடியாவாற்றல் வாய்ந்தது. மந்திரக் கயிற்றினாற் கட்டுண்டு நிற்கும் இதனது மற்றும் இலக்கணங்களை ருஜுவிற்காணும் உமக்கு விசேஷித்துக் கூறவேண்டியதில்லை; இதனை ஏறி நடத்தும் ஆற்றல் வாய்ந்தோர் இப்போழ்து ஒருவருமிலர்; சின்னாட்களு

க்குப்பின் தென்னாட்டில் இராஜ பாரம்பரியத்தில் ஓர் இளஞ்சிங்கம் உதிக்கும்; இதுபோன்ற எண்ணிறந்த பரிகளை அடக்கியாளும் திறல் அவனுக்கு இளம்பருவத்திலேயே உண்டாகும்; இக்கலியுகத்தில் யாவருக்கும் மேலானவன் அவனே; தேயமெங்கணும் தற்காலம் நம்மாணை சென்று வருதலின் இதனை நீரே கைப்பற்றி ஏறி நடத்தும் அற்புதபுருடனுக்கு இதனைப் பரிசாக அளிக்கக் கடவீர்; சிறிது நாட்களில் அழகே உருவெடுத்தது போன்ற பெண்குழந்தையொன்று உமக்குக் கிடைக்கும். அக்குமரியும் அன்னானுக்கேயுரியள்; இதன்றி வேறு எவ்வகைத்தான கைம்மாறும் கருதிக்கொணர்ந்தவனல்லேன்.

பாகஷா:— தவத்தீர்! தம்மால் இவ்வளவு சிறப்பித்துப் பேசும் பெற்றிவாய்ந்த இத்தெய்வப்புரவி எனக்குக்கிடைத்தது பற்றிச் சந்தோஷியாநின்றேன். மற்றவை தங்கள் கட்டளைப்படியேயாகுக; என்று வணங்கினான். பிறகு யோகியார் அக்குதிரையைத் தக்கதாகியஓரிடத்தில் [1] கரும்பொற் கயிற்றினாற்பிணித்து மந்திரத்தாம்பை மெல்லெனத்தளர்த்தினார். இதுகாறும் மயக்கத்தில் ஆழ்ந்திக்கிடந்த [2] அத்துரகம் தன்னை இருப்புக்கயிற்றில் பிணித்துக்காவற்புரிவதைக்கண்ணுற்று கடுங்கதம் தாங்கி அண்டமிடிந்தாலொப்பக்கனைக்கத் தலைப்பட்டது. அந்தோ! பாவம்!! முன்னை விராடனூரில் பின்னைத்தன்மை மாறாத பச்சைச்சிறுவன் உத்தரன் செலுத்தும் இரதத்தின்மீது முராரி மைத்துனன் அருச்சுனன் தொனித்த சங்கத்தினைக்காட்டினும் இக்கு

1. இரும்பு. 2. அக்குதிரை.

ரல் மிகவும் வலியுடைத்து என்றால் பிறிது விரித்துக் கூறுவது என்னை? அப்பெருநகரில் யோகியார் ஒருவரன்றி அறிவிழந்து நிலைதலையாதார் மருந்திற்கும் கிடைப்பது அரிதாய்விட்டது. புறத்தில் இருந்தவர்களே பொறிகலங்கித் துணுக்குற்றனரென்றால் மிகவும் சமீபத்தில் இருந்த அரசனாதியர் தன்மையை விரிக்கவும் வேண்டுமோ? இரண்டு கடிகை கழிந்ததும் அவரவர் நல்லறிவுதலைக்கொண்டு இத்தகைய உற்பாதத்தினின்றும் தங்களைத் தப்பவைத்த கடவுளைக் கைதொழுது நாமம் பரவினார்கள். அதன்பின் அச்சித்த புருடர் பாகூராவினை நோக்கி "அண்ணால்! குதிரையின் ஆற்றலைக்கண்ணிற்கண்டீரன்றோ? மறந்தேனும் இதனை ஏறி நடத்தவென்று நினையற்க. யாமே சொல்லிய இவ்வொன்றை மறக்கும் நாளே நீர் *மரிக்கும் நாள்." என்று திடீரென மறைந்தனர். பாகூரா அவர் மறைந்ததுகண்டு அவரைக்கேவலம் கடவுளென்றே தீர்மானித்துத் தெய்வப்புரவிக்கு ஒரு தீங்கும் வராவொட்டாது. மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாத்து வந்தான்.

இன்னணம் சிலநாள் கழிந்தபின்பு டில்லியரசன் தனது மந்திரசாலையில் ஒருநாள் யாவரையும் ஒருங்கு வரச்செய்து குதிரைவிஷயத்தைப்பற்றி ஆராய்கையில் ஆங்கு இருந்த அமைச்சருள் ஒருவன் எழுந்து "அண்ணலே! அடியேன் புல்லறிவிற்கு எட்டுந்துணையும் இத்தகைய போராற்றல்வாய்ந்தோர் நம்தேயத்திற்கு அணித்தில் உளரெனத்தோற்றவில்லை. ஆனால் இதற்குத்தெற்கில் சற்றேறக்குறைய முந்நூறு யோச

லைக்கப்புறத்துள்ள சஞ்சீவிபுரியில் நீதிசெலுத்தும் தேரணிசிங்கு தரணிசிங்கு என்பார் சகோதரர் இருவருளர்; அவ்விருவரும் அற்புதவல்லமை பொருந்தினோரெனப் பல்லோரானும் போசக்கேட்டுளேன். ஆதலின் அவ்விருவருடன் நம் ஆணைக்குள்ளாம் அரசர் ஏனையரையும ஒருங்குதருவிக்கின் ஒருகால் அனுகூலிக்கலாம்போலுமென்முன். அக்கூற்று யுக்தமென்று யாவரும் ஒப்புக்கொண்டமையால் அரசன் அங்ஙனேயாகவென்று தேயமெங்கணும் திருமுகம் வரைந்துவிடுத்தான். காற்றினும் பறக்கும் ஆற்றலையாய்ந்த அவ்வொற்றருக்குள் மூன்றுதிக்கினும் சென்றவர்போக நின்றவருட்சிலர் நெறிகள் பலவும் நீந்தித் தக்கணம்நாடிச் சஞ்சீவிகிரியினை அணைந்து வாயிலார் மொழியினால் அரசவையடைந்து அடியிணையில்வீழ்ந்து திருமுகத்தை நீட்டினார்கள். இதற்கெனவே நியமிக்கப்பட்ட காரியஸ்தன் ஒருவன் அதனைப் பின்வருமாறு படிக்கலாயினன்.

"நிலமாமகளின் நெற்றியிற்றீட்டிய திலகம்போலும் செழுமைத்தாகிய டில்லியம்புரியில் விளங்கிடும் அரியணை ஏறி அரசுசெய் இறைவன் திருமுகம்; நீர்வளமெங்கணும் நிறைந்து செய்யெலாம் கார்நிறம் கடுக்கும் கவின்செய்வெண்தோட்டுப் பைங்கூழ்களித்துப் பசுங்கதிர்முற்றிச் செந்நெற்பழுக்கும்செஞ்சியையாளும் தேரணிசிங்கெனும் தோன்றலன் காண்க.

வில்லுமிழாரம்விளங்கப்பூட்டிக்கல்லுறழ்தோள் இளங்காளையருடனே இன்னே தாழ்க்காது இறை

மையிற் போந்து என்னைக்கவுரவத்து இருத்துக. மன்னே"

இப்படிக்கு } மகமது பாஷா.
அரசகேசரி }

என்று படிக்கக்கேட்டுத் தேரணிசிங்கு மிகவும்களித்து வந்ததூதுவர்க்கு வெகுமதி புரிந்து பிரயாணத்திற்கு வேண்டுவனயாவும் திட்டம் செய்யுமாறு அமைச்சருக்குக் கட்டளையிட்டுக் கொலுக் கலைந்தனன்.

பிற்றைநாள் அதிகாலையில் தேரணிசிங்கு அந்தப்புரமெய்தி இராமபாய் என்னும் தனது மனைவிக்குப் பிரயாணம் செல்லும் கருத்தினை விளக்கினான்.

இராஜப்பெருமாட்டி:—"ஆரியரே! நிறைந்த கருப்பிணியாகும் இத்தருதியில் என்னைப்பிரியுமாறு கடவுள் அருளிருக்கின் செய்யத்தக்கனயாவுள. கூடுமாயின் இளவரசரையேனும் நிறுத்தப்பாருங்கள்; இன்றேல் எவ்வுயிரும் காப்பான் ஒருவனே துணைபுரிவானாக; பிரயாணவயர்ச்சியில் தங்களைச் செவ்வனேபாதுகாத்துக்கொள்ளுதிர்" என்றாள்.

தேரணி:— "எனது அரியபொற்கொடி! நம்மினும் உயர்ந்தானாகும் அரையன் கட்டளையை மறுத்தல் எங்ஙனம் தியாகன்று விடையளிப்பாய்?" என்று தனது கரத்தினால் ஒருவிசை இறுகத்தழுவி முத்தியிட்டுப் பயணமாயினான்.

## அதிகாரம் 9.

திங்கள் இரண்டிற்கெல்லாம் தேரணிசிங்கு தரணிசிங்கு இருவரும் உரித்தான படைகளுடன் டில்லி

ப்பட்டினம் வந்துசேர்ந்தார்கள். பின்பு ஒருநாள் பாக்ஷாவானவன் தனதுசபையில் நிறைந்திருக்கும் உலகமன்னவர் பலரையும் உய்த்து நோக்கிச் சொல்லியதாவது.

"அடக்கமும் அன்பும் பொருந்திய எனது அரிய வரசர்காள்! பாற்கடலிற்பிறந்த வெள்ளைப்புரவியும் வெட்கும் இலக்கணம் வாய்ந்த பசும்புரவியொன்று என்னிடத்தில் இருக்கிறது. உங்களில்அக்குதிரையை நடத்தித் திரும்புவோருக்கு எழுபதுபாரம் தங்கம் வெகுமதிசெய்வதோடு பரிமாவினையும் உரித்தாக்குகிறேன்" என்பதுதான்.

இச்சொல் பாக்ஷாவாயிலிருந்துவெளிப்படு முன்னமேயே "இவ்வளவு வெகுமதியும் முதலிற் சவாரிசெய்தவன் எங்கு அடித்துக்கொண்டு போகப் போகிறானோ" என்று ஒருவர் முன்னொருவராக நான் முன்னே நான்முன்னே யென்று குதித்தோடத்தலைப்பட்டனர். டில்லியரசன் ஓங்கின்றவரைக் கையமர்த்தி "அரசர்காள்! இதைக்கவனியுங்கள்; இத்துணை உயர்ந்த வெகுமதியினை ஏதேனும்ஒருநிபந்தனையின்றி அடைதல் முறைமையன்று; ஆதலின் சொற்சோர்வுபட்டு நடத்தவல்லமையின்றித் திரும்பிவிடின் பன்னீராண்டு காலும் பெருஞ்சிறை இருக்க நேரிடும்" என்றான். பேராசை கொண்டார் செவியில் இதெல்லாம்உட்செலமாட்டாதென்பது வியப்பன்றே; அம்மாற்றத்தைப்பொருள் செய்தார் ஒருவருமில்லை. குதிரைப் பந்திசென்ற ஐந்து நிமிடத்திற்கெல்லாம்அதன்கனைப் பொலி செவிப்பட்டதும் ஏறச்சென்றார் யாவரும்

"உருமுக்குரல் கேட்ட உரகக்கூட்டம்" போன்றனர். பிறகு ஒருவாறுதேறித் தங்களை அன்று தப்பவைத்த கடவுளைத்துதித்துப் பாகூஷாவினது பாதத்தில் விழுந்து "அண்ணல்! இப்பொற்பரியை நடத்தும் பேராற்றலுடையான் இவ்வுலகத்தில் இல்லை. உபபரேனும் கும்பிட்டுச் செல்வதல்லது ஏறிநடத்த இம்மியும் துணியாத எழிற்புரவியினைச் செலுத்துவதற்குயாங்கள் ஏழுபிறப்பு எடுக்கினும் முடியாது. ஆதலின் மேல் நடக்கவேண்டியதற்கு அவிடத்திய கட்டளையை எதிர்பார்க்கிறோம்" என்றார்கள்.

டில்லியரசன்:—"நிருபர்காள்! உங்கள் செய்கை இதுவாயின் முன்குறித்தபடி பன்னீராண்டுகாறும் பெருஞ்சிறை இருந்து செல்லுதிர்; "என்று கூறினன். அரசர்கள் யாவரும் மறுக்கவகையின்றி உடன்பட்டாராய் அங்ஙனே வதிவாராயினர்.

அதுநிற்க, இங்கே சஞ்சீவிகிரியில் தேரணிசிங்கு டில்லிக்குச்சென்ற ஏழாவது தினத்தன்று 'அயிராணி அனேகம் நாள் தவங்கிடந்து சயந்தனைப் பெற்றதுபோல' கோள்கள் நன்னிலையில் நிற்கும உத்தமமான முகூர்த்தம் ஒன்றில் இராஜப்பெருமாட்டி இராமாபாய் நல்லிலக்கணம் பலவும் அமையப்பெற்ற நந்தனன் ஒருவனைப்பயந்தாள். அப்பொழுது அந்தரத்தினின்றும் பலபலெனப் பொன்மாரி பொழிந்தது. அப்பெரும்பதியிலுள்ள ஆடவர் அரிவையர் யாவருடைய முகத்திலும் நிர்நிமித்தமாய்ச் சந்தோஷக்குறிகள் ததும்பிப்பொலிந்தன. அமைச்சராவார் இளவரசன் உதயம் செய்ததறிந்து களிக்கடல் மூழ்கி

நான்மறையினையும் ஐயம் திரிபறக்கற்ற அந்தணர்பல ருக்கு அளவற்ற [1] வெறுக்கைகளை வெறுப்பத் தந்து சிறைவதியும் குற்றவாளிகளுக்குச் சிறையை விடுதலைசெய்து வண்டிகளில் சருக்கரை வைத்து வழங்கி நிதமும் நடத்தவேண்டிய மற்றும் சடங்கு களைக் குறைவற நிறைவேற்றித் 'தேசிங்கு' என்று நாமஞ்சாற்றி வளர்த்துவந்தார்கள். செல்வன் பிறந்த இரண்டாம் வருடத்தில் தேரணிசிங்கினல் அனுப்பப் பட்ட தூதனொருவன் சிறைப்பட்ட செய்தியினை எழு திய திருமுகம் ஒன்றை இராஜப்பிரதிநிதியிடம் அளி த்தான். அவன் சங்கதி தெரிந்து பெரிதும் துன்புற் ருனாய் அந்தப்புரம் அனுப்பினான். பட்டமகிஷியோ அதைமுற்றும் படித்தவளேயன்று; தொடங்கும் போ ழ்தெல்லாம் கண்களினின்றுபெருகும் நீர்த்துளிகள் நோக்கினை மறைப்பதென்றால் எங்ஙனம் தெரிவள். அந்தோ! பெரிதும் பாவம்!! இவ்வகைத் துன்பத்தில் சிறிதுநேரம் தாழ்த்தியதும் சிலதியரால் சங்கதிதெ ரிந்து பெரிதும் துன்புற்று "நமகுலக்கொழுந்து உத யஞ்செய்ததைக்கண்டு களிப்படையாது குதிரை நிமி த்தம் காவலிலிருக்கக் கமலன் எழுத்து போலும்; என்று பெருமூச்செறிந்து இங்கு நடந்த செய்திக ளில் ஒன்றேனும் விடாது எழுதிப் போக்கினாள்.

அங்கே டில்லியம்புரியில் மகமதுபாதுஷா அர சர் புடைசூழ ஓர்நாள் வேட்டைக்குச் சென்று எதிர்த்த விலங்குகளை யெல்லாம் கதறவடித்துப் படை களைப்பிரிந்து விடாய்மேலீட்டினால் ஒரு பொய்கை

---

1. திரவியம்.

ளைய நாடிச்செல்கையில் ஆகாயமுட்ட வளர்ந்திருக்கும் ஒரு சண்பக விருக்கத்தின்கீழ்க் கொடிவீட்டில் சந்திரனைப் பழிக்கும் காந்தியுடைத்தாய் அப்பொழுதுதான் பிறந்த பச்சைப்பெண்குழந்தை ஒன்றினைக்கண்டான். உடனே யோகியாரது வசனம் கவனத்திற்கு வந்ததும தன்னையே மறந்த களிப்பினனாய்க் கரத்திலேந்திக்கொண்டு பட்டினம்வந்துசோதிடம்வல்லாரைக் கூவிக் கிடைத்தமுகாந்திரத்தைத் தெரிவிக்கையில் அவர்கள் அப்போதைய கோளகளின் நிலைமையை ஆராய்ந்து இக்குமரி தனது பருவத்தில் நல்லசுத்தவீரனொருவனுக்கு வாழ்க்கைத்துணைவியாவாள் என்று குறித்தார்கள். பிறகு அரசன் அக்குழந்தைக்குச் சந்திரமுகி என்று பெயரிட்டு மிகவும் மேன்மையாகிய பிரத்தியேக மாளிகையொன்றில் வைத்து வளர்த்துவந்தான்.

சஞ்சீவிகிரியிற் பிறந்த தேசிங்கு என்னும் ஆண்குழந்தையானது வளர்பிறை போன்று தனது நற்றாய்க்கரத்தினும் செவிலித்தாய் முதலியாரது உரத்தினும் மந்திரிமாரது சிரத்திலும் துள்ளி விளையாடி வளர்ந்து முன்னம் பரசமயத் தருக்குநீக்குவான் அவதரித்தருளிய ஆளுடையபிள்ளையாரைப் போன்று ஐந்தாமாண்டில் பள்ளியில் வைக்கப்பட்டுத் திருவருள் கூட்டுகையினாலே கற்கவேண்டும் எவற்றையும் பத்தாமாண்டு நிறைவேறுதற்குள்ளேயே குறைவறக்கற்றுப் பதினோராமாண்டில் அரசர்க்குறித்தாம் ஆனையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தை முதலிய அருங்கலைகளிற் பயின்று வந்தது.

ஆனால் அப்பொழுது அவனுக்கு மஹமத்கான் என்னும கற்றறிபாங்கன் ஒருவன் ஏற்பட்டான. அப்பருவத்தில் அவனைப்பிரியும் ஒருநிமிடமும் தேசிங்கிற்கு ஒருயுகமாகும. ஆதலால் அவனுடன் கூடி அணித்தில் விளங்கும் கடுங்காட்டில் நுழைந்து எதிர்ப்படும் புலி முதலிய கொடியவிலங்குகளைக் கரத்திற்றாக்கிப் பந்துபோல்விளையாடி மாருதி புத்திரனுகிய வீமனே மெச்சுமாறு மற்போரில் தலைமைவாய்ந்து சாகசம் பலம தேஜஸ- தைரியம் கருணைமுதலிய அற்புத குணங்களை யுடையவனுய் 'மகன்றந்தைக்காற்று முதவியிவன்றந்தை என்னேற்றான்கொல் என்னுஞ் சொல்' என்ற நாயனுர் வசனத்தைச் சிறப்பித்து வளர்வாருயினுன்.

அற்புத சக்திவாய்ந்த அவ்வரசிளஞ்சிங்கம் தினமும் பொற்பரிமீயறிப் பட்டினத்தின் புறத்தே உலாவிவருந்தோறும் அந்நகரமாக்கள் பலரும் உடுக்கை விலகுவதும கருதாது தொடங்கிய தொழில்கள் அவ்வவ்வண்ணமேகிடக்க மாடங்களினும் மேடைகளினும் அன்பின் பெருக்கினுல் எள்ளிடவும் இடமின்றிக்கூடினராய் "நம்மை ஆளுடைய அரசகேசரி வந்தார்; இனித்துயரின்றி இவராதீனத்தில்அடங்கிவாழ்வோமாக" என்று உலகில் சொல்லப்படும் அன்பின் வேறுபாடு பலவற்றிலும் ஒவ்வொருவரும் தத்தங்கள் பருவத்திற்கு உரித்தானபடி ஒவ்வொன்றினைக் கைக்கொண்டு நிற்பார்கள்; இதுவன்றே இராஜபத்தியினியல்பு. கடைசியாகச் சுருக்கிச் சொல்லின் பராக்கிரமம்

1. ஒரு சாலை மாணுக்கன்.

பொருந்திய தேசிங்கு என்னும் அவ்வரசகேசரி 'இரும்பைக்காந்தம் இழுப்பதுபோலத்' தனது அழகு முதலிய ஒவ்வொன்றினாலும் அவ்வவர் மனங்களைக் கவர்ந்து கொண்டானென்பதுதான். இன்னணம் பதினாறுவது பருவத்தில் ஆறுதிங்கள் கழிந்ததும் ஊழ்வினை கூட்டுகையினாலே ஓர்நாள் நற்றாயினால் நன்கு உபசரிக்கப்பட்டுத் தன்றந்தையர் சிறையிருக்கும் செய்தியைத் தெரிந்து உடனே கணமும் தாழ்க்காது ஒருரேலெனக் கோலாசலம் சென்று பாந்தட்பள்ளியான்பேரவையின் எதிர்நின்று கைகளிரண்டும் சிரத்தின் மீதேறிக்குவிய கண்மலர் ஆனந்தவருவி சொரிய மெய்ம்மயிர் சிலிர்ப்ப நெஞ்சம் குழைய அப்பெருமானது திருவருட்டிறத்தினைப் புகழ்வானாயினான்.

"அருட்கடலண்ணல்! என் தந்தையார் சிறை மீட்கவேண்டித் தமது பொற்றாளே நற்றுணையாக் கொண்டு அடியன் டில்லிக்குச் செல்கின்றேன். அடிகள் எனது மனக்கோயிலினின்றும் அரைக்கணமேனும் பிரிந்திரில்லை. அத்தன்மைத்தாக [1] அளியன் பாதுகாப்பைப்பற்றிக்கவலையுற நிமித்தம் ஏது?

உலகம் யாவும் தமது அற்புத சக்தியினாலேயே நடப்பதென்றால் இன்னம் விரிக்கவேண்டுவதென்னே? பகல்செய்வோனாகிய சூரியன் இம்மியும் அருள் திறன் அறியாத அறிவிலிகளாகும் சண்டாளர் வீட்டினும் பிரகாசிக்கின்றான்" என்று அடியினை வீழ்ந்து விடைகொண்டவனாகி அரண்மனை நுழை

1. அடியேன்.

ந்து உண்டு உடுத்து வேண்டாமென்று தடுக்கும் தனது அன்னை முதலியாரது அன்புமொழிகளையும் இலக்ஷியம் செய்யாது கற்றறிபாங்கமேறு நம் பரிமாவே றிக் காற்றினும் கடுகினுய்ப் பதினைந்தாம் வைகலில் டில்லிப் பட்டினம் குறுகினுன்.

முருகக்கடவுளும் மதவேளும் போன்று மிகுந்த கம்பீரத்துடன் தன்னையே நாடிவரும் சிறுவர்களது முகப்பொலிவினை அரசர் குழாம் நெருங்கக் கொலு வீற்றிருக்கும் பாக்ஷா கண்டு மனதடங்காப் பூரிப்பு மென்மேலும் வளர 'இவர்களது காட்சியைக்கூட்டு வித்த இன்னுளே நன்னுள்' என்று இருக்கை பெயர்ந்து நின்றுன். ஆங்கிருந்த அரசவெள்ளங்கள் கண் ணொளி மழுங்கும் காந்தியையுடைய அக்காளையர் களைக் கண்டதும் வியப்பின் மிகுதியினுல் இருந்த வாதனம் விட்டுப்பெயர்ந்து நின்றனர். அரசிளஞ்சிங்க மாகிய தேசிங்கு சமீபமடைந்ததும் டில்லியதிபனு கிய பாக்ஷாவிற்கு மிகுந்தவணக்கத்துடன் வந்தனம் புரிந்து "வேந்தர் பெரும! யானும் இவரும்தென் ஞட்டின்கண் உள்ளதாகிய சஞ்சீவிபுரத்தினேம். தம் மிடம் ஒருவரானும் நடத்தமுடியாததுடுக்குநிறை ந்த கடவுட்புரவி யொன்று உள்ளதெனக்கேள்வி. அஃது உண்மையாயின் யானே ஏறி நடத்திஅநியாய மாய்க் கடுஞ்சிறையிருக்கும் தேசமன்னர்களை விடுதலை செய்கிறேன்" என்று அனைவருள்ளமும் திடுக்கிடும் வண்ணம் கூறினுன். ஏற்கெனவே களிப்பில் வீங்கிய பாக்ஷா இவ்வார்த்தை கேட்டதும் தன்னையே மறந் தானுய்த்தேசிங்கினைத்தன் அருகில் உட்காரவைத்துக்

கொண்டு "குழந்தாய் நின்னை மகனாய்ப் படைத்தார் யாவர் கூறுக" என்றான். அதற்குத் தேசிங்கு "மன்னர் மன்ன! சஞ்சீவிகிரியினைப் பரிபாலித்துவரும் தோணி சிங்கு என்னும் மன்னவர் மகனாவேன்; என்னை எல்லாரும் தேசிங்கு என்று அழைப்பார்கள். என் தந்தையார் இருவரும் தம்மிடம் சிறையிருப்பது கேட்டு அவர்களை மீட்டுச் செல்வதற்காக வந்துள்ளேன். ஆகலின் குதிரையினைக் கதுமெனக் கொணரச் சொல்லுதிர்" என்றான்.

இவ்வுரை கேட்டதும் அவ்விடத்தில் இருந்த தந்தையர் இருவரும் கடல் சென்ற கப்பல் துறைமுகம் சேர்ந்ததாய்க் கேட்ட மாலுமிபோலக் களித்து மகனை மடிமீதிலிருத்தி முத்தியிட்டுக் "குலமணியே! இத்துணை இளம்பிராயத்தில் வல்லவர்களாலேயே கைவிடப்பட்டிருக்கும் இவ்வரிய காரியத்திற் புகுந்து எங்களைத் துன்பக்கடலுள் அமிழ்த்துவதற்கு மறந்தும் நினைக்காதே; வேண்டுமாயின் பாதுஷா அவர்களிடம் கட்டளைபெற்றுப் பட்டிணம் செல்லலாம்" என்றார்கள். அதற்குத் தேசிங்கு "தந்தையீர்! தாங்கள் இவ்வுரையினால் என்மீதுள்ள அன்பை வெளிப்படுத்தினீர்கள் என்பது நிஜம்; பாதுஷா அவர்கள்தாம் தமது மனுவை அங்கீகரிக்கினும் இராஜசட்டம் இடம் தராதே; மேலும் குதிரையை நடத்தப் பின்னுறுவேனாயின் தமக்கன்றோ பெரும்பழியைச் சேமித்துவைத்தவனாவேன். ஆதலின் துயரொழிக. சவாரிசெய்து சடுதியில் திரும்புகிறேன்" என்றான். சபையிலுள்ளார் அனைவரும் தேசிங்கினது வீரவசனத்திற்கு மிகவும்

விய கூறு ற்ப தோணி சிங்கு செய்தகன்றே தவர்! இக் குமாரன் கேவலம் முருகக்கடவுளே யாவன்; நிலம் வுலகெலாம் பம்பரமெனச் சுழற்றும் பேராற்றல் வாய்ந்த இவ்வயசுக்குக் குதிரையை நடத்தல் ஒரு பெரி தாமோ? என்று விழித்தகண் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு பாதுஷா தேசிங்கினை நோக்கி “புங்காய்! நினது வாய்திறந்து ‘குதிரையை நடத்தப் பார்க்கிறேன், என்று கூறியதே இலக்கங் குதிரைகளை நடத்தியது போலாம்; சாகசமாகிய இவ் வருந்தொழிலில் மாத்திரம் கைவிடாதிருப்பாய்” என்றான்.

உடனே தேசிங்கு தனது பாங்கனை விளித்து “நண்ப! பாதுஷா அவர்களும் நம்மீது பரிவுகொண்டனர்போலும்; ஆகலின் நாம் இவ்விடத்தினின்றும் நீங்கிக் குதிரையைக் காணும் கருமத்திற்கைவிடுவோமாக” என்று இருவரும் மதயானையை நாடிச்செல்லும் சிங்கக்குட்டிகள் போலப் புரவியைக்காணவிரைந்தோடினார்கள்.

சபையிலிருந்தார் யாவரும் “ஆ! இதென்ன விந்தை !! வேண்டாமெனத் தடுத்தும் இம்மியும் பயமின்றிக் கம்பீரமாய்ச்செல்லும் இவர்கள் தைரியமன்றோ பயனுடைத்து” என்று கன்றைப்பிரிவதற்குச் சகியாத தாய்ப்பசுப்போலப் பின்பற்றினர். இதற்குள் இளங்காளையர் இருவரும் மிகுந்த கம்பீரத்துடன் குதிரைப்பந்தியில் நுழைந்து தெய்வப் புரவியைக் கண்டதும் அத்துரகம் மிகுந்த குரலுடன் கனைத்தலைச் செய்தது. அரசர்குழாம் அடங்கலும் அந்தோ!

சிறுவன் !! சிறுவன் !!! என்று பயந்து விழுந்தார்கள். தந்தையர் இருவரும் மூர்ச்சையாயினர்; பாக்ஷாவோ பொறிகலங்கினன்; இத்தகைய உற்பாதத்தினை ஒருங்கே விளைக்கும் அப்பேரொலியை அவ்விருவரும் கொஞ்சமும் பொருள்செய்தாரின்று. நிமிடத்திற்கெல்லாம்உயிர்ப்பாங்கன் புலிப்போத்தெனப்பாய்ந்து கால்களிற் கட்டியிருக்கும் இருப்புக்கயிற்றினைக் கைவாளினாற் சிதைத்து முழுவதும் தங்கத்தினாற்செய்த கலினத்தைமாட்டி அதற்குரித்தானபிறவும் செம்மையாய் அலங்கரித்து வெளியிற்கொண்டுவந்துநிறுத்தினான். ஆண்சிங்கத்தினைப்போன்ற தேசிங்கு அத்தெய்வப்புரவியை வலம்செய்து அருட்பெருஞ்சோதியாகும் அரங்கநாதரைத் தனது மனத்தினால் வணங்கி கலினக்கயிற்றைக் கரத்திற்பிடித்துச் சிவ்வெனக்குதித்தேறினனாய்: "எனது இன்னுயிர்ப்பாங்க ! இரண்டு கடிகைக்கெல்லாம் இதனை நடத்தித் திரும்புகிறேன். துயரொழிந்து தந்தையருக்கு ஆறுதல் கூறியிருப்பாய்" என்று பரிமாவினை நடத்தினான்.

பிறந்ததுமுதல் ஒருவரையும் சுமந்தறியாத அப்பெரும்புரவி 'சிறுவன் பராக்கிரமத்தையறிவோ' மென்று ஞெரேலென அந்தரத் தெழும்பிப்பறக்கவாரம்பித்தது. கீழேநின்ற தோரணிசிங்குமுதலியோர் அப்பொழுது திகிலடைந்தார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? மரக்கலம் உடைபட்ட மாலுமியைப்போல ஆகாயத்தை அண்ணாந்து நோக்கியவண்ணமே நின்றார்கள். இது நிற்க, குதிரையின்மீது சென்ற தேசிங்கு மறுநாள் பொழுதுவிடிந்துபத்துநாழிகை

யாகுங்காறும் அதை நடத்துவதில் ஓய்ந்தானில்லை. அப்புரவியின் வேசத்திற்கு முன்னம் சஞ்சீவிகொண்டுவரச்சென்ற ஆஞ்சனேயரும் இணையாகார். இளைப்பாறுதற்கும் இடமின்றிக் கனவேகமாய்ச்செல்லுகவின் அப்பொற்புரவி சினங்கொண்டு "அம்மவோ! இதென்ன விந்தை!! பால்நாற்றமும் மாறாத பச்சைச்சிறுவன் நம்மை இங்ஙனம் துன்புறுத்துவானாயின் இவ்வெட்கக்கேட்டிற்கு யாரிடம் முறையிடுவது? இன்றைப்பகலிற்குள் நம் உடலினின்றும் உயிர் பிரிந்துபோவது நிச்சயம்; அல்லவென்று இவ்விசை தப்பினும் இவனிடம் கிடந்து நாளும் துன்பம் அனுபவிக்கவேண்டுமல்லது வேறில்லை. ஆதலின் இவனிடத்தினின்றும் உபாயமாய்த் தப்பியோடுவதே நலம்" என்று சிவுக்கென அந்தரத்தில் பறக்கத்தொடங்கியது. குதிரையின் மோசக்கருத்தையறிந்த தேசிங்கு தனது முழுப்பலத்தினாலும் அதன் எண்ணத்தைக்கெடுக்கமுயன்றும் பயன்பெறவில்லை. வேண்டுமென்று கேடிழைக்கத்தலைப்பட்டால் அதனை மாற்றுவதற்குக்கடவுளாலன்றி நம்மால் முடியாதென்பது ஆச்சரியமன்றே; உடனே அதை நோக்கித் "துரகமே! நீ உத்தேசித்தபடியே செல்லக்கடவை. உனது மனக்குறிப்பெதுவோ அதுவே எனக்கும் நன்னெறி; அனைத்துயிரினும் நிறைந்துகாப்பானாகிய கடவுள் நினதுகெடுமதிச்சூழ்ச்சியை மாத்திரம் அறியாதிருத்தல் முறையன்று; உனது இந்த மோசக்கருத்து நிறைவேறிவிடின் அப்புறம் அவன் இருந்தும் பயனென்ன? ஏ அறவாழியந்தண! அடியவர்க்கண்ணல்!! நெடுமலைச்சாரில் நீர்நிறைந்த மடுவகத்து முதலையின் வாய்ப்ப

ட்டுக் கதறும் மதயானையின் முறையும் தமது திருச்செவிக்கு ஏறிற்றென்றால் ஆகாயத்தில் நேராய் நின்று முறையிடும் அளியேனது ஒன்றுமாத்திரம்கேளாதிருத்தல் எப்படி? யான் இக்குதிரையினால் எனக்கு ஏதேனும் துன்பம் வருமென்று இப்பொழுது முறையிட்டேனல்லன்; தமது தருமசக்கிரம் நிச்சயமாய்ப் பயன்படவேண்டுமிடத்தில் பின்னிடையுமாயின் அது தமக்கன்றோ இழிதகவு; ஆனால் குறைகூறினேனென்று அடிகள் தமது தருமவரம்பையையும் கடந்து காக்க முயலற்க. அப்படிச்செய்தலானது தம் மெய்த்தொண்டரது பழுதுபடாத திருவுளக் குறிப்பிற்கு எத்துணையும் சம்மதமாகாதன்றே"! என்று துதித்தான், இதுவன்றே நற்குணத்தினரியல்பு; எல்லாவிடத்தும் நிறைந்து அருள்செய்யும் அழிவிலான் ஒருவன் அமிழ்தினும் இனிய இவ்வருந்துதிக்கும் காதுகொடா தொழியின் அவனது அறவொழுங்கு அப்புறம் என்ன பயன் பெறும்; இமைகொட்டுதற்கு முந்தியே வெளிவந்து குதிரையின்கன்னத்தறைந்தவராய் "துடுக்கு நிறைந்த துரகமே! இவ்வெற்றிவீரனை யாவனென்றெண்ணியோ இங்ஙனம்கேடுசூழ்ந்தனை; இவனே உனக்கு அரசன் என்று தெரிந்துகொள்வாய் இன்னம் சிலநாள்காறும் இவனைச் சூழ்ந்திருத்தலே உனது கடைமையாகும்' என்று நற்புத்தி புன்றுக; தேசிங்கினை நோக்கிக் "குழந்தாய்இனித்துயரொழிக; உணவில்லாமையினால் களைப்படைந்தனை போலும்." என்று மறைந்தருளினார்.

கிடைத்தற்கரிய கடவுளது காட்சியின் மாண்பினால் குதிரைக்கும் தனக்கும் இம்மியும்வருத்தமின்றி

முன்னையினும் பதின்மடங்கு தைரியம் வந்துவிட்டது. உடனே கலினக்கயிற்றைக் குலுக்கித்திருப்பிக் கணத்திற்கெல்லாம் அத்தினபுரத்திற்கு நேராக அந்தரத்தினின்றும் [1] பயப்பய இறங்குவானாயினான். இஃதிங்ஙனமிருப்ப, இங்கே டில்லியிலுள்ளார் அனைவரும் "ஐயகோ! கஷ்டம்!! கஷ்டம்!!! இவ்வாச்சரியத்திற்கு யாவரிடம் முறையிடுவது. பன்னிரண்டாம் பருவமும் முற்றுப்பெறாத அறியாச்சிறுவனைத் துடுக்குநிறைந்த ஒரு பெரும் புரவியில் ஏற்றியனுப்பிய அரையனை என்னவென்று சொல்லலாம்; அண்ணல்தாம் மதியிழந்தாரேனும் அவையினராவது அடக்கியிருக்கக்கூடும்: மதயானையை அதன் இட்டப்படி செல்லவிடாதுஇடித்துத்திருப்பும் பாகரைப்போன்று அரசனை அறநெறியில் நடத்துவாரன்றோ நல்லமைச்சராவார். அவ்வற்றத்தில் சிறுவன் தந்தையரும் இருந்தார் என்று சொல்லிக்கொண்டார்கள்" என்று இவைபோல்வன பலவும் பேசிக்கலங்கினார்கள். நித்திய தரித்திரன் ஒருவன்பொற்குவையலைப் பெற்றும் இழந்துவிட்டதைப் போலமனத்துயருடனிருக்கும் தந்தையர் இருவரும் இப்பழிக்கு நாம் ஆளாயினமன்றோ என்று ஏக்கம் மேலிட்டிருக்கும் பாக்ஷாவும் பெருங்களிப்பெய்துமாறு தேசிங்கு மன்னவன் அந்தரத்தினின்றும் மெள்ளமெள்ளப் பூமியில் இறங்கினான். உடனே கற்றறிபாங்கன் கதுமெனக் குதித்தோடிக் குதிரையைத் தட்டிக்கொடுத்து "எனது அரிய நண்ப! நின்வரவு நன்றாகுக" என்று அன்பனைக் கைகொடுத்துக் கீழே இறக்கிப் பரிமாவைப் பந்தியில் சேர்த்து உணவூட்டுமாறு உத்

1. மெல்ல மெல்ல.

தரம் புரிந்தான். அவ்வற்றத்தில் தந்தையரும் பாக்ஷாவும் சந்தோஷித்துத் தேசிங்கினைத் தழுவி முத்தமிட்டார்கள் என்பதில் என்ன ஆச்சரியம்? இருபது வைகல்சாறும் பாக்ஷாவிற்கே நடந்தறியாத அரிய உபசாணைகளும் ஆடல் பாடல்களும் உயர்ந்த விருந்துகளும் ஒரு பகல்போல நடந்தேறின. அறுதியில் ஓர்நாள் பாக்ஷா தேசிங்கிற்குத்தனது கரத்தினால் விலையுயர்ந்த உத்தமமான உடைகளைத்தரித்து அவன் நண்பனுக்கும் தந்தையருக்கும் உசிதப்படி வெகுமதி பலவும் புரிந்து தேசிங்கினைவிளித்து "அரசகேசரி! நினது ஆற்றலுக்கு இவைகள் ஒரு பொருளல்லவாயினும் என்னைக்களிப்பிக்கும் நிமித்தம் அங்கீகரிக்குக." என்று தனது கிண்ணயத்தின்வண்ணம் எழுபதுபாரம் தங்கத்தினையும் மற்றும் யானைசேனை முதலிய பரிவாரங்களையும் அன்புடன் அளித்துத்தனது சபையிலிருக்கும் மன்னவர்களை நோக்கி ஆதிநாளில் யோகியார் தனக்கு இட்டகட்டளையைப் புகன்று இனி எனது அரிய செல்வச் சிறுமிதெய்வப்புரவியை நடத்திய இவ்வெற்றிவீரனுக்கன்றி வேறெவர்க்கும் உரியளாகாள். உலகினில்நற்குலத்தில் உதித்த பெண்மணியொருத்திக்குக் கணவனால் எத்துணைப்பாக்கியம் கிடைக்கத்தக்கதோ அவையனைத்தும் இவ்விளங்காளையால் எனது குமாரிக்கெய்துக. அவள் பிறப்பு இன்றுதான் பயன்பெற்றது." செஞ்சிமன்னவர்காள்! எனது செல்வக்குமாரி இன்னம் மங்கைப்பருவம் அடையவில்லை. என்றாலும், உங்களது சவுகரியம்போல் மணவினை முடிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றான்.

தேரணிசிங்கு: அரசர்பெரும! கிரீடாதிபதியாகிய தாம் எளியனுக்கு நெருங்கிய கேளிராவதைப் பற்றிச் சந்தோஷியாகிறேன். மணவினை மாத்திரமதக்க பருவத்தில் நடத்தினால் நலமென்று நினைக்கிறேன்.

பாதுஷா: அது எனக்கும் சம்மதிதான்" என்று எதிர்நின்றோரைத் தெய்வப்புரவியையும் தனது நீலவேணி என்னும் பட்டத்துப்புரவியையும் அலங்கரித்துக் கொணரும்படி கட்டளையிட்டு வருடம் பன்னிரண்டும் சென்றாலன்றி நமக்கு முடிவில்லை என்று நினைத்துச் சிறையிருந்த தேசமன்னர் பலருக்கும் உரித்தான மரியாதை புரிந்து "அரசர்காள்! உங்கள் சிறையிட்ட உதாரகுணமுடைய வள்ளலை வாழ்த்திப் பட்டினம் செல்லுங்கள்" என்றான். சடிதைக்கெல்லாம் ஏவலாளரால் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட தெய்வப்புரவியின்மீது தேசிங்கு மன்னவனையும் தனது பட்டப்புரவியின்மீது அவன் உயிர்ப்பாங்கனையும் ஏற்றி அரசசிங்கத்தினை நோக்கி நம்பி! இப்பட்டினத்தையும் என்னையும் மறவாதிருக்கக்கடவது என்றான்.

தேசிங்கு:— அண்ணால்! தமது பெருந்தகைமை ஒருநாளும் மறக்கத்தக்கதன்று. அது பசுமரத்தாணி போன்று என் மனதிற் செவ்வனே பதிந்துள்ளது. அன்புகொண்டு விடையளித்தீர்" என்றதும் அடுத்த நிமிஷத்தில் யாவரும் பயணமாயினர்.

## அதிகாரம் 10.

மேலன சரித்திரம் நடந்த ஐந்து வருடத்திற்கெல்லாம் தாய்தந்தையரிருவரும் பொன்னாடு செல்லத் தேசிங்குராஜன் சஞ்சீவி புரத்திற்கு அரையனு

க்கப்பட்டான். முன்னைய வண்ணமே தரணிசிங்கு என்னும் சிறிய தந்தை இராஜப்பிரதிநிதியாய்த்தானே எல்லாக் காரியங்களையும் நடத்திவந்தார். டில்லிபாஷாவின் அருமைவளர்ப்புமகளாகிய சந்திரமுகி என்னும் பெருமாட்டியை அங்கிசான்றாகக் கடிமணம்புரிந்தான் தேசிங்கு. அந்நங்கையர்க்கரசியார் புஷ்பிணியாகிய ஓரை தீதானதால் ஈராண்டுகாறும் மணமகனைப் பார்க்கத்தகா என்று சோதிடம்வல்லார் குறித்ததனால் அந்நங்கை அப்பெண்கள்நிலயம் தனியேயிருக்கப்பட்டாள். தேசிங்கின் பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே பகையரசர்களுக்கு மெய்ந்நடுக்கம் நீங்க மதியளவு செல்லும். அவன் அக்காலத்தில் தொடங்கிய ஒவ்வொன்றும் தடையற இனிது நிறைவேறி வந்தன உண்மையில் இவன் கோலாசலத்தில் எழுந்தருளியிருக்கும் கடல்வண்ணனாகும் அரங்கநாதனைப் பூசித்துவந்தான். அப்பெருமானும் இவனைக்கைவிட்டாரில்லை. அற்றம் நேர்ந்தபோழ்தெல்லாம் அருண்மைபொழிந்தேவந்தனர். அந்நாட்டிலே மேகம் பருவம் பிசகாது நன்மழைபொழிந்து வந்ததென்று எழுதவும் வேண்டுமோ? அறம்பொய்த்தாலன்றோ அரும்புயல் ஒளிக்கும்.

இத்தன்மைத்தாக, ஆறுகாடு என்னும் பட்டினத்தில் சிற்றரசுபுரிந்துவந்த சந்தா சாஹேப்பு என்பவனுக்குத் தரணிசிங்கு தான் இருக்குந்தனையும் திறைசெலுத்திவந்தான். ஆனால் அது நீடித்து நிறைவேறிற்றின்று. தேசிங்கிற்கு அரசு கிடைத்ததும் தந்தையின் செயலுக்கு மனம் வருந்தி அப்பொழுதே நிறுத்திவிட்டான். ஆளுகை விஷயத்தில் அக்காலம்

நாகரீகமற்ற தாதலின் ஆறுகாட்டரசன் சஞ்சீவிபுரியினின்றும் திறை வாராதிருப்பதை மூவாண்டுகாறும் கவனித்தானில்லை. காரியஸ்தன் மூலமாய் ஓர் நாள் அது நினைவிற்கு வந்ததும் இன்றுங்காறும் தனக்கு அறிவியாதிருந்த அமைச்சனைக் கடிந்து எதிர்நின்ற வெற்றி வீரனாகும் தோன்றமல்லன் என்பவனைச் சஞ்சீவிபுரிக்குச் சென்று திறைபெற்று வருமாறு பணித்தனன். அவையினர் யாவரும் தேசிங்கினது ஒப்பற்ற ஆற்றலை விரித்துக் கூறியதன் மேல் அவனுடன் சில படைகளைச் செல்லுமாறு உத்தரம் புரிந்தான். என்றாலும், சென்றவீரனுக்கு வாயில் ஈரமென்பது இம்மியும் இல்லை. தன்னுயிர் செம்மையாய்ப் பாதுகாக்கப்பட்டுத் திரும்ப வேண்டுமென்று வழிபடுகடவுளை அனவரதம் சிந்தித்தான். ஆனால் அவனுக்கு ஒரு விடயத்தில் மிகுந்த தைரியமுண்டு. அஃதென்னையோவெனில், தேசிங்கு மன்னவன் அறநெறியினின்று அணுவும் பிசகமாட்டான் என்பதே. அவன் சஞ்சீவிபுரியின் சமீபம் சென்றதும் பீரங்கி இரண்டிற்கு வெடி கிளப்பினான். அவ்வொலியானது தேசிங்கின் செவிக்கு வயப்புலிக்கு எட்டிய எருத்தின்முழக்கம் போன்றிருந்தது. உடனே கணமும் தாழ்க்காது அங்கிருந்தவனைக் கூவி அறிந்துவருமாறு பணித்தனன். அரசன் கொண்ட கோபத்தினை வந்தவராற் றெரிந்த மல்லவீரன் என்னவாகுமோவென்று பயப்பிடித்தவனாய் யானைமீதிருப்பதற்கும் தைரியமில்லாதிருந்தான். அறுதியில் வந்தவர் கட்டாயத்தின் மீது கட்டளைமறுக்கின் என்னவாகுமோவென்று விதியின்றித் தன்னை முழுவ

தும் உருமாற்றிக்கொண்டு அரசனவைக்களம் சென்று நிலம்தொட்டுச் சலாம்செய்து நின்றான்.

அரசன்;—நீ யாவன்?

மல்லன்;—ஆறுகாட்டு நவாப்பு அனுப்பவந்தவன்.

அரசன்:—எதற்காக?

மல்லன்:—பிரபுக்கள் மூவாண்டாய்ப் பகுதித்திரவியம் அனுப்பவில்லையாம்.

அரசன்;—பகுதி என்பதற்குப் பொருளென்னே?

மல்லன்:—தன்னினும் வலியாருக்குச் செலுத்தும் தீர்வை.

அரசன்:—மெலியவராயின்—?

மல்லன்:—செலுத்தவேண்டியதே.

அரசன்—ஆனல் நின்னரசனை வலியனென்று நினைத்திலேன்.

மல்லன்;—தந்தையார்நாட்களில் நடந்துவந்ததுதானே.

அரசன்:—எனக்கு இஷ்டமில்லாவிடில்—?

மல்லன்:—சித்தம்; ஆயின் எனக்கென்ன முடிவு.

அரசன்:—வலியருக்குத்திறை உள்ளதுதான்.

மல்லன்:—அஃதெப்படி அறிவது?

அரசன்:—சமர் முகத்தில்.

மல்லன்:—அது இருதிறத்தாருமன்றோ ஒப்பிச் செய்யவேண்டும்.

அரசன்:—இல்லாவிடில் திறைவருவதெப்படி?

மல்லன்:—ஆயின் அடியனுக்கு உத்திரவுவேண்டுகிறேன்.

அரசன்:—சென்று வரலாம்.

மல்லன்;—இத்துணைவருத்தமளித்த அடியேனை மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்.

அரசன்;—நல்லது.

இதைக்கேட்டதும்புலிவாயினின்றும் தப்பிய இளமானைப்போன்று ஓட்டமும் நடையுமாய் இரண்டாவது தினத்தில் ஆறுகாடுவந்து சேர்ந்தான். திறையுடன் வருவானென்று எதிர்பார்த்திருந்த அரசனுக்கு வெறுங்கையுடன் சென்றமல்லன்வரவு ருசிக்குமா? அச்சமயம் அவன் கொண்டகோபத்திற்கு அளவேயில்லை. அக்கணமே சஞ்சீவிபுரியினைத் தாக்குமாறு தன் படைகளுக்குக் கண்டிப்பாய் உத்தரம்புரிந்தான். அப்பட்டினத்தைத் தாக்கற்குப் போதுமானபடை இப்பொழுது நம்மில் கிடையாவென்று பன்முறையும் வற்புறுத்திச் சொல்லிய அமைச்சரது நற்சொற்களனைத்தும் கல்மீதுசொரிந்த பூங்கணையாயின. அவ்வற்றத்தில் அவன் சபையாருக்குக்கூறிய மொழியாவது; திறைபெறவாவது;அல்லது செலுத்தவாவது; இவ்விரண்டிலொன்று முடியுந்தனையும் போரினை நிறுத்தத்தகா” என்பதே. இது சொல்லியபின் ஒரு நிமிடமும் அவன் வீணுக்காலம் கடத்தினனில்லை. உணவேற்றுக்கோட்டையும் தவிர்த்துப் பயணமாயினனென்றால் தளகர்த்தர்கள் செல்லா தொழிவதெப்படி? அக்கணமே அவரவர் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டனர். அக்காலத்தில் ஆரணி வந்தவாசி முதலிய சிறு

ஜமீன்கள் பலவும் அவனுக்கு அடக்கமாயிருந்தன; ஆகலின் ஆயுகாட்டனாசன்போருக்கு இவர்களும் உதவிசெய்ய நேரிட்டது. கடைசயில் வெகுவித ஆடம்பரத்துடன் தேசிங்கினது ஆளுகைக்குள்ளாகிய தேவனூர் என்னும் சிறிய பட்டினத்தினைவந்தடைந்தான். நீதிநூலுக்குமாறுகிய சில குறும்பரசர்கள் பகைவரைப் போருக்கிழுப்பதற்கு அக்கிரமமாய் அவன் நாட்டிற்புகுந்து பயிர்களையழித்தல் பெண்களைக் கற்பழித்தல் சூறையிடல் முதலிய தீச்செயல்களைப்புரிதல் வழக்கமன்றே; அத்துருக்கப்படைகளும் இக்கட்டளை பெறப்பட்டார்கள். அப்புறம் அப்பட்டணம் மிகவும் அவதிப்பட்டனவென்று சொல்லவும் வேண்டுமோ? இயற்கையிலேயே கொடுந்தன்மையுடைய தேனொன்றிற்குக் கொட்டுமாறு கட்டளையும் கிடைக்குமேல் என்னவாகும் என்பதை யோசித்துப்பாருங்கள். குலமங்கையர் யாவரும் பெரிதும் வருந்தினார். தாம் அக்கினிசாட்சியாகக் கொண்ட அருங்கணவனை வஞ்சித்து அவரினும் எத்துணையோ தாழ்ந்த அயலான் ஒருவனிடத்துள்ள ஏதோ ஒன்றில் ஈடுபாடுக் கனவினும் வேறுகவனமில்லாராய்த் தன் மணமகனுக்கே ஒப்புவிக்கச்சங்கோசிக்கும் தமது அரிய பெண்மையங்கங்களை அன்புடன் அன்னோனுக்கு ஆதீனமாக்கும் நற்குணம் நிறைந்த சில பெண்களுக்கேனும் சுகமுண்டோவென்றல் அவருக்கும் கிடைக்கவழியில்லை. ஏனெனில் அவர் விரும்பத்தக்கனவற்றில் இம்மியேனுமின்றிக் காட்டுமிருகங்களைப்போல் நாகரீகமற்று மேல்விழுந்தணையவரும இயமதூதர்போன்ற மூடர்களுக்குத் தமது உடைகு

லைத்து உடலினைச் செவ்வனே ஒப்புக்கொடுத்துக் கற்பழிக்குமாறு எங்ஙனம் விட்டுவிடுவார்கள். ஆதலின் அப்புரவாசிகள் நிர்நிமித்தமாய் நடந்த இவ்விபரீதத்தில் அடைந்த துன்பத்தினை இப்படிப்பட்டதென்று ஒருவராலும் சொல்லமுடியா.

ஈதின்னணமிருப்ப இரண்டுகடிகைக்கெல்லாம் சஞ்சீவிபுரியில் இராஜப்பிரதிநிதியாகும் தரணிசிங்கிற்கு இச்செய்தி எட்டியதும் அவர் கணமும் தாழ்க்காது அரசனுக்கறிவித்தார். போர்மூண்டதைப் பற்றித் தேசிங்குமன்னவன் இம்மியும் பொருள் செய்தானில்லை. அவசியமான சில தளகர்த்தரை மாத்திரம் போர்க்கோலம் கொள்ளப் பணித்துத் தனது உயிர்ப்பாங்கனுக்கும் மகமதுகான் என்பவனுக்கு ஒரு தூதுவனைப் போக்கியிருந்தான். இதற்குள் அத்துருக்கவரசன் படைகள் தேவனூரைக்கொள்ளையிட்டுச் சங்கராபரணியாற்றின் வடகரைக்கு வந்துவிட்டன.

இங்கிவ்வாறிருக்க, சஞ்சீவிபுரிக்குச் சற்றேறக்குறைய இரண்டுயோசனைக்கப்புறத்துள்ளவழுதாவூரிலிருக்கும் மகமதுகானைப்பற்றிச் சற்று சொல்லுவோம். அன்றைத்தினம் அவனுக்கு மணம் நிச்சயிக்கப்பட்டது. அதற்குத் தக்கார் யாவரும் அவன் வீட்டில் வந்து குழுமினார்கள். அரசனுக்கு உயிர்ப்பாங்கன் என்றால் அவன் மணம் தகுந்த விமர்சையுடன் நடந்ததென்பதில் என்ன ஆச்சரியம்? மேலும் அவன் நல்ல முசல்மான் குலத்தினன். அங்கு ஆகாயத்தினைமுட்டும் பச்சைப் பந்தர்களும் அதைச்சுற்றிலும் முத்துக்

குச்சுகளும் காவதம் வரையில் கனமாய்க் கமழும் அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும் கடலை மாழுங்கொள்ளும் வாத்தியத் தொனிகளும் தேவதைகளுக்கே போக்கியதையான நறுநெய்யுடன் பரிமளிக்கும் இன்னம் பல சிலகளும் செவ்வனே நிறைந்திருந்தன. சோதிடம் வல்லாரால் குறிக்கப்பட்ட முகூர்த்தம் கிட்டியதும் மணமகனையும் மணமகளையும் ஒருசேர நிறுத்தி மதாசாரப்படிக்குக் கற்றறிந்த முல்லாக்கள் இனிது நிறைவேற்றினார்கள். சுருக்கிச்சொல்லின் மாங்கலியம் தரிப்பதொன்று நீங்கலாக மற்றுள்ளன யாவும் குறைவற முடிந்ததென்றே சொல்லாம். அவ்வற்றத்தில் 'சிவபூஜை வேளையில் கரடி நுழைந்தாற்போல' ஓரேயோட்டமாகக் குதிரையின்மீது சென்ற தேசிங்குமன்னனாலனுப்பப்பட்ட தூதனொருவன் முத்திரைபொறித்த திருமுகத்துடன் உள்ளே நுழைந்தான். மணமகன் அவன் வரவறிந்ததும் தனது கரத்திற்கொண்ட மங்கலத்திரவியத்தைக் கீழேவைத்துக் கடிதத்தினை வாங்கி முழுவதும் செம்மையாய்ப் படித்துப் பார்த்தான். அவ்வளவுதான் ருமதம்; உடனே அங்கிருப்பவர்களைப்பார்த்துச் சபையீர்காள்! சஞ்சீவிபுரத்தின்மீது ஆறுகாட்டரைசன் படையெடுத்து வந்திருக்கிறானாம்; ஆதலின் அவ்வரசனை வெற்றிகொண்ட பிறகு மற்றைய மணத்தினையும் முடிக்கிறேன். போர் மூண்டதைக்கேட்டும் இனி இங்கிருக்கத்தகா. என்று அனைவருக்கும் சலாம்செய்து எவர் சொல்லையும் மேற்கொள்ளானாய் அம்மணக் கோலத்துடனேயே டில்லியரசனாற் றனக்குக்கிடைத்திருக்கும் நீலவேணியின் மீதேறி இரண்டு கடிகைக்

செல்லாம் சஞ்சீவிபுரம் வந்துசேர்ந்தான். அப்பொழுது பட்டினமெங்கணும் அரையன் கட்டளைப்படி யொலிக்கும் போர்ப்பறையின் முழக்கங் கடலொலியினும் மிக்கெழும்பியது. தேசிங்கு தனது உயிர்த்தோழன் மணக்கோலமுங் கலையாது வந்த அன்பின் பெருக்கத்தைக் கண்டு மிகவும் வியந்தானாய் "நண்ப! இங்ஙனே இருந்தி; அரண்மனை சென்று வருகிறேன்." என்று போயினான்.

இராஜப்பிரதிநிதியாகும் தரணிசிங்கு தேசிங்கின் கருத்தறிந்ததும் எதிர்சென்று குழந்தாய்! ஈராண்டுகாறும் ஒருவரையொருவர் காணத்தகாதென்று சோதிடம் வல்லார் குறித்திருப்பது தெரிந்தும் இன்றதற்கு மாறாக நடத்தல் தகுதியன்றே; மேலும் சற்றேறக்குறையத் தவணையும் கடந்தாய்விட்டது. இன்னம் இருப்பது அறுபதுநாள் ஆகலின் ஓர் திரையையேனும் நடுவிலிட்டுப் பேசவருதி; என்றார். அம்மாற்றத்திற்கு இணங்கினவனாகிய அரசன் மனைவியிருக்கும் மாடத்துள் நுழைந்து தனது வருகையைத் தெரிவித்து ஆங்கிருந்த ஓராதனத்தின்கண் அமர்ந்திருந்தான். உலகெலாம் மதிக்கும் ஆற்றல்வாய்ந்த தனது தலைவன் கடைவாயிலில் வரவுநோக்கி யிருந்தானென்றால் சந்திரமுகி களிக்கடல் குளித்ததில் என்ன ஆச்சரியம். எதிர்பாராது எய்திய அவன் வரவிற்குக் களித்தாளேனும் சோதிடம் வல்லாரற் குறித்த தவணை ஒழிதற்கு முன்னம் வந்ததற்கு ஏதோ ஒரு நிமித்தம் இருக்குமென்றெண்ணி மனமறுகினளாய் நன்றாய் அலங்கரித்திருக்கும் ஒரு கூடத்திற்குவந்து தனக்கென விட

ப்பட்டிருக்கும் ஆதனமொன்றில் இருந்தாள். தனது அரியமணாளனை ருஜுவிற்கண்டு களிப்பெய்தலாமெ ன்று குதூகலித்திருந்த அவள் மனது திரையைக் கண்டதும் திடுக்கென்றாயது. 'பசியில் மிடிப்பட்டோன் ஒருவனை பலவகைச் சுவையுடன் உனக்குப் போனகமளிக்கிறேன் வருகவென்று கூவியழைத்து வந்து ஒருவரும் செல்லுதற்கரியதாய்த் தாளிடப்பட்டிருக்கும் அன்னம் நிறைந்த அறையொன்றைக்காண்பித்து இதனுள் பல்வகைப்போனகங்களும் நிறைந்துள. ஆகலின் இங்ஙனேயிருந்து அவற்றின் நறுநாற்றம் நுகருவாயாக, என்றால் அவ்வதிருஷ்டஹீன ன் மனம் எப்படியிருக்குமோ அதைப்போன்றனள் சந்திரமுகி. ஆதலின் சற்றுப் பிணங்கினளாய்த் தனது மணமகனைச் சுட்டி "முற்பிறப்பில் மிகவும் தீயனவிழைத்தவளாகிய பாவியேனுக்கு வலியக்காட்சியளிக்கிறேன் வருக என்று தருவித்த பிறகும் இவ்வண்ணஞ் செய்தல் மெய்ம்மை வேவியானோர்க்கு உரித்தல்ல" என்றாள்.

தேசிங்கு:—யானும் நின்னை ருஜுவிற்காணும்பொருட்டே வந்தனனாயினும் சிறியதந்தையார் கட்டளை மறுத்தல் அழகன்றே? நம்நலத்தையேகோரும் அவர் சொல்லினை இருவரும் அங்கீகரிக்க வேண்டியதுதான்.

சந்திரமுகி:—அஃதுண்மையே. அடியாளுக்கு வரவர நிமிடமும் யுகமாகிறது. பிரிவுநீடித்தலின் ஒவ்வோரமையங்களில் உயிரை வெறுக்கவும் தோன்றுகிறது. துணிந்துவிடலாமெனிலோ நீதிநூல்

இடம் தரவில்லை. ஏனெனில், அன்று விவாக மண்டபத்தில் அக்கினிசாட்சியாக அடியாளது உடல் பொருள் ஆவி இம்மூன்றினையும் தமதாக்கி யிருக்க இன்றதற்குவிரோதமாய் உயிரை மாய்த்துக்கொள்ளல் முறைமையன்றே.

தேசிங்கு:—காதலி! நீ கூறுவதில் எனக்குமாத்திரம் சவுக்கியமென்று நினைக்கிறாய்போலும்! இதைக் கடவுளறிவார்; இரவு என்றுமே இல்லாதிருக்கலாகாதா வென்று வேண்டாத நாளில்லை; பொழுது படுங்காறும் இராஜ்ஜியக்காருபாருகளில் மனம் வைக்கவேண்டியுள்ளதாகலின் அதனால் சற்று ஆசோதை அடைந்திருக்கிறேன்; அப்புறம் அரியணை இறங்குவதுதான் தாமதம்; அக்கணமே காமன் கனல் என்னை முழுவதும் போர்த்துக்கொள்ளுகிறது, என்செய்யலாம்; தவணையை எதிர்நோக்கி ஒருவாறு தேறுதலடைகின்றேன். ஆயினும் நிழலினருமை வெயிலிற் பட்டாலன்றோ தெரியும்?

சந்திரமுகி:—அடியாளுக்கு வெயிலின் அருமைமாத்திரம் சகிக்கக் கிடைத்துவிட்டது. நிழல் கிடைத்த லெப்படியோ? கடவுளருள்—.

தேசிங்கு:—அதேனப்படி சொல்கின்றனை? வழிபடு கடவுள் சீக்கிரமே அருள் புரிவர்; பார்த்தனை? வந்தகாரியத்தை முழுவதும் மறந்துவிட்டு என்னவோ பேசிக்கொண்டிருக்கின்றேனே.

சந்திரமுகி:—ஆயின் அஃதென்ன?

தேசிங்கு:—ஆற்றுக் கப்புறத்தில் ஆறுகாட் டரசன் போருக்கு வந்திருக்கிறானாம்.

சந்திரமுகி:—அதென்ன? இன்றளின்றி இப்பொழுது போர்.

தேசிங்கு:—தந்தையார் திறை செலுத்தினாராம்; அது இப்பொழுது செலுத்தப்பட வில்லையாம்.

சந்திரமுகி:—அவனுக்கு அனுப்ப மறந்ததுபோலும்?

தேசிங்கு:—அவனன்றோ செலுத்தவேண்டும்.

சந்திரமுகி:—அப்படியாயின் டில்லிக்கெழுதிவிட லாகாதா?

தேசிங்கு:—எதற்காக?

சந்திரமுகி:—அவன் திறைசெலுத்தவேண்டுமென்று.

தேசிங்கு:—நம்போன்ற அரசனொருவனை யாசித்து வாழ்தலினும் இவனுக்கே அடித்தொண்டு புரிதலில் மேன்மையுடையது.

சந்திரமுகி.—அற்றாயின், அடியாளை மன்னிக்கவேண்டும் 'எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவதென்பதிழுக்கு' என்பது ஆன்றோரிலக்கணம்.

தேசிங்கு:—எனது அரியகண்ணாட்டி! சமயத்தில் தக்க மந்திரியாயினை; விடையளித்தி.

சந்திரமுகி:—இப்போழ்தேயா?

தேசிங்கு:—ஆற்றங்கரையில் இருக்கிறான் என்றால் எப்பொழுது செல்வது.

சந்திரமுகி:—தமது அழகிய பொற்கரத்தையேனும் அடியாள் தரிசிக்கக்கருணைபுரிகிர்; என்றதும் தேசிங்கு அவ்வண்ணமே திரைக்குள் கரத்தை

நீட்டினான். சந்திரமுகி அதைத்தனது தளிர்க்கரத்தினாற்பற்றி அதிற்பதிந்துள்ள சக்கிரரேகையின் பொலிவினையும் அழகுஉருக்கொண்ட அமைப்பினையும் கண்டு "இத்தலைக்ஷயமனானன் நமக்குக் கிடைத்திருந்தும் பிரியாதிருந்துவாழ அபாக்கியையாயினம். அந்தோ! பெண்ணாய்ப்பிறந்தோரில் நம்போலும் துன்புழப்பார் ஒருவருமிலர்" என்று அக்கரத்தினைத்தனது அகன்ற கூரிய விழிகளில் ஒற்றிக்கொண்டு ஆசைப்பெருக்கத்தினால் ஒரு முத்தமிட்டனள். என்றாலும், அது முழுவதும் இன்பம்நிறைந்ததன்று. ஆசைமிகுதியால் பிரிவென்னும் துன்பம் அலைத்தலின் அடக்க ஒண்ணாத வருத்தத்தையுடையதாயிருந்தது. அக்காரணத்தால் அதன்காரியமாகிய நீர்த்துளிகளில் இரண்டு அரசன் கரத்தில் விழுந்தது. கரத்தில் தண்ணெனை நீர்த்துளிவிழுதலும் கரத்தினைக் கதுமென இழுத்துக்கொண்டானாய்க் "காதலி! என் செய்தனை? நின் செய்கை புத்திசாலிகளுக்கு அடுத்ததன்றுபார். இது கேவலம் மிருகத்தன்மையோடொத்துப் புணர்ச்சியொன்றையே விரும்பும்புன்மதிப் பெண்டிர் செய்கையாகும். ஆதலின் துயரொழிந்து விடையளித்தி" என்றான். சந்திரமுகி துக்கத்தையடக்கிக்கொண்டு "நாதா 'எண்ணறவெண்ணிஎழுத்தறப்படிக்கினும் பெண்மதி பேதைமதி' கடவுள் அருள்முகம் நோக்கி மன்னிக்குக." என்றாள்.

**அரசன்.**—ஆசைக்கிழத்தி! யாதுறினும் தைரியத்தை விடக்கூடாதென்று கூறியதன்றி வேறன்று.

சந்திரமுகி:—இது சகுனசாஸ்திரத்திற்கும் விரோதம் தானே; யான் மறைத்தேனென்றாலும்பேதமை என்னை மறைக்கவிட்டதின்று. பெண்பாலாகும் அடியளால் வேறு என்னமுடியும்? கடவுளருளால் சீக்கிரம் ஜயத்துடன் திரும்பவேண்டும்

அரசன்:—சென்று வருகிறேன்.

சந்திரமுகி:—அங்ஙனே இரண்டொரு நாள் இருக்கவேண்டி வருமோ?

அரசன்:—இல்லை இல்லை; மாலையே திரும்பிவிடக்கூடும்.

சந்திரமுகி:-தளத்திற்கும் தமக்கும் ஊறின்றிக்காத்துக்கொள்வதுடன் அடியாளுக்கும் அச்செய்தியைத் தெரிவிக்குமாறு யாசிக்கிறேன்.

அரசன்:—அப்படியே, என்று திரும்பிவிட்டான்.

## அதிகாரம் 11.

ஆறுகாட்டரசன் படைத்தலைவருடன் யோசித்துப் பார்த்ததில் தனக்கு வெற்றி கிடைப்பது மிகவும் அரிதென்று புலப்பட்டது. இறுதியில் தனக்கு இன்னம் வேண்டியான உபகரணங்களைச் செம்மையாய்ச் சேகரித்துக் கொள்ளவென்று நினைத்தானாய்த் தற்காலம் போருக்கு வரும் எதிரிகளைச் சிறிதுநேரம் தடைப்படுத்துவதற்காக மூன்று குரோசதூரத்தில் கரையளவும் அலைபெருகி யிருக்குமலையனூர் என்னும் ஒரு சிறும்பாதியின் ஏரிகரையை உடைத்துவிட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அதுசங்கராபரணி என்னும் யாற்றின் இருகரையும் பெருகத் தொடங்

ிற்று. சஞ்சீவிபுரத்தினின்றும் அரசன்கட்டளைப்படி போர்க்குச் சென்ற வீரர்கள் யாற்றின் பெருக்கைக் கண்டதும திகைப்படைந்து அங்ஙனே நின்றுவிட்டார்கள். இது நிற்க, கடவுள் சந்நிதியடைந்த தேசிங்கு அப்பெருமானைப் பாடிப்பணிந்து "அருமறைத் தனியீர்! தமது பொற்றாமரைப்பதத்தில் சிறிதும் அன்புகுன்றாச் சிறுவன் போர்க்கென்று புறப்பட்டமையின் ஆசைமிகுதியால் தரிசனைக்கு வந்திருக்கிறான். அடிகள் தமது தருமவரம்பு கோணாது உதவக்கூடிய அளவு அவனுக்குக் கடாட்சிக்கிர்" என்று வணங்கினான் அப்பொழுது அறவாழியந்தணராகும் அப்பரந்தட்சயனார் அரசனுக்கு இனி நடக்கும்அமரில் வெற்றியின்மையை விளக்கும் நிமித்தம் அலர்மாதுறையும் தனது அழகியமார்பில் அணிந்து விளங்கும் துளவத் தாமத்தைக் கருகச்செய்து சுடுநாற்றமுண்டாக்கினார். பெருமானிடம் துர்நிமித்தத்தைக் காணலும் தேசிங்கின் மனது ஒருங்கே கொதிப்பெடுத்தது. ஆயினும் அதனை ஒருவாறடக்கிக்கொண்டு பின்வருமாறு புகறலாயினான் அண்ணால் போர்க்கெனப் புறப்பட்டபின் பகைவரைக்கொல்லுதல் அல்லது தான் மடிதல் இவ்விரண்டிலொன்று கண்டாலன்றி என் போன்றார் முன் வைத்தகாலைத் திருப்புதல் உரித்தன்று. மேலும் சாவைப்பற்றி யான் எங்ஙனம அஞ்சுவது உடலோ நீர் மீதெழுத்து. என்றும் இறத்தல் நிச்சயம். உண்மை இப்படியாக, புகழ் எய்துவதற்குப்பதில் இகழெய்தி மரித்தல் எக்காரணம் கொண்டு? அளியன் கோரிய வரமாவது போரில் எனக்குத் துணை செய்யவேண்டுமென்பதல்ல சமர்முகத்தில்; அரக்

க்கரைக்கொன்று கொன்று கையோய்ந்து இளைப்பு நீங்கவென்றல்லோ இப்பொழுது படுத்துக்கொண்டிருக்கிறீர்; இப்படிப்பட்ட தம்மை யான் கோருதற்குக் கருணையற்ற கிராதகன் அல்லேன் ; மற்று வேண்டுவதற்குக் காரணம் என்னவெனில்? ஊழ்வலியில் ஒருகால் இறக்க நேரிடின் தமது நற்றாளைமாத்திரம் அடைக்கலாலயமாய்த் தருவீர் என்பதே. இவ்வொன்றும் செயத்தக்கதாயின் செய்க ; ஒன்றை ஏற்படுத்த்தியபின்பு அதை அவ்வண்ணம் நடக்கவிடாது அழித்தற்கு ஒருகால் தமக்கு அரிதில் முடியுமேனும் மெய்யடியார்க்கு அது திருவுளச் சம்மதமன்று. தமது பொற்றாளில் அன்பு குன்றாத அறியாச் சிறுவன் இப்பொழுது போர்க்குச் செல்லுமாறு விடை கோருகின்றான் ; ஆதலின் அன்புடன் விடையளித்திர்'' என்று வலம் வந்து புரவியேறிப் போர்க்களம் நாடிச் சென்றான். யாற்றுவெள்ளத்திற்குப் பயந்து தனது வருகைக்கெதிர்நோக்கி யிருந்த படைகளைக் கண்டு துருக்கன் ஏரிக்கரையை வெட்டிச் செய்த மோசத்திற்குப் பெரிதும் மனம் புழுங்கினனாய் ஆற்றைக்கடக்கும் ஆற்றலுடையார் மாத்திரம் உடன் வருகவென்று தனது குதிரையைத் தட்டிவிட்டான். ஏற்கனவே ஆகாயத்திற்றாவி யோடும் பேராற்றல் வாய்ந்த அப்புரவிக்கு மிகவும் சிறியதாகிய அவ்வாற்றைக்கடத்தல் ஒரு பெரிதாகுமா? நிமிடத்திற் கெல்லாம் அக்கரை சேர்ந்துவிட்டது. மகமத்கானுடன் நாலைந்து குதிரை வீரர் மாத்திரம் உடன் சென்றார்கள். யாற்றைக்கடக்குஞ் சக்தியின்றிய மற்றையோர் ஆங்ஙனே நின்று விழித்திருந்தனர். தேசிங்கு ஆற்

றைக்கடந்து வந்துவிட்டது தெரிந்த ஆறுகாட்டரைசன் படைகள் அப்பொழுதே உயிரை நிராசை செய்து விட்டார்கள். துருக்கவரசன் தன்னை மாத்திரம் காத்துக்கொள்ள முயன்றானே யல்லது யுத்தத்திற்கான முயற்சியை இம்மியும் யோசித்தானில்லை. அவன் அவ்வாறாயினும் பாழ்ந்தெய்வம் வயிற்றை வைத்திருக்கும் வரையில் தளகர்த்தர்கள் விட்டொழியவகையில்லையன்றே? அம்மவோ! இதென்ன கொடுமை? தன்னுயிர் என்றால் சர்க்கரைக்கட்டி; அயலானது அக்கரையில்லை. பல சொல்லிப் பயனென்ன? படை வீரர்கள் மாத்திரம் கடுமையாய் எதிரியைத் தாக்க முன்னின்றார்கள். இங்கு உயிர்த்தோழன் மகமதுகான் என்பவன் அரசனை நிறுத்திவிட்டுத் தான் மாத்திரம் எதிரியின் படைநடுவிற் புகுந்தனனாய்க் கைவாளினால் குதிரை மேலிருந்த வண்ணமே வீச் சொன்றுக்கு ஏறக்குறையப் பத்தெட்டு வீதம் படை வீரர் சிரங்களை வெட்டித் தள்ளினான். ஆனால் அவ்வளவிற்கும் அவன் ஏறியிருந்த நீலவேணிக்குதிரை மிகவும் ஒத்தாசை செய்தது. எதிரிகளால் விடப்படும் குண்டுகளுக்கு மேலே பாய்ந்து சமயத்திற்குத் தக்க வண்ணம் வலம் இடம் மேல் கீழ் தாவுதல் சுழலுதல் முதலிய நானாவித நடைகளினாலும் தன்னைக் காத்துக் கொள்வதோடு எஜமானனையும் தப்பவைத்து வந்தது. எப்பொழுதும் கீழிருக்கும் காரியஸ்தர்களாலன்றோ அரசர்க்கு இகழும் புகழும் ஒருங்கே வந்தெய்வது. மகமதுகான் என்னும் இவ்வெற்றி வீரனை எதிரியின் படை அடங்கலும் உயிர்த்தொகையினைக்கொன்று குவிக்கும் எமனே இவ்வுருவுடன் மறைந்துவந்

தாமென்று கருதினார்களல்லது இவனும் தங்களைப் போன்ற ஒரு மனிதன் தான் என்று அற்பமும் நினைக்கவில்லை. சேனாதிபனாகிய சையது காதர் என்பவன் இவ்வொருவனைக் கொல்லவென்று எத்தனையோ நூற்றுக்கணக்கான படைகளை யனுப்பினான். தாக்கிய படைகளும் தங்களாற் கூடியவரையில் யுத்தம் செய்தே பார்த்தன. அவர்கள் குத்துவனவும் வெட்டுவனவும் எறிவனவும் தொடுப்பனவும் முதலான படைகளியாவும் கல்லின் மீது தாக்கிய பூவாளி போன்று அற்பமும் பகைவனுக்கு ஊறு செய்யாவாயின. அவ்வொற்றைக்குதிரைவீரன் தனது கைவாள் ஒன்றினைக்கொண்டே அத்தனை பெயர்களினின்றும் வரும் ஆயுதம் அனைத்தையும் தன் மீதும் குதிரையின் மீதும் படவொட்டாது துண்டம் செய்வதோடு அவர்களது சிரங்களையும் ஒருங்கே கொன்று குவித்துக்கொண்டிருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் எதிரியின் சேனை யடங்கலும் புறமிட்டன. அத்தருவாயில் தன்னை எதிர்ப்பார் யாருமின்றி அநேகம் யானைக் கூட்டங்களைத் தனித்துக்கொன்ற சிங்கமொன்று கம்பீரத்துடன் உலாவுதல் போன்று அவ்விரணக்கள மெங்கணும் சாரிகைவிட்டுப் பகையரசனை நாடிவரும் போழ்து தளகர்த்தனாகும சையது காதர் என்போன் யானை மீதில் ஓர் புறத்தில் இருப்பது கண்டு கோழிக்குஞ்சின்மீது தாவும் பருந்தென்ன அவன்மீது பாய்ந்தான். அவ்வளவு தான் தாமதம். அவ்விநாடியிலேயே அச்சேனா வீரன் வலக்கரம் அறுப்புண்டு நிலத்தில் வீழ்ந்தது. உடனேஇடக்கரத்தினால் இவனுக்குச்சலாம்செய்துபல்லைக்காட்டிப்புறங்கோடினான். அப்புறம் ஒருகடி

கையளவு காறும் இன்னம் வருவாருண்டோவென்று அங்ஙனே எதிர்பார்த்திருந்தும் ஒருவரையும் காணகி லனாய் அறுதியில் தன்னரசனையேனும் போய்க்காண லாம் என்று வெற்றிமுழக்கத்துடன் குதிரையைத்திரு ப்பினான். அச்சமயத்தில் பிணங்களுடன் பிணங்களா ய்மறைந்திருந்தபடைவீரர் இருவர் தங்கள் கரத்திலு ள்ள துப்பாக்கியினைப்பகைவன் முதுகிற்குக் குறிபார் த்துச் சுட்டனர். பின்புறத்தில் குண்டின் ஒலி செவிப் படலும் காரணம் யாதென்று அவ்வெற்றிவீரன் திரு ம்பிப்பார்த்தலும் கருணையற்றகிராதகர்களாகும் அவ் வஞ்சகர் தொடுத்தகுண்டுகள் மார்பிலொன்றும் நெற் றியிலொன்றுமாக உருவியோடின. அம்மவோ! இத ற்கென்ன செய்யலாம்; இவ்விபரீதம் பண்டைக்காலம் தொட்டு வந்துகொண்டே வருகின்றது. மாதவன் மருகனாகும் அருச்சுனகுமாரனை இவ்வண்ணம் மரி த்தானென்றால், இவனைப்பற்றிக்கூறவும்வேண்டுமா? கணத்திற்கெல்லாம் குதிரையினின்று கீழேவிழுந்த து அந்தோ! அனியாயமாய் உயிர்துறந்தனன். அத ற்குப்பின் ஆறுகாட்டரசன் படைகள் கும்புகூடிக் களித்தனர் என்பதில் என்ன ஆச்சரியம்? ஆதியில் அமுதம்பெற்ற தேவரேயாயினார். உயிர்க்குப்பயந்து காவதத்திற்கு அப்புறத்திலிருந்த துருக்கவரசனும் நிமிடத்தில் வந்து கலந்துகொண்டான். உடனே தனது மிகுந்த வீரர்களை விளித்து "நீங்களெல் லாரும் ஒருமிக்கச்சென்று குதிரையைக் கைப்பற் றுதிர்" என்றான் பரிமாவைப் பற்றுதலிலாவது வெற்றியடையக்கூடாதா; அந்தோ! சொல்லப்புகின் வெட்கக்கேடுதான். பின்புறம்குறிவைத்துச்சுடும்இவ்

வெற்றிவீரர் முன்சென்று குதிரையைப்பற்றுவதெங்ஙனம்? சாத்தியப்பட்டவரையில் முயன்றார்களேனும் அது நினையும் அநுகூலிக்கவில்லை. அவ்வெழிற்பரிதனது தலைவன் இறந்ததற்குக் கண்ணீர்வடித்துக்கொண்டிருந்தபோதேனும் தன்னைப் பகைவர் பற்றுவதற்கு அற்பமும் இடங்கொடுக்கவில்லை. வாலினாலும காலினாலும் அனைவரையும் துவைத்து நடுங்கச் செய்தது நிமிடத்திற்கெல்லாம் தேசிங்குமன்னன் முன்னடைந்து கண்ணீர் வடிக்கத்தொடங்கியது. தனித்துவரும் குதிரையைக்கண்டதும் தேசிங்கின் மனது பகீரென்றயது. (அதாவது) அவனுக்குப் பாதிஉயிர் அப்பொழுதே போயிற்றென்று சொல்லலாம். உடனே அத்துரகத்தை நோக்கி உன்றலைவன் இறந்தவிடத்தைக்காண்பிப்பாய் என்னலும் அறிவு நிறைந்த அத்துரகம் அவ்வண்ணமே மகமதுகான் இறந்தவிடத்தைக்காண்பித்தது. தேசிங்குமன்னன் தனது ஆருயிர் நண்பன் அந்தஸ்தானத்தைக்கண்டான்; அழுதான்; தொழுதான்; எழுந்தான்; விழுந்தான்; ஓடினான், வாடினான், என் செய்துமென்ன? 'மாண்டார் வருவரோ'? அருகினில் பெரியகுழியொன்று கெல்லச்செய்து அதில் உயிர்ப்பாங்கனைக் கிடத்தியதும் நன்றிமறவாத அக்குதிரை தானும் அக்குழியில் விழுந்து மாய்வதற்காகக் கால்கள் நான்கையும் மடக்கிக்கொண்டு கீழேவிழுந்துவிட்டது. வியக்கத்தகுந்ததாகிய குதிரையின் செய்கையைத் தேசிங்குவீரன் கண்டான். உடனே அதனை நோக்கி உன் செய்கை இதுவாயின் அங்ஙனேயாக என்று அதனையும் வெட்டுவித்து உயிர்ப்பாங்கனுடன் கூடவே அடக்கம்செய்து அவன் நற்கதியடையுமாறு

கடவுளைத் துதித்துத் திரும்பினான். அறிவில்லாததாகிய குதிரையே எஜமானனுடன் இறக்கவேண்டுமென்று செய்நன்றியறிதலைக் கடைப்பிடிக்குமாயின் மனிதராகிய நாம் எந்நிலையில் இருக்கவேண்டுமென்பதை ஒவ்வொருவரும் யோசிக்கத் தக்கதன்றோ?

தேசிங்கு தனது ஆருயிர் நண்பனை வஞ்சனையாற்கொன்ற தீயர்களை ஒருங்கே கொன்று குவிக்கவேண்டுமென்று மனதில் தீர்மானித்தவனாய்த் தனது தெய்வப்புரவி யேறிப் பிணக்காடு குவிந்திருக்கப இரணக்களம் குறுகினான். தடுப்பாரில்லாதிருந்தும் அரசன் கட்டளைப்படிக்கு விதியின்றி எதிர்த்தாக்கிய படைகளை அடியற்றவும் முடியற்றவும் இடையற்றவும் துடையற்றவும் வாலற்றவும் தோலற்றவும் குடல்சரிந்தவும் உடல் விரிந்தவுமாக யாவற்றையும் பின்னப்படுத்தி நிமிடத்திற்கெல்லாம் நமனார்க்கு உயிர் விருந்தூட்டினான். முதலில் தாக்கிய மகமதுகானுக்கே வலசைவாங்கிய அத்துருக்கவரசன் படைகள் தேசிங்கு மன்னனை எதிர்ப்ப தெங்ஙனம்? சுருக்கிச்சொல்லின் முதலில்வந்த குதிரை வீரனுக்குத் தப்பியிருந்த சேனைகள் இவன் வெற்றிவாளுக்கு இரையாயின. செருக்களம் புகுந்த ஒருமுகூர்த்தத்திற்கெல்லாம பிணமலைகளும் இரத்தச்சேறுமே எங்கணும பரந்தன. தனது படைமுழுவதும் ஒருங்கே இறந்த மானத்திற்காகவேனும் ஆறுகாட்டரசன் தேசிங்கினை எதிர்த்துப்போர் செய்ய வந்தானில்லை. தன்னுயிரைச் சருக்கரைக் கட்டியாக நினைத்து உடற்காப்பாளர் சிலருடன் எங்கேயோ ஒருமூலையில் ஒளித்து இத்தகைய பிரமாதத்திற்குங்காரணமாயிருந்ததனது மூடத்தனத்தைத் தொ

ந்து கொண்டிருந்தான். ஆயின் அவனும் சாமானிய மனிதனன்று. எண்ணிறந்த சிறும்பதிகளைத் தகைந்து வெற்றியடைந்திருக்கிறான். என்றாலும் தேசிங்கின் முன் அவையெல்லாம் சூரியன் முன் மின்மினியாயின. இவற்றுடன் தன்னை மாத்திரமேனும் பாதுகாத்துப் பட்டினத்தில் ஒப்புவிக்குமாறு வழிபடுகடவுளைத் துதிப்பதில் நிமிடமும் மறந்திலன். போர்க்களமெங்கணும் அற்பத் துரும்பேனும் விடானாய்ப் பகைவனைக் கண்டு பிடிக்கவென்று தேசிங்கு மன்னவன் தேடிப்பார்த்தான். ஓடியொளிக்கின்றவனைத் தேடிப்பிடிப்பதெங்ஙனம்? அ[illegible]லவென்று ஒருகால் காணினும் அத்தகையானைக் கொல்லுதல் கடும்பாவமன்றோ? மேலும் தருமத்திற்கு வேலிபோலாகும் தேசிங்குமன்னவனா அத்தகைய தீங்கிழைப்பவன்? சிவசிவா! மறந்தும் நினைக்கமாட்டானே; அறுதியில் எதிர்ப்பாரில்லாது போகவே தன்னையே வெறுத்தானாய் "சீ! இத்தகைய யுத்தவீரனென்று தெரிந்தால் முன்னமே வாராதிருக்கலாமன்றோ? தினைத்துணையும் வீரமின்றிய பெண் போல் வாளுடன் சண்டையிடுவதற்கு வெளிக்கிளம்பிய நம்மூடத்தனத்தைஎன்னென்றுமுறையிடுவது? என்று தனக்குத்தானே சிந்தித்து ஒன்றும் தோன்றாது நிற்கும் சமயத்தில் தன் குலத்தினனாகும் தன் சிங்கு என்னும அரசகுமாரன் குதிரையேறி எதிர் வந்து வந்தனைசெய்தான். அதற்குத் தேசிங்கு அவனை நோக்கி எங்கிருந்து வருகின்றனை என்னலும்,

**தன்சிங்கு:**—தேவனூரிலிருந்து.

**தேசிங்கு:**—ஆறுகாட்டரசனை எங்கேனும் கண்டதுண்டா?

தன்சிங்கு:—ஆம்; உண்டு; இதற்குச் சற்றேறக் குறைய கூப்பாடு தூரத்தில்.

தேசிங்கு:—இஃதுண்மை?

தன்சிங்கு:— சமூகத்தில் பொய்சொல்லத் துணிவான் யாவன்?

தேசிங்கு:—ஆயின் அவனைக்கண்டு வருகின்றேன்.

தன்சிங்கு:— போர்க்குப் பயந்து போகின்றவனையா?

தேசிங்கு:—தகுந்த துணையாவது கூட்டியனுப்ப வேண்டுமன்றோ?

தன்சிங்கு:—ஆயின் சித்தம்; என்றதும் உடனே தனது தெய்வப்புரவியைத் தட்டிவிட்டான்.

## அதிகாரம் 12

ஆறுகாட்டரசன் திரும்பவும் தேசிங்கு தன்மீது இரண்டாமுறை சண்டைக்கு வருவதைக்கேட்டதும் இருந்த கொஞ்சம் தைரியமும் பறந்துபோய்விட்டது. ஆயினும் அவனைச்சுற்றிச் சேற்றுப்பட்டு முதலிய பட்டினத்தின் ஜமீன்தார் யாவரும் தாமரைமலரில் கர்ணிகையைச்சுற்றியிருக்கும் தளங்களைப்போல் காத்திருந்தார்கள். மகமதுகான் தேசிங்கு இவ்விருவராலும் இறந்த சேனைகளினும் இப்பொழுது இருக்கும் படைகளின் தொகை இருமடங்கு அதிகமென்றேசொல்லலாம்; என்றாலும், அவ்வரசனுக்கு மாத்திரம் தைரியமென்பது கொஞ்சமும் இல்லை. 'தனக்குள்ளது உலகத்திற்குண்டு' என்னும் பழமொழியை அவன் கணப்பொழுதேனும் நினையாதொழியான். ஏனெனில், எத்தனையாயிரம் பெயர் இருக்கினும் சமயத்தில் தன்

கள் தங்களைத் தான் காத்துக்கொள்வார்கள் என்பது அவன்கொள்கையாதலால். சுருக்கிச்சொல்லின், தன்னிடமிருக்கும் ஜமீன்தார்களில் ஏற்றம் வாய்ந்த நால்வரை விளித்து நீங்கள் இக்கணமே தேசிங்கினிடம் சென்று சமாதானம் பேசிவாருங்கள்-எப்படியெனில் நமக்குச் செலுத்தவேண்டிய பகுதியை இனும் செய்வதுடன் நம் கீழ் உள்ளனவற்றில் இருபது ஜமீன்களையும் அவன் ஆதீனமாக்குவதாகவும். ஏனெனில் அனியாயமாய் ஒருங்கே எல்லாப்படைகளும் இறக்க நேரிடுகின்றன. மேலும் யுத்தமென்றால் அவற்றுடனும் ஒழியா. நம்போன்றோருக்கும் ஒருகால் ஆபத்து நேரிடக்கூடும்" என்றான். அங்கிருந்தார் யாவரும் அரசனுக்கும் இவ்வித எண்ணம் பிறக்கப்போகின்றதா? என்று எதிர்பார்த்திருந்தார்களாகையால் அதற்கெனக்குறிக்கப்பட்ட நால்வரும் தடையின்றிப் புறப்பட்டனர். இங்கே தேசிங்குமன்னவன் எவ்விதமேனும் துருக்கவரசனைக்காணவேண்டும் என்னும் கருத்துடன் தெய்வப்புரவியின்மீது வந்து கொண்டிருக்கையில் சமாதானம் பேசவந்தவர் எதிரிற் சந்தித்தார்கள். மிகுந்த சினத்துடன் அவர்களை நோக்கி, நீங்களியாவர்? என்றான்.

ஜமீன்தார்:—ஆறுகாட்டரசன் அனுப்பவந்தவர்கள்,

அரசன்:—என்ன செய்தி?

ஜமீன்:—தாங்கள் சண்டையை ஒழிக்கவேண்டும்.

அரசன்:—உங்களரசன் ஒழிந்தால் சண்டையும் ஒழிந்துவிடுகிறது.

ஜமீன் :—அது இருதிறத்தாருக்கும் நஷ்டம ன்றோ ?

அரசன்:—நஷ்டத்திற்கு அவன்தானே வழிவை த்துக்கொண்டது.

ஜமீன்:—அரசர்கள் சண்டை முனையில் சமாதா னம் கொள்வது இயல்புதான்.

அரசன்:—அது இருதிறத்தாரும் ஒப்பியன்றோ செய்யவேண்டும்.

ஜமீன் :—அதற்காகவன்றே தங்களை வேண்டு வது.

அரசன்:—சமாதானமெப்படி ?

ஜமீன்:—தம்மிடம் திறைபெறும் நிமித்தம் போர் மூண்டது

அரசன்:—அதற்காக ?

ஜமீன்:—இப்பொழுது அது வேண்டாம்.

அரசன்:—சண்டைக்கு முந்தியாயின் இது நியா யம்தான். இப்பொழுது நேரிட்டிருக்கும் நஷ்டங்கள்?

ஜமீன்:—படை முதலிய யாவும்எங்களுக்கன்றோ நஷ்டம் ? தமக்கொன்றுமில்லையன்றே ;

அரசன்:—இல்லையா ? எனதுஉயிருக்குயிராகிய மகமதுகான் மரித்த பின்பும் சமாதானமா ?

ஜமீன்:—எங்களில் இறந்தவர்கள் ஒன்ரு ? இர ண்டா ? அம்மவோ ! ஏட்டிலும் அடங்காதே.

அரசன்:—அதை யோசிப்பவர் நீங்களே யன் ருே ?

ஜமீன்:—யோசித்துதான் சமாதானம் செய்வது,

அரசன்:—எனக்குப்பிடிக்கவில்லை.

ஜமீன்:—நமது உயிர்ப்பாங்கன் ஒருவன் இறந்ததனிமித்தம் இருபது ஜமீன்களைச் சொந்தமாக்குகிறோம்.

அரசன்:—இருக்கலாம், உங்கள் அரசனை எனக்கு ஊழியம் செய்யினும் இறந்த அவனை மீட்டும் காணமுடியுமா?

ஜமீன்:—எங்கள் அரசன் இறந்தபின்பு அவன் வருவான் போலும்;

அரசன்;—வாராவிடினும் அவன் இறப்பதற்குக் காரணமாயிருந்த அரசனைக்கொன்று பழிக்குப்பழி வாங்குதலன்றோ சத்தவீரர்கடன்?

ஜமீன்:—இல்லை, சற்று யோசித்துப்பாருங்கள்.

அரசன்:—முந்தியே யோசித்தாயிற்று. உங்கள் அரசனைக் கொல்லவேண்டுமென்று; அல்லது அவனால் இறப்பதென்று; இவ்விரண்டுதான் முடிவு. போய்ச்சொல்லுகிர்.

ஜமீன்:—அவ்விதம் சொல்வது நன்றாயிருக்கவில்லை; கடவுள் அருள்முகம் நோக்கியேனும் சற்று யோசியுங்கள்.

அரசன்:—இனி இதைப்பற்றிப்பேச எனக்கிஷ்டமில்லை. செல்லுகிர்.

ஜமீன்:—ஆயின் முடிவு என்னை?

அரசன்:—அதுதான் முந்தியே சொல்லியாயிற்றே.

ஜமீன்:—தமக்கு இத்துணை வருத்தம் கொடுத்தது பற்றி மன்னிக்கவேண்டுகிறோம்.

அரசன்:—நல்லது, என்றதும் அவர்கள் திரும்பி விட்டார்கள். இரண்டு நாழிகைக்கெல்லாம் ஆறுநாட்டரசன் தன்னிடமிருக்கும் யுத்தவீரர் யாவரையும் தேசிங்கின்மீது செலுத்தினான். இதற்குள் ஆற்றுவெள்ளமும் சற்றுக்குறைந்தது. தாணிசிங்குமுதலியவீரர்கள் யாவரும் வந்து தங்கள் அரசனைக் கலந்துகொண்டார்கள். முதலிற்றாக்கியபடைகளினும் இப்பொழுது எதிர்த்தவர்கள் மிகுந்தசூரர்களே. ஆதலால் சண்டையும்மிகுந்த மும்முரமாகவே நடந்தது. என்றாலும், எதிரியின்படைகள் மாண்டனவன்றித் தேசிங்கிற்கும அவனுக்குத்துணைவந்த பன்னிரண்டு குதிரைவீரர்களுக்கும்இம்மியும் சேதமில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் இரணக்களமெங்கணும் பிணக்காடாய்க் குவிந்தன. இத்ததியில் தன்பகையரசனைக் காணவென்று தேசிங்கு குதிரையைச்செலுத்தலும் அதுவியூகத்தினைப்பிளந்துகொண்டு துருக்கவரசன் ஏறியிருந்த பட்டத்து யானைமீது தன்முன்னங்காலிரண்டையும் தூக்கிவைத்தது. இதற்குள் அவ்வரசன் யாதுநினைந்தோ தனது உடை முதலிய பலவற்றையும் களைந்து தன்போன்றான் ஒருவனுக்கு அணிவித்து அவனை யானைமீதிருத்தித் தான் அதன் வயிற்றிற் கட்டித்தொங்கவிட்டிருக்கும் ஊஞ்சல் ஒன்றில் உடற்காப்பாளர் இருவருடன் இருந்தான். 'வெளுத்ததெல்லாம் பால் கருத்ததெல்லாம்தண்ணீர்' என்னும் இயற்கையையுடைய தேசிங்கு அத்துருக்கவரசன் ஆள்மாறாட்டத்தைக் கண்டுபிடிப்பதெங்ஙனம்? யானைமீது இருப்போனையே தன் எதிரி என்றுகருதி அவனுடன் பேசவேண்டுமென்னும் ஆசையுள்ளவனாய் அவன் முகத்தைத் தெரிய

வொட்டாது மறைந்திருந்த யானைப்பாகனை வெட்டித்தள்ளினான். அவ்வளவுதான் தாமதம். பாகன்றலை கீழே வீழ்ந்ததும் போலியரசனுக்குக் கைகால்கள் நடுக்கமெடுத்தன; வாய்குழறிக்கொண்டே நான் அரசனல்லேன்; நான் அரசனல்லேன்; என்று கூவிச்சலாம் செய்தான். இதற்குள், ஊஞ்சலிலிருந்த மெய்யரசன் தன்னிடமிருந்த வீரர்களுக்குத் தெய்வப்புரவியின் கால்களை வெட்டுமாறு கட்டளைபுரிந்தான். அவ்விருவரும் மிகுந்த தைரியத்துடன் அதன் இரண்டு கால்களையும் வெட்டித் தள்ளினார்கள். பொற்புரவி உடனே கீழ்விழுந்துவிட்டது. அசதியில் நடந்த இம் மோசத்திற்குச் சிறிதும் வருந்தாத அவ்வெற்றிவீரன் மிகுந்த வருத்தத்துடன் புரண்டு கொண்டிருக்கும் தன் குதிரையை இரண்டாய்வெட்டிக் கடவுளைத் துதித்துத் தனது இரண்டுகரத்திலும் வாளை உருவிப்பிடித்துக்கொண்டு கீழிருந்தே யுத்தம்செய்யத்தொடங்கினான். குதிரை இறந்ததைக்கண்டதும ஒளிந்திருந்த படைகளியாவும் ஒருங்கே வந்து திரண்டன. அனேகம் சண்டையில கைதேர்ந்த யுத்தவீரர்களும் இம்முறை வெற்றியடையலாம் என்று உக்கிரமாய் எதிர்த்தாக்கினார்கள். அம்மவோ! இம்மூன்றாம்விசையிலும் அவர்கள் ஜெயித்தபாடில்லை. மேலும் இப்பொழுது இறந்தவர்கள் எல்லாம் நல்ல யுத்தவீரர்களும் ஜமீன்தாரர்களுமே. அவர்களும் ஒருவர் இருவரல்லர்; எண்ணிறந்தோர்; எங்கு நோக்கினும் பிணக்காடுதான்; உதிரநீர்பெருக்கெடுத்தோடியது. அப்பொழுதிருந்த அவ்விரணக்களத்தைவிவரிக்கச் சேடனுக்கும் தரமன்று. சுருக்கிச் சொல்லின், அன்று பொழுதுபட ஐந்து நாழிகைக் கெ

லெலாம் துருக்கவாசன படைகளில் முக்கால்பாகமும் இறந்தன. மிகுந்த கால்பகுதியும் தேசிங்கினைக் கண்டு பறந்தன. சற்றுநேரம் இரணக்களமெங்கணும் சாரி கைவிட்டுத் திரிந்தும் எதிர்ப்பார் ஒருவரையும் காணகி லன். என்செய்வான்; அறுதியில் தனக்குள் அடடா இதென்ன விந்தை! அரசமனைவரும் பெரும்படைத்துச் சமருக்குப் புறப்பட்டும் முனைவைத்தகாலைப் பின் வைத்து ஓடியொளிக்கும் வீரனும் ஒருவன் உள்ளன் றோ? அந்தோ! தன் நிமித்தம் தன்னை யெதிர்ப்பாருண் டோ? இதைக்கேளும் சவனிப்பாரில்லை. தன் பிராண ன்மாத்திரம் என்ன திகைப்பு; நல்லவீரம்! நல்லவீரம்! [1]வாளாவிருந்ததனை வெளியில் விடுத்துவிட்டு இப்பொ ழுது மேலைப் புகழைப் பதுங்கிக்கொள்கிறான்; சரி அவ னைப்பற்றி நமக்கென்ன? நாம் வந்தவேலை முடிந்தது நினைவேறியது என்றாலும், நம்பிய பலமெல்லா செல்வந்தருக்குமாகக் கரமபண்ணி ஒரு பயனுமில்லை. என் னில் உயிருக்குயிரான மகா துங்கனும் இறந்தான். நமது நிதுக்காலும் வெற்றியளிக்க வெய்யவாய்வியும் இறந்தது. பலவற்றுள் ஒப்பற்ற சுகியாகிய இவ்விரண்டி னையும் ஒருங்கே துறந்து துருக்கர்களை வெட்டிப் பலி னுயிர்ப்படி இன்னும் அதிகமாக இருபது ஜீவன்களை யும் வைத்துக்கொண்டு எத்தனை நாள் ஆளச்செலுத் தப்போகிறோம்! மூவுலகினையும் தனி வழிப்படுத்தி ஒருகுடையில் ஆண்ட அரிச்சந்திரன் முதலிய சக்கிர வர்த்திகளெல்லாம் ஐயகோ! உயிர் நீங்கினமன்றல நாம் மாத்திரம் இறவாது வாழப்போகிறோமா? இர ணக்களமெங்கும் சுற்றிவரினும் எதிர்ப்பார் ஒருவனை யுங்காணகிலம். மேலும் ஒருவனால் இறக்கப் படுவதை

---

1 சும்மா

க்காட்டிலும் நாமேசுதாவில் உயிர்த்துறத்தல் நன்மை யுடைத்து" என்று தன் வழிபடு கடவுளாகிய அரங்க நாதனை மனதில் நினைத்து முத்தொழிற்றலைவ! நமது பொற்றாளில் இம்மியும் அன்புகுன்றாத இளஞ்சிறு வன் இப்பொழுது நம்மை நாடிக்காண விரை ந்துவருகிறான்! அவன் இதுகாறும் மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களினாலும் நமது தருமவெல்லை யைக்கடவாதிருப்பானாயின் மெய்த்தொண்டர்களுக் காக எடுக்கப்படும் நமது திப்பியாக்கரத்தினால் அவனை ச்சீக்கிரம் அணைத்தருள்க. நமது அழியாத நாமம் உல கில் என்றும் நின்று நிலவுக." என்று தனது வெற்றி வாளினாலேயே குத்திக்கொண்டிறந்தான். அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!! தருமத்திற்கு எல்லையாகும் இவ்விளவரசன் உயிர்ப்பாங்கனையும் குதிரையையும் நினைந்து உயிர் துறந்தானென்றால் இவன் நீதி இன்ன தன்மைத்தென்று மற்றும் சொல்லிடத்தகுந்ததென்ன? இதைப்படிப்பவர்களே தமது அறிவால் நிதானித்துக் கொள்ளலாம்; இது நிற்க, நிமிடத்திற்கெல்லாம் தே சிங்கு மன்னன் இறந்த செய்தி எங்கணும் பரவிற்று. பகைவன் வகுத்த வியூகத்திற் புகுந்து மூலைக்கொருவ ராய் யுத்தஞ் செய்துகொண்டிருந்த தாணிசிங்கு முத லியோர் தங்களரசன் இறந்தவிடத்தில் வந்து குழுமி னார். என்றாலும், அவர்கள் துக்கத்தினால் கண்ணீரும் வடித்தாரில்லை; வாய்விட்டுக்கதறியும் அழுதாரில்லை; தம்மரசனது களேபரத்தை ஐந்தாறு நிமிடங்காறும் வெறிக்க வெறிக்கப்பார்த்ததும் தங்கள் தங்கள் கரத் திலுள்ள வாளாயுதத்தினால் யாவரும் ஒருங்கே குத்து ண்டுமாய்ந்தனர். இவ்விபரீதத்தினைக்கேட்ட அத்துரு க்கவரசனே ஓடிவந்து கதறிக்கதறி அழுதானென்றால்

அப்புரவாசிகள் துன்புற்றனென்பது ஒரு ஆச்சரியமாகுமா? சரித்திரத்தைப் படிக்கும் நமக்கே துயரம் அதிகரித்து இரக்கமுண்டாகின்றது

இதுவன்றே இராஜபத்தியின் இயல்பு. அத்தண்டிற்குள்இறந்தவர்போக மிருந்தவர்கள் பிராணபயம் மாத்திரம் நீங்கினார்களன்றி அவன் முடிவினிமித்தம் இயற்கையாய் உண்டாகும் அழுகைநீங்கினாரில்லை. இரண்டொருதிமிடங்களில் இச்செய்தி சஞ்சீவிபுரத்தின் காதும்பரந்தது. உடனே அரண்மனை முழுவதும் அழுகைக்குரல் கிளம்பிற்று. காதலன் மரித்தது சந்திரமுகிக்குத் தெரிந்ததும் அவள் பேசியமாற்றம் இரண்டொன்றுதான். (அதாவது) ஆ! எனது உயிரே!! நீ இறந்தனை என்று கேட்டபின் அடியாள் இங்கு யாவருக்காக இன்னம் இருக்கவேண்டும். எனது உடலம் உனக்காக வன்றோ இதுகாறும் போஷிக்கப்பட்டு வந்தது? நீ இல்லையென்றால அது எதற்கு? அல்லவென்று இருந்துதான் யாது பயன்? ஆதலின் இதோ நானும் வந்துவிட்டேன். அங்கேனும் உனது இணையின்றிய திருவுருவத்தைச் சம்பூரணமாய்ப் பார்க்ககூடுமன்றோ? இனிக்கணமும தரியேன்; தரியேன்; என்பதேயாம். அறுதியில் ஆ உயிரே!! உயிரே!!! உயிரே!!!! என்று மும்முறை புகன்றதும் அடுத்த நிமிடத்திற்கெல்லாம் இருந்த ஆதனத்தின்மீது பிணமாயினள். ஆ! என்ன அன்பு!! என்ன அன்பு!!! இவ்வற்புதத்துடன் இரணக்களத்தில் உயிர் நீங்கிய தாரணிசிங்கு முதலியோர் தமமனைவிமார்களும் உடனே தீயிற் குதித்துத் தத்தம் கணவர்சென்ற நெறிச்சென்றனர். தமது ஆருயிர்த்தலைவர் இறந்தனர் என்றுமே.

டமாத்திரத்தில் அன்பின் மேலீட்டினால் இன்னுயிர்த் துறந்த மழை வளம் தரும் இத்திப்பியக் கற்புக்கரசிகளைப்போன்றார்க்குக்கருணைக்கடலாகும் முத்தொழிற்கடவுள் அருண்மழை பொழிவாரென்பதில் வியப்பில்லையன்றே; விரும்பிமணம்புரிந்தகணவர்க்கீழ்வாழும் கட்டழிகியர்காள்! அரசர்க்கீழ் அடங்கிவரும் அறிவினர்காள்; நன்னட்புப் பொருந்திய நேயமாந்தர்காள்; நீங்கள் முறையே சந்திரமுகி முதலிய கற்பரசிகளையும் தரணிசிங்கு முதலிய சுத்தவீரர்களையும் மன்னுயிரனைத்தையும் தன்னுயிரெனக் கருதும் தேசிங்கு மன்னனையும் கவனித்து நன்னிலைமையிற் பிசகாது அடங்கி வாழ்ந்து வருவீர்களாக.

முற்றிற்று.

12605

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY